ISSN 2792-1050

# வெண்ணிலா

காலாண்டுச் சஞ்சிகை
Quarterly Magazine

වෙණ්ණිලා
VENNILA

இணைய தளம்
www.vennilamanjari.com

பன்னூலாசிரியர்
தியத்தலாவ எச். எப். ரிஸ்னா



ஐந்தாவது ஆண்டு
19

இதழ்: 19. ஒக்டோபர் - டிசம்பர் 2025. ரூபா 150/=

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



TYPESETTING

GRAPHIC DESIGNING

PHOTOCOPY

OFFSET PRINTING

DIGITAL PRINTING

LAMINATING

BINDING

&

MUCH MORE SERVICES

at Cheapest rates.

Jesa Grafix

FINEST CREATIVE & PRINTING SOLUTION

PHOTOCOPY | PRINT | SCAN

075 656 9393

No. 281, Main Street, Maruthamunai

**jesagrafix24@gmail.com**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலாண்டுச் சஞ்சிகை **வெண்ணிலா** **ISSN 2792-1050**

**ஐந்தாவது ஆண்டு - இதழ்: 19 ஒக்டோபர் - டிசம்பர் 2025.**

*இணைய தளம்:* www.vennilamanjari.com

வாசிப்பை மேம்படுத்துவதும், புதிய பல கவிஞர்களை உருவாக்குவதுமே எமது நோக்கம்.

**ஆசிரியர்:**
**கவிஞர் எஸ் ஏ கப்பார்**
kavignarsagaffar@gmail.com

**முகவரி:**
378/2, ஸம் ஸம் வீதி,
மருதமுனை - 03 # 32314
இலங்கை.

**மின்னஞ்சல்:**
vennilakavithaimanjari@gmail.com

**தொடர்பு** : 077 6968 697
**வட்ஸ்அப்** : 077 6968 671

**தகவல் தொழிநுட்பம்:**
ஏ. ஜி. அப்ரான் முஹம்மத்
(Associate Software Engineer)

**அட்டை, பக்க வடிவமைப்பு:**
எஸ். ஏ. அப்துல் கப்பார் DICP, DIHE & DIEC.
abdulgaffar9@gmail.com

**அச்சு:**
எஸ். ஏ. ஜெஸீம்
ஜெஸா கிரபிக்ஸ், மருதமுனை.

**வெளியீடு:**
டிஜிட்டல் இன்ஃபர்மேஷன் சிஸ்டம்
தொடர்பு: 07 5858 5656

**படங்கள்:**
நன்றி - கூகிள்.

வெண்ணிலா சஞ்சிகையில் இடம்பெறும் அனைத்து ஆக்கங்களின் கருத்துகளுக்கும் அவற்றை எழுதிய ஆசிரியர்களே பொறுப்புடையவர்கள். புனைபெயரில் எழுதுபவர்கள் தமது சொந்தப் பெயர், தொலைபேசி எண், முகவரி ஆகியவற்றை அறியத்தரல் வேண்டும். பிரசுரத்திற்குத் தேர்வாகும் படைப்புகளைச் செவ்வைப்படுத்த ஆசிரியருக்கு உரிமையுண்டு. படைப்புகள் கணினியில் அல்லது கைத்தொலைபேசியில் தட்டச்சு செய்யப்பட்டு மின்னஞ்சல் அல்லது வட்ஸ்அப் மூலமாக அனுப்பவேண்டும்.

வெண்ணிலா சந்தா விபரம்:
தனியிதழ் **150/=** தபாற்செலவு **100/=**
ஆண்டுச் சந்தா **1000/=**
(தபாற்செலவு உட்பட)

வங்கி மூலம் பணம் செலுத்துவோர்
S A ABDUL GAFFAR
Bank of Ceylon, Kalmunai
A/C - 6106068
என்ற இலக்கத்திற்கு பணத்தை வரவிலிட்டு பற்றுச் சீட்டின் பிரதியை
ஆசிரியர் - வெண்ணிலா
378/2, ஸம் ஸம் வீதி,
மருதமுனை - 03 # 32314
என்ற முகவரிக்கு அல்லது
vennilakavithaimanjari@gmail.com
என்ற மின்னஞ்சலுக்கு அல்லது
0776968671 என்ற வட்ஸ்அப் இலக்கத்திற்கு அனுப்பிவைக்கவும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளே


ஆசிரியரிடமிருந்து: (3)
- ஆதங்கம்...

அட்டைப்படக் கட்டுரை: (4-15)
- பன்னூலாசிரியர் தியத்தலாவ
- எச். எப். றிஸ்னா (1988)

சிறப்புப் பார்வை: (16-20)
- வெண்ணிலா முகம் பாடுது...
- கலாபூஷணம் எம். எம். மன்ஸுர்

கட்டுரைகள்: (21, 52, 70)
- புரத உணவின் ஆரோக்கியம் (மருத்துவக் கட்டுரை)
- Dr. ஜலீலா முஸம்மில்
- ஆசியாவின் வியக்கவைக்கும் ஹைபர் மார்கட் லூலூ
- ஐ. ஏ. சத்தார்
- மனித வாழ்வியலில் ஏன் உளவியல் அவசியம்?
- எச். டீ. எச். பஹ்தா

வரலாறு: (57-69)
- மருதமுனை வரலாறும் வாழ்வியலும் - தொடர்: 2 மருதமுனையில் கொடியேற்று விழா (சென்ற இதழ் தொடர்ச்சி)
- பன்னூலாசிரியர் ஏ.ஆர்.ஏ. சத்தார்

தொடர்கதை: தொடர் 2 (25-31)
- நீ வாசிக்க மறந்த வரிகள் நான்!
- ஏ. எம். கஸ்புள்ளா

சிறுகதைகள்: (32, 44)
- வனஜாவின் நிழல் வதனா!
- செம்மைத்துளியான்
- கடமையில் காணும் இன்பம்
- ஜெனீரா தௌபீக்

நூல் நயம்: (48, 55)
- பழனத்தில் விளைந்த பவளங்கள்
- ஏ.எஸ். சித்தி மிஸ்ரியா அமீன்
- பிழையழகு - அழகேதான்
- ஏ. ஆர் அப்துல் ரசூல்

மொழிபெயர்ப்புக் கவிதை: (74)
- என் மகளாய் இருந்து விடு
- மாயா ஆன்ஜலோ.

சிங்கள மூலம்:
- பராக்கிரம கொடித்துவக்கு.

தமிழ் வடிவம்:
- மாவனல்லை எம். எம். மன்ஸுர்.

தடம்பதித்த மூத்த கவிஞர்: (75)
- விழித்தெழு துற்பிரயோகிகள் துடைத்தெறி பெண்ணே
- சே. அப்துல் றஸாக், ஏறாவூர்.

மஞ்சரி கவிதைகள்: (76-86)
- அலெக்ஸ் பரந்தாமன்
- செய்னுலாப்தீன் நஸீரா
- கலைநெஞ்சன் சாகுல் ஜுஹைம்
- செண்பகச் சோலையாள் ஆய்ஷ்
- முபீதா அமீன்
- வெலிகம ரிம்ஸா முஹம்மத்
- சுஅததுல் ஹஸீனா ஆதம்பாவா
- நழீம் ஹனீபா, ஒலுவில்
- ருகையா ரஸீன்
- அ. ந. கலீலுர் றகுமான்

உங்களிடமிருந்து: (87-88)
- கவிஞர் அஷ்ரப் சிஹாப்தீன்.
- கவிஞர் றிஸ்வின் காதர்.
- எழுத்தாளர் இப்றாஹிம் ஏ.சத்தார்.
- அல்-ஹாஜ் எச். எல். நஜிமுத்தீன் ஓய்வுநிலை முகாமையாளர், இலங்கை வங்கி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆதங்கம்...

வெண்ணிலா இதழ்கள் கையிற் கிடைத்ததும் உடனே தனது முக நூலிற் பதிவொன்றை இட்டு, தனது காத்திரமான கருத்துகளைக் கூறி மகிழ்வது அவரது வழக்கம். அதே போல்தான் சென்ற வெண்ணிலா இதழ்: 18 தனது கையிற் கிடைத்ததும் முகநூலிற் பதிவொன்றை இட்டு தனது ஆதங்கத்தை வெளிப்படுத்தியிருந்தார், மூத்த எழுத்தாளரும் கவிஞரும் பன்னூலாசிரியருமான அஷ்ரப் சிஹாப்தீன் அவர்கள். சஞ்சிகையொன்றைத் தொடர்ந்து வெளிக்கொணர்வதில் உள்ள சிரமங்களையும் கஷ்டங்களையும் அனுபவித்தவர். அவ்வாறானதொரு நிலை வெண்ணிலாவுக்கு ஏற்பட்டுவிடக்கூடாதென்ற நன்நோக்கில் அப் பதிவை அக்கறையுடன் இட்டிருந்தார்.

**நண்பர் அஷ்ரப் சிஹாப்தீன் அவர்களுக்கு மனமார்ந்த நன்றிகள்.**

அவரது ஆதங்கம் எல்லாம் வெண்ணிலாவில் குறிப்பிட்ட ஒரு சிலரே தொடர்ந்து எழுதுகிறார்கள் என்பதும் நல்ல படைப்பாளிகளை அணுகி அவர்களது ஆக்கங்களைக் கேட்டுப் பெற்று, பிரசுரிக்க வேண்டும் என்பதும்தான். இதில் மாற்றுக் கருத்துகளுக்கு இடமில்லை. உண்மைதான்.

ஒவ்வொரு இதழ் தயாரிக்கும் போதும் எத்தனையோ படைப்பாளிகளை நேரடியாகவோ தொலைபேசி மூலமாகவோ தொடர்புகொண்டு, சுமார் 75 நாள்கள் அவகாசம் வழங்கி, ஆக்கங்களைத் தந்துதவுமாறு கேட்பது வழக்கம். சஞ்சிகை அச்சுக்குப் போவதற்கு இரண்டு நாள்கள் முன்புவரை காத்திருப்போம். “நாளை அனுப்புகிறேன், இன்று அனுப்புகிறேன்” என்பார்கள். அனுப்பமாட்டார்கள். மீண்டும் தொடர்புகொண்டால் “மன்னிக்கவும். அடுத்த இதழுக்கு அனுப்பிவைக்கிறேன்” என்பார்கள். அடுத்த இதழுக்கும் அனுப்பமாட்டார்கள். இதுதான் நிதர்சனம்.

அன்புடன்,


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பன்னூலாசிரியர்

# தியத்தலாவ எச்.எப். றிஸ்னா (1988)



எழுத்தாளர்,
கவிஞர், பாடலாசிரியர்,
கதாசிரியர்,
சிறுவர் படைப்பாளர்,
நூல் விமர்சகர்,
சஞ்சிகைத்
துணையாசிரியர்
மற்றும்
ஊடகவியலாளர்.

**வாழ்க்கைக் குறிப்பு**

ஊவா மாகாணம், பதுளை மாவட்டம், ஹப்புத்தளை தேர்தல் தொகுதியைச் சேர்ந்த எச்.எப். றிஸ்னா, ஹலால்தீன் - நஸீஹா தம்பதியினரின் சிரேஷ்ட புதல்வியாவார். இவர் கஹகொல்லை அல்பத்ரியா முஸ்லிம் மகா வித்தியாலயம், வெலிமடை முஸ்லிம் மகா வித்தியாலயம், பண்டாரவளை சேர் ராசிக் பரீட் முஸ்லிம் மகா வித்தியாலயம் ஆகியவற்றின் பழைய மாணவியாவார்.

இவர், இலங்கைக் கல்வி அமைச்சின் வெளியீட்டுப் பிரிவில் சுமார் ஆறு ஆண்டுகளாக கணினி வடிவமைப்பாளராகக் கடமையாற்றியுள்ளார். கல்வி வெளியீட்டுத் திணைக்களத்தினால் தரம் 04 மாணவர்களுக்காக வெளியிடப்பட்டுள்ள இஸ்லாம் பாடப் புத்தகத்தில் "அல்குர்ஆனின் சிறப்புகள்" (பக்கம் 19) என்ற தலைப்பிலமைந்த கவிதை பிரசுரமாகியுள்ளது. இதனை இவரது எழுத்துத் திறமைக்கு கிடைத்த அங்கீகாரமாகத்தான் பார்க்க முடிகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**இலக்கிய ஈடுபாடு**

இவர் தியத்தலாவ எச்.எப். ரிஸ்னா என்ற சொந்தப் பெயரிலும், குறிஞ்சி நிலா என்ற புனைப் பெயரிலும் எழுதி வருவதுண்டு.

தரம் மூன்றில் கற்கும்போதே பூங்கா, பிஞ்சு என்ற சிறுவர் பத்திரிகைகளுக்கு ஆக்கங்கள் எழுதியிருப்பதுடன் தமிழ் தினப் போட்டிகள், மீலாத் தினப் போட்டிகளில் பங்குபற்றி பல தடவைகள் முதலிடம் பெற்றுள்ளார்.

2004 இல் மெட்ரோ நியூஸ் பத்திரிகையில் "காத்திருப்பு" என்ற கவிதையை எழுதியதையடுத்து இதுவரை சுமார் 300 க்கும் மேற்பட்ட கவிதைகளையும், 40 க்கும் மேற்பட்ட சிறுகதைகளையும், 60 க்கும் மேற்பட்ட நூல் விமர்சனங்களையும் எழுதியுள்ளார்.

குறிப்பு:- 2004 முதல் 2025 வரை சுமார் 22 வருட காலமாக பல்வேறு வகையான ஊடகங்களிலும் இவரது படைப்புக்களைக் காணலாம்.

**இதழியல் துறை**

தற்போது பூங்காவனம் இலக்கிய வட்டத்தின் உப தலைவராகவும், பூங்காவனம் காலாண்டு சஞ்சிகையின் துணை ஆசிரியராகவும் சேவையாற்றி வருகிறார். 2010 ஆம் ஆண்டிலிருந்து 2021 செப்டெம்பர் வரையான காலப்பகுதிவரை 38 பூங்காவனம் இதழ்கள் வெளிவந்துள்ளன. இவர் 2013 இல் கொழும்பு பல்கலைக்கழகத்தில் இதழியல் டிப்ளோமா கற்கை நெறியை பூரணப்படுத்தியுள்ளார்.

**ஊடகத்துறை**

- 2006 இல் பிறை எப்.எம். அலை வரிசையில் கவிதை கூறியிருக்கிறார்.
- இலங்கை வானொலி முஸ்லிம் சேவை கவிதைக்களம் நிகழ்ச்சியில் இவரது கவிதை இடம்பெற்றுள்ளது.
- 2009 ஜூலை 27ல் நேத்ரா அலை வரிசை முஸ்லிம் நிகழ்ச்சியில் கவிதை கூறியிருக்கிறார்.
- 2011 பெப்ரவரி 13 இல் கவிஞர் திரு. சடாகோபன் அவர்களின் தலைமையில் சக்தி எப்.எம். அலை வரிசையில் கவிராத்திரி நிகழ்ச்சியில் கவிதை கூறியிருக்கிறார்.
- 2011 நவம்பர் 07 இல் இலங்கை வானொலி முஸ்லிம் சேவையில் கவிஞர் என். நஜ்முல் ஹுசைன் அவர்களின் தலைமையில் நடைபெற்ற ஹஜ் கவியரங்கம் நிகழ்ச்சியில் கவிதை கூறியிருக்கிறார்.
- 2011 நவம்பர் 07 இல் நேத்ரா அலைவரிசை தீன்சுடர் முஸ்லிம் நிகழ்ச்சியில் இடம்பெற்ற இலங்கையின் பிரபல பாடகரும்,


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இசையமைப்பாளருமான திரு. டோனி ஹஸன் அவர்கள் இசையமைத்துப் பாடிய "இன்பங்கள் பொங்கும் இரு பெருநாளிலே" என்ற ஹஜ் பெருநாள் பாடலை எழுதியிருக்கிறார்.

- 2014 பிரபல பாடகர் கலைக்கமல் அவர்கள் பதினொரு பாடலாசிரியர்களின் பாடல்களைத் தொகுத்து வெளியிட்ட "மண் வாசனையில் மகரந்தப் பூக்கள்" எனும் பாடல் இறுவட்டில் இவரது பாடலும் இடம்பெற்றிருக்கின்றது.

**இவரது ஆக்கங்கள் வெளிவந்த பத்திரிகைகள், சஞ்சிகைகள், இணையத்தளங்கள்**

- வீரகேசரி, தினகரன், தினக்குரல், மித்திரன், மெட்ரோ நியூஸ், சுடர்ஒளி, நவமணி, விடிவெள்ளி, நமது தூது, எங்கள் தேசம், இருக்கிறம், வேகம் போன்ற இலங்கையின் முன்னோடிப் பத்திரிகைகள்.
- ஓசை, மரங்கொத்தி, நிஷ்டை, நிறைவு, ஜீவநதி, யாத்ரா, செங்கதிர், படிகள், செந்தூரம், கூர்மதி, அல்லஜ்னா, அல் ஹஸனாத், ஞானம், நீங்களும் எழுதலாம், மல்லிகை, பேனா, கவிஞன், சிறுகதை மஞ்சரி, வெண்ணிலா மற்றும் இந்திய இதழான இனிய நந்தவனம் போன்ற சஞ்சிகைகள்.
- வார்ப்பு, முத்துக்கமலம், கீற்று, தமிழ் ஆதர்ஸ், பதிவுகள், பெண்ணியம், நிலாப் பெண், ஊடறு, திண்ணை, தேனீ, காற்றுவெளி, மூன்றாம் கோணம், கல்குடா நேசன், மக்கள் செய்தி, சமவெளி, த ஹொட் லைன், இம்போர்ட் மிரர், ஸ்ரீலங்கா முஸ்லிம்ஸ், அவதானி, இத்தியாதி ஆகிய இணையத்தளங்கள்.
- பிரான்ஸ் தமிழ் வானொலி, லண்டன் தமிழ் வானொலி மற்றும் லண்டன் முஸ்லிம் குரல் வானொலி ஜேர்மன் தமிழருவி வானொலி,




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவுஸ்திரேலிய ஒளிபரப்புக் கூட்டுத்தாபன முஸ்லிம் நிகழ்ச்சி மற்றும் அவுஸ்திரேலிய இன்பத் தமிழ் வானொலி

**இதுவரை வெளிவந்துள்ள நூல்கள்**

01. இன்னும் உன் குரல் கேட்கிறது (கவிதை) 2012 - புரவலர் புத்தகப் பூங்கா
02. வைகறை (சிறுகதை) 2012 - இலங்கை முற்போக்கு கலை இலக்கிய மன்றம்
03. காக்காக் குளிப்பு (சிறுவர் கதை) 2012 - ரூம் டு ரீட்
04. வீட்டிற்குள் வெளிச்சம் (சிறுவர் கதை) 2012 - ரூம் டு ரீட்
05. இதோ பஞ்சுக் காய்கள் (சிறுவர் கதை) 2012 - ரூம் டு ரீட்
06. மரத்தில் முள்ளங்கி (சிறுவர் கதை) 2013 - ரூம் டு ரீட்
07. திறந்த கதவுள் தெரிந்தவை ஒரு பார்வை (நூல் விமர்சனம்) 2013 - கொடகே பதிப்பகம்
08. நட்சத்திரம் (சிறுவர் பாடல்) 2014 - ஸ்பீட்மார்க் பதிப்பகம்
09. மெல்லிசைத் தூறல்கள் (பாடல்) 2015 - கொடகே பதிப்பகம்
10. மழையில் நனையும் மனசு (கவிதை) 2017 - பூங்காவனம் இலக்கிய வட்டம்
11. மான் குட்டி (சிறுவர் பாடல்) 2021 - பூங்காவனம் இலக்கிய வட்டம்

**இவரது படைப்புக்களின் பாடுபொருள்கள்**

அகநிலை, பெண்ணியம், சமூக அவலம், சமூக முன்னேற்றம், சீதனக் கொடுமை, மலையகப் பிரச்சனை, போர்ச் சூழல், மானிட நேயம் என்பன இவரது படைப்புக்களின் பாடுபொருள்களாகக் காணப்படுகின்றன.

**இவர் பற்றிய குறிப்புக்கள்**

- 2008 ஏப்ரல் 20-26 சுடர் ஒளி பத்திரிகையின் "உணர்வுகள்" பகுதி
- 2008 செப்டம்பர் இதழ் - செங்கதிர்
- 2009 நவம்பர் 01 (அமரர் ஸ்ரீதர் பிச்சையப்பா) - மித்திரன் கலாவானம்
- 2010 பெப்ரவரி இதழ் - ஞானம்
- 2010 மே - 16 (க. கோகிலவாணி) - மித்திரன் கலாவானம்
- 2011 மார்ச் 27 - தினகரன் கதம்பம்
- 2017 தை மாதத்தில் வெளியிடப்பட்ட ஜீவநதி - ஈழத்துப் பெண் எழுத்தாளர் சிறப்பிதழில் (இதழ் 100) பக்கம் 532 இல் 85 ஆவது ஆளுமையாக இவர் பற்றிய விரிவான தகவல்களை வெளியிட்டு கௌரவித்துள்ளது.
- 2017 ஏப்ரல் - ஜூன் மாதங்களுக்கான தென்றல் சஞ்சிகையின் அட்டைப் படத்தில் இவரது புகைப்படத்தை பிரசுரித்து, இவர் பற்றிய


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தகவல்களை வெளியிட்டு கௌரவித்துள்ளது.

- 2018 செப்டெம்பர் மாதத்தில் கலாபூஷணம் நூருல் அயின் நஜ்முல் ஹுஸைன் அவர்களினால் வெளியிடப்பட்ட "மின்னும் தாரகைகள்" என்ற இலங்கை முஸ்லிம் பெண் எழுத்தாளர்கள் பற்றிய ஆய்வு நூலில் பக்கம் 206 இல் இவர் பற்றிய விரிவான தகவல்களை வெளியிட்டு கௌரவித்துள்ளது.
- முத்துக்கமலம் இணையத்தளம்
- காற்றுவெளி இணையத்தளம்
- விக்கிப்பீடியா வலைத்தளம்

**நேர்காணல்கள்**

- 2010 ஜனவரி 24 - மித்திரன் வாரமலர் நேர்காணல்
- 2010 பெப்ரவரி 03 - நேத்ரா அலைவரிசை உதய தரிசனம் சிறப்பு அதிதி நேர்காணல்
- 2010 ஜுலை 01 - 14 எங்கள் தேசம் நேர்காணல்
- 2011 மே 01 தினகரன் வாரமஞ்சரி செந்தூரம் இதழ் நேர்காணல்
- 2012 ஒக்டோபர் 21 - வசந்தம் தொலைக்காட்சியின் தூவானம் நிகழ்ச்சி நேர்காணல்
- 2012 டிசம்பர் 09 - ஞாயிறு வீரகேசரி நேர்காணல்
- 2013 ஜுலை 14 - ஞாயிறு தினக்குரல் மஞ்சரி நேர்காணல்
- 2013 செப்டெம்பர் 11 - 17 முஸ்லிம் முரசு நேர்காணல்
- 2016 ஏப்ரல் 06 - நேத்ரா அலைவரிசை உதய தரிசனம் சிறப்பு அதிதி நேர்காணல்
- 2016 மே 31 - ஊவா சமூக வானொலியில் நெஞ்சம் மறப்பதில்லை நிகழ்ச்சியின் நேர்காணல்
- 2016 ஜுன் 26 - ஞாயிறு தினக்குரல் மஞ்சரி நேர்காணல்
- 2016 செப்டெம்பரில் பூங்காவனம் 26 ஆவது இதழின் அட்டைப் படத்தில் இவரது புகைப்படத்தை பிரசுரித்து, நேர்காணல் செய்து கௌரவித்துள்ளது.
- 2017 ஜனவரி 12 - சக்தி தொலைக்காட்சியின் மகளிர் மட்டும் சிறப்பு அதிதி நேர்காணல்
- 2017 ஆகஸ்ட் மாதத்திற்கான ஒளி அரசி இதழில் நேர்காணல்
- 2017 டிசம்பர் 31 இலண்டனிலிருந்து ஒலிபரப்பாகும் முஸ்லிம் குரல் வானொலியின் வளர் பிறை சஞ்சிகை நிகழ்ச்சியின் சந்திப்பு பகுதி சிறப்பு அதிதி நேர்காணல்
- 2018 ஆகஸ்ட் 19 - ஞாயிறு தினக்குரல் மஞ்சரி நேர்காணல்
- 2018 நவம்பர் 25 ஞாயிறு தினகரன் பத்திரிகையின் இணைப்பிதழான செந்தூரம் இதழில் நேர்காணல்
- 2020 செப்டெம்பர் 20 தினகரன் வாரமஞ்சரியின் இணைப்பிதழான செந்தூரம் இதழின் அட்டைப் படத்தில் இவரது புகைப்படத்தை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பிரசுரித்து, நேர்காணல் செய்து கௌரவித்துள்ளது.

- 2021 ஆகஸ்ட் 05 இல் கட்டாரிலிருந்து ஸ்கை தமிழ் அமைப்பினால் வெளியிடப்பட்ட துணிந்தெழு சஞ்சிகையின் 12 ஆவது இதழின் அட்டைப் படத்தில் இவரது புகைப்படத்தை பிரசுரித்து, இவருடனான நேர்காணலை வெளியிட்டு கௌரவித்துள்ளது.
- 2023 மார்ச் மாதத்தில் பிரான்ஸிலிருந்து வெளிவரும் தமிழ் நெஞ்சம் சஞ்சிகையின் அட்டைப் படத்தில் இவரது புகைப்படத்தை பிரசுரித்து, இவருடனான நேர்காணலை வெளியிட்டு கௌரவித்துள்ளது

**இவரது படைப்புக்கள் இடம்பெற்றுள்ள பிற நூல்கள்**

- இந்தியாவில் வெளியிடப்பட்ட "மழையில் கரைகிறது மானம்" என்ற சிறுகதைத் தொகுப்பில் இவரது சிறுகதை இடம்பெற்றுள்ளது.
- 2010 ஜீவநதி பதிப்பக வெளியீடான "நதியில் விளையாடி" கவிதைத் தொகுப்பில் இவரது "சூழ்நிலைக் கைதி" (பக்கம் 75) என்ற கவிதை இடம்பெற்றுள்ளது.
- 2011 ஜூன் மாதம் லக்ஸ்டோ மீடியா நெட்வேர்க் அமைப்பினால் வெளியிடப்பட்ட "உன்னை நினைப்பதற்கு" என்ற கவிதைத் தொகுப்பில் இவரது "நான் வசிக்கும் உன் இதயம்" (பக்கம் 115) என்ற கவிதை இடம்பெற்றுள்ளது.
- 2012 ஜூன் மாதம் ஜப்னா முஸ்லிம் இணையத்தளத்தால் வெளியிடப்பட்ட


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"வேர் அறுதலின் வலி" எனும் கவிதை நூலில் இவரது "கறுப்பு மாதம்" (பக்கம் 48) என்ற கவிதை இடம்பெற்றிருக்கின்றது.

- 2012 இல் பதுளை, பண்டாரவளை சேர் ராசிக் பரீட் மகா வித்தியாலயத்தின் வைர விழாவை (1952 - 2012) முன்னிட்டு வெளியிடப்பட்ட சிறப்பிதழில் "ராசிக் பரீட் புகழ் மாலை எங்கும்" (பக்கம் 62) என்ற கவிதை பிரசுரமாகியுள்ளது.
- 2014 யா/தொண்டைமானாறு வீரகத்திப்பிள்ளை மகா வித்தியாலயத்தால் வெளியிடப்பட்ட "உப்புமால்" எனும் சிறுகதை நூலில் இவரது "வரம்" என்ற சிறுகதை (பக்கம் 57) இடம் பெற்றிருக்கின்றது.
- 2014 தேசிய மொழிகள் மற்றும் மானுடவியல் பிரிவு, கல்வி அமைச்சின் தமிழ் மொழி அலகு இணைந்து வெளியிடும் கூர்மதி சஞ்சிகையில் இவரது "உறவுகள்" (பக்கம் 104) என்ற சிறுகதை இடம்பெற்றிருக்கின்றது.
- 2015 ஊவா மாகாண தமிழ் சாகித்திய விழா மலரில் இவரது "மாற்றம்" (பக்கம் 267) சிறுகதை இடம்பெற்றுள்ளது.
- 2015 யேர்மன் தமிழ் எழுத்தாளர் சங்கத்தினால் வெளியிடப்பட்ட செவ்வரத்தை எனும் போட்டிச் சிறுகதைத் தொகுப்பில் இவரது "காலம் மாறிப் போச்சு" (19 ஆவது சிறுகதை - பக்கம் 151) இடம்பெற்றுள்ளது.
- 2016 மார்ச் 21 ஆம் திகதியான உலக கவிதைகள் தினத்தை முன்னிட்டு அரச கலாசார அலுவல்கள் திணைக்களம் வெளியிட்ட மானுடம் பாடும் கவிதைகள் நூலில் இவரது "நெருப்பு வாழ்க்கை" (பக்கம் 115) என்ற கவிதை இடம்பெற்றிருக்கின்றது.
- 2016 இல் வெளியிடப்பட்ட அல்யகீன் ஆண்டு மலரில் இவரது "ரமழானே நீ மீண்டும் வந்திடு" (பக்கம் 40) என்ற கவிதை இடம்பெற்றுள்ளது.
- 2016 தேசிய மொழிகள் மற்றும் மானுடவியல் பிரிவு, கல்வி அமைச்சின் தமிழ் மொழி அலகு இணைந்து வெளியிடும் கூர்மதி சஞ்சிகையில் இவரது "கண்ணீர்" (பக்கம் 95) என்ற சிறுகதை இடம்பெற்றிருக்கின்றது.
- 2017 இல் வெளியிடப்பட்ட "1000 கவிஞர்கள் கவிதைகள்" பெரு நூலில் "நினைவுகளின் நெரிசல்" (பக்கம் 1091) என்ற இவரது கவிதை இடம்பெற்றுள்ளது.
- 2017 (ஐப்பசி - மார்கழி) இல் வெளியிடப்பட்ட "உதயசூரியன்" கலை இலக்கிய காலாண்டிதழில் "நெருப்பு வாழ்க்கை" (பக்கம் 34) என்ற இவரது கவிதை இடம்பெற்றுள்ளது.
- 2017 இல் கலாபூஷணம் பீ.ரீ. அஸீஸ் அவர்களினால் தொகுத்து வெளியிடப்பட்ட "நபிகள் நாயகம்" கவிதைத் தொகுப்பில் "மக்காவில் பிறந்த மாணிக்கமே" (பக்கம் 53) என்ற இவரது பாடல் இடம்பெற்றுள்ளது.
- 2018 "அகிலம்" கலை இலக்கிய அறிவியல் சஞ்சிகை வெள்ளி விழா


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- பவள விழா சிறப்பு மலரில் "காலப் பெருவெளி" (பக்கம் 18) என்ற இவரது கவிதை இடம்பெற்றுள்ளது.
- *2019* கல்வி வெளியீட்டுத் திணைக்களத்தினால் அச்சிடப்பட்டுள்ள தரம் *04* க்கான இஸ்லாம் சமய பாடப் புத்தகத்தில் "அல்குர்ஆனின் சிறப்புகள்" (பக்கம் *19*) என்ற இவரது கவிதை இடம்பெற்றுள்ளது.

**இவரது படைப்புகளுக்கு கிடைத்துள்ள பரிசுகள்**

- *2011* ஆம் ஆண்டில் ஜனசங்சதய என்ற இலக்கிய அமைப்பின் மூலம் தேசிய ரீதியாக நடைபெற்ற திறந்த சிறுகதைப் போட்டியில் பாராட்டுப் பத்திரமும், புத்தகப் பரிசும் பெற்றுள்ளார்.
- *2011* ஆம் ஆண்டில் மலை நாட்டு எழுத்தாளர் மன்றம் நடாத்திய சிறுகதைப் போட்டியில் பாராட்டுப் பத்திரமும், பணப்பரிசும் பெற்றுள்ளார்.
- *2011* ஆம் ஆண்டில் யாழ் முஸ்லிம் வலைத்தளம், இருக்கிறம் சஞ்சிகையுடன் இணைந்து நாடளாவிய ரீதியில் நடாத்திய திறந்த கவிதைப் போட்டியில் பாராட்டுப் பத்திரமும், பணப்பரிசும் பெற்றுள்ளார்.
- *2012* யா/தொண்டைமானாறு வீரகத்திப்பிள்ளை மகா வித்தியாலயம் நூற்றாண்டு விழாவை ஒட்டி கனடா நற்பணி சங்கத்தின் அனுசரணையுடன் தேசிய மட்டத்தில் நடாத்திய சிறுகதைப் போட்டியில் பதக்கமும், பாராட்டுப் பத்திரமும், பணப்பரிசும் பெற்றுள்ளார்.
- *2012* மலையக சமூக ஆய்வு மையம் தேசிய ரீதியில் நடாத்திய திறந்த கவிதைப் போட்டியில் சான்றிதழ் பெற்றுள்ளார்.
- *2013* தேசிய தொழிற்சங்க மத்திய நிலையம் தேசிய ரீதியாக நடாத்திய வியர்வையின் ஓவியம் - உழைக்கும் மக்கள் கலை விழா பாடல் போட்டியில் பரிசும், சான்றிதழும் பெற்றுள்ளார்.
- *2013* அரச கலாசார அலுவல்கள் திணைக்களம் மற்றும் தெஹிவளைப் பிரதேச செயலகம் ஒன்றிணைந்து ஏற்பாடு செய்த திறந்த கவிதைப் போட்டியில் முதலாம் இடம் பெற்றுள்ளார்.
- *2013* அரச கலாசார அலுவல்கள் திணைக்களம் மற்றும் கொழும்பு மாவட்ட செயலகம் ஒன்றிணைந்து ஏற்பாடு செய்த திறந்த கவிதைப் போட்டியில் இரண்டாம் இடம் பெற்றுள்ளார்.
- *2014* இல் கம்பன் கழகம் அகில இலங்கை ரீதியாக நடாத்திய தேசிய மட்ட கவிதைப் போட்டியில் இரண்டாம் இடம் பெற்று வெள்ளிப் பதக்கம் பெற்றுள்ளார்.
- *2014* அரச கலாசார அலுவல்கள் திணைக்களம் மற்றும் தெஹிவளைப் பிரதேச செயலகம் ஒன்றிணைந்து ஏற்பாடு செய்த திறந்த சிறுகதை, சிறுவர் கதைப் போட்டிகளில் முதலாம் இடத்தையும் கவிதை, பாடலாக்கப் போட்டிகளில் இரண்டாம் இடத்தையும் பெற்றுள்ளார்.
- *2014* அரச கலாசார அலுவல்கள் திணைக்களம் மற்றும் கொழும்பு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாவட்ட செயலகம் ஒன்றிணைந்து ஏற்பாடு செய்த திறந்த சிறுகதை, சிறுவர் கதைப் போட்டிகளில் முதலாம் இடத்தையும், கவிதை, பாடலாக்கப் போட்டிகளில் இரண்டாம் இடத்தையும் பெற்றுள்ளார்.

- 2014 தேசிய தொழிற்சங்க மத்திய நிலையம் தேசிய ரீதியாக நடாத்திய வியர்வையின் ஓவியம் - உழைக்கும் மக்கள் கலை விழா சிறுகதை, பாடலாக்கம் போட்டிகளில் முதலாவது இடமும் பரிசும், சான்றிதழும், பதக்கமும் கவிதைப் போட்டியில் இரண்டாம் இடமும் பெற்றுள்ளார்.
- 2015 இல் கம்பன் கழகம் அகில இலங்கை ரீதியாக நடத்திய தேசிய மட்ட கவிதைப் போட்டியில் முதலாம் இடம் பெற்று தங்கப் பதக்கம் பெற்றுள்ளார்.
- 2015 கலாசார அலுவல்கள் திணைக்களம் மற்றும் கலாசார அலுவல்கள் இராஜாங்க அமைச்சு ஒன்றிணைந்து நடத்திய திறந்த கையெழுத்துப் பிரதிப் போட்டியில் "மழையில் நனையும் மனசு" எனும் கவிதைப் பிரதிக்கு மூன்றாம் இடம் பெற்றுள்ளார்.
- 2015 அரச கலாசார அலுவல்கள் திணைக்களம் மற்றும் இரத்மலானை பிரதேச செயலகம் ஒன்றிணைந்து ஏற்பாடு செய்த திறந்த கவிதை, சிறுகதைப் போட்டிகளில் முதலாம் இடத்தையும், இலக்கிய விவரணப் போட்டியில் இரண்டாம் இடத்தையும் பெற்றுள்ளார்.
- 2015 அரச கலாசார அலுவல்கள் திணைக்களம் மற்றும் கொழும்பு மாவட்ட செயலகம் ஒன்றிணைந்து ஏற்பாடு செய்த திறந்த சிறுகதை, பாடலாக்கம் போட்டிகளில் முதலாம் இடத்தைப் பெற்றுள்ளார்.
- 2015 ஞானம் கலை இலக்கியச் சஞ்சிகை வருடாந்தம் தேசிய ரீதியாக நடாத்தும் அமரர் செம்பியன் செல்வன் (ஆ. இராஜகோபால்) ஞாபகார்த்தச் சிறுகதைப் போட்டியில் "பயணங்கள்" என்ற இவரது சிறுகதைக்காக பரிசுச் சான்றிதழ் பெற்றுள்ளார்.
- 2016 தெல்லிப்பழைக் கலை இலக்கியக்களம் தேசிய ரீதியாக நடாத்திய திறந்த கவிதைப் போட்டியில் "சீற்றம்" என்ற இவரது கவிதைக்காக முதலாம் இடம் பெற்றுள்ளார்.
- 2016 அரச கலாசார அலுவல்கள் திணைக்களம் மற்றும் இரத்மலானை பிரதேச செயலகம் ஒன்றிணைந்து ஏற்பாடு செய்த திறந்த மட்ட சிறுகதை, பாடலாக்கப் போட்டிகளில் முதலாம் இடத்தையும், இலக்கிய விவரணம், சிறுவர் கதைப் போட்டிகளில் இரண்டாம் இடத்தையும் பெற்றுள்ளார்.
- 2016 தேசிய தொழிற்சங்க மத்திய நிலையம் தேசிய ரீதியாக நடாத்திய வியர்வையின் ஓவியம் - உழைக்கும் மக்கள் கலை விழா பாடலாக்கப் போட்டியில் இரண்டாம் இடமும், சிறுகதை போட்டியில் மூன்றாம் இடமும் பெற்றுள்ளார்.
- 2017 கலாசார அலுவல்கள் திணைக்களம் மற்றும் இரத்மலானை பிரதேச செயலகம் ஒன்றிணைந்து ஏற்பாடு செய்த திறந்த பாடலாக்கப் போட்டியில் முதலாம் இடமும் சிறுகதை, இலக்கிய விவரணம், சிறுவர் கதைப் போட்டிகளில் இரண்டாம் இடமும் பெற்றுள்ளார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- 2017 அரச இலக்கிய விழாவின் 60 ஆவது ஆண்டு வைர விழாவினை முன்னிட்டு அரச கலாசார அலுவல்கள் திணைக்களம் மற்றும் கொழும்பு மாவட்ட செயலகம் ஒன்றிணைந்து ஏற்பாடு செய்த திறந்த பாடலாக்கப் போட்டியில் முதலாம் இடம் பெற்றுள்ளார்.
- 2018 கலாசார அலுவல்கள் திணைக்களம் மற்றும் இரத்மலானை பிரதேச செயலகம் ஒன்றிணைந்து ஏற்பாடு செய்த திறந்த சிறுகதை, இலக்கிய விவரணம், சிறுவர் கதைப் போட்டிகளில் இரண்டாம் இடங்களைப் பெற்றுள்ளார்.
- 2019 கலாசார அலுவல்கள் திணைக்களம் மற்றும் இரத்மலானை பிரதேச செயலகம் ஒன்றிணைந்து ஏற்பாடு செய்த திறந்த சிறுவர் கதைப் போட்டியில் முதலாம் இடமும் இலக்கிய விவரணம், பாடல் ஆக்கம் ஆகிய போட்டிகளில் இரண்டாம் இடமும் சிறுகதைப் போட்டியில் மூன்றாம் இடமும் பெற்றுள்ளார்.
- 2020 கலாசார அலுவல்கள் திணைக்களம் மற்றும் இரத்மலானை பிரதேச செயலகம் ஒன்றிணைந்து ஏற்பாடு செய்த திறந்த சிறுகதை, இலக்கிய விவரணம், சிறுவர் கதைப் போட்டிகளில் முதலாம் இடங்களும் பாடல் ஆக்கப் போட்டியில் இரண்டாம் இடமும் பெற்றுள்ளார்.
- 2020 அரச கலாசார அலுவல்கள் திணைக்களம் மற்றும் கொழும்பு மாவட்ட செயலகம் ஒன்றிணைந்து ஏற்பாடு செய்த மாவட்ட இலக்கியப் போட்டித் தொடரில் சிறுகதைப் போட்டியில் இரண்டாம் இடம் பெற்றுள்ளார்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- 2021 கலாசார அலுவல்கள் திணைக்களம் மற்றும் இரத்மலானை பிரதேச செயலகம் ஒன்றிணைந்து ஏற்பாடு செய்த திறந்த பாடல் ஆக்கப் போட்டியில் முதலாம் இடமும், சிறுகதைப் போட்டியில் இரண்டாம் இடமும் பெற்றுள்ளார்.
- 2022 கலாசார அலுவல்கள் திணைக்களம் மற்றும் இரத்மலானை பிரதேச செயலகம் ஒன்றிணைந்து ஏற்பாடு செய்த திறந்த சிறுகதை, சிறுவர் கதைப் போட்டிகளில் முதலாம் இடங்களும் கவிதைப் போட்டியில் இரண்டாம் இடமும் பெற்றுள்ளார்.
- 2022 அரச கலாசார அலுவல்கள் திணைக்களம் மற்றும் கொழும்பு மாவட்ட செயலகம் ஒன்றிணைந்து ஏற்பாடு செய்த மாவட்ட இலக்கியப் போட்டித் தொடரில் சிறுகதைப் போட்டியில் இரண்டாம் இடம் பெற்றுள்ளார்.
- 2024 நன்னூல் பதிப்பகத்தால் சர்வதேச ரீதியாக நடாத்தப்பட்ட பன்னூலாசிரியர், எழுத்தாளர் டாக்டர் ஹிமானா சையத் நினைவு சிறுகதைப் போட்டியில் இவரது "கண்ணீர்" என்ற சிறுகதைக்காக மூன்றாம் இடமும் 5,000 ரூபா இந்தியப் பணப் பரிசும் பெற்றுள்ளார்.
- 2024 கலாசார அலுவல்கள் திணைக்களம் மற்றும் இரத்மலானை பிரதேச செயலகம் ஒன்றிணைந்து ஏற்பாடு செய்த திறந்த கவிதை, சிறுகதை, சிறுவர் கதைப் போட்டிகளில் முதலாம் இடங்களையும் பாடல் போட்டியில் இரண்டாம் இடத்தையும் பெற்றுள்ளார்.
- 2024 அரச கலாசார அலுவல்கள் திணைக்களம் மற்றும் கொழும்பு மாவட்ட செயலகம் ஒன்றிணைந்து ஏற்பாடு செய்த மாவட்ட இலக்கியப் போட்டித் தொடரில் சிறுகதை மற்றும் பாடல் போட்டிகளில் இரண்டாம் இடங்களைப் பெற்றுள்ளார்.

**இதுவரை கிடைத்துள்ள பட்டங்கள்**

- 2013 அகில இலங்கை கவிஞர்களின் சம்மேளனம் - காவிய பிரதீப பட்டம் (கவிச்சுடர் பட்டம்).
- 2018 பாணந்துறை இஸ்லாமியப் பேரவை மற்றும் இலக்கிய வட்டம் - கலையொளி பட்டம்.
- 2024 முன்னோடிகள் கலை இலக்கிய வட்டம் - கலைநிலா பட்டம்.
- 2024 சர்வதேச மனித உரிமைகள் பேரவை மற்றும் சர்வதேச பௌத்த சம்மேளனம் - இலக்கியத் தென்றல், லங்கா புத்திர, தேசபந்து.

**இதுவரை பெற்றுள்ள விருதுகள்**

- 2015 ஆம் ஆண்டு ஊவா மாகாண சாகித்திய விழா - ஆக்க இலக்கியவாதிக்கான எழுசுடர் விருது
- 2016 ஆம் ஆண்டு இலங்கை இஸ்லாமிய கலை இலக்கிய ஆய்வகம் - எழுத்தாளருக்கான கௌரவ விருது


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

- *2021 புதிய அலை கலை வட்டம் - வெற்றியாளர் விருது*
- *2021 தேனீ கலை இலக்கிய மன்றம் - கவித்தேன் விருது*
- *2024 முன்னோடிகள் கலை இலக்கிய வட்டம் - பொன்னொளி விருது*

**அங்கத்துவம் வகிக்கும் இலக்கிய அமைப்புகள்**

- பூங்காவனம் இலக்கிய வட்டம்
- ஸ்ரீலங்கா முஸ்லிம் கலைஞர் முன்னணி
- இலங்கை முற்போக்கு கலை இலக்கிய மன்றம்
- ஸ்ரீலங்கா முஸ்லிம் மீடியா போரம்
- இலங்கை கல்வி சமூக சம்மேளனம்
- தேனீ கலை இலக்கிய மன்றம்

**இவரது வலைப்பூக்கள்**

- www.poemrizna.blogspot.com (கவிதைகள்)
- www.vimarsanamrizna.blogspot.com (விமர்சனங்கள்)
- www.storyrizna.blogspot.com (சிறுகதைகள்)
- www.childrizna.blogspot.com (சிறுவர் படைப்புக்கள்)
- www.songrizna.blogspot.com (பாடல்கள்)
- www.publicationrizna.blogspot.com (நூல் வெளியீடுகள்)

**தொடர்புகளுக்கு:**

Face Book:
H.F. Rizna

E-mail :
riznahalal@gmail.com

Whatsapp :
*078 398 9410*



●●●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெண்ணிலா 18ஆவது இதழ்
மீதான சிறப்புப் பார்வை.

# வெண்ணிலா முகம் பாடுது
# அது கண்ணிலே சுகம் தேடுது.




கவிஞர் எஸ். ஏ. கப்பார் அவர்களை ஆசிரியராகக் கொண்டு வெளிவரும் வெண்ணிலா காலாண்டுச் சஞ்சிகையின் 2025 ஜூலை-செப்டம்பருக்கான இதழ் தற்பொழுது வெளிவந்திருக்கிறது.

வெண்ணிலாவின் நுழைவாயிலிலேயே இம்முறை நூலாசிரியரிடமிருந்து... பகுதியில் சமர்ப்பணம் ஒன்று வெளியாகியிருக்கிறது. வெண்ணிலாவின் தோற்றத்திற்கு காரண கர்த்தாவாக ஆலோசகராக இருந்து முதல் சந்தாதாரராக சேர்ந்து ஊக்கமளித்த ஆசிரியர் எஸ். ஏ. கப்பார் அவர்களின் தம்பி டாக்டர் எஸ். ஏ. ஜஹ்பர் அவர்களின் நினைவாக இதனை சமர்ப்பணம் செய்திருக்கிறார். டாக்டர் மர்ஹூம் ஆகி சரியாக இரண்டு வருடங்கள் பூர்த்தி ஆகிறது. அதனை நினைவு கூறும் முகமாகத் தான் இந்த இதழை அவர் தம்பியின் நினைவாக சமர்ப்பணம் செய்திருக்கிறார்.

அட்டைப் படத்தை சமூக மாமணி முர்ஷிதா ஷிரீன் அவர்களின் புகைப்படம் அலங்கரிக்கிறது. அம்பாறை சம்மாந்துறையைச் சேர்ந்த இவர் விவசாய போதனாசிரியராகவும் சமூக சேவகியாகவும் இருந்து செயல்பட்டு வருகிறார். இவரது இலக்கிய ஆர்வம் மூன்றாம் தரத்தில் படித்துக் கொண்டிருக்கும் போதே ஏற்பட்டது ஒன்றாக இருக்கிறது. சிறுகதை, கவிதை, கட்டுரைகள் என்பவற்றை தேசிய பத்திரிகைகளிலும், முகநூல், கீறல், இறகு போன்ற சஞ்சிகைகளிலும் பதிவாக்கி வருகிறார்.

**கலாபூஷணம் மாவனல்லை எம். எம். மன்ஸூர்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அத்தோடு நூல் விமர்சனங்களையும் படைப்பிலக்கியவாதிகளைப் பற்றிய குறிப்புகளையும் பதிவிட்டு வருகிறார். இவர் தனது படைப்புகளுக்காக சான்றிதழ்களையும் விருதுகளையும் நினைவுச் சின்னங்களையும் பெற்றிருக்கிறார். குறிப்பாக இவர் ஒரு விவசாய திணைக்கள உத்தியோகத்தராக இருப்பதினால் விவசாயம் சம்பந்தமான சேவைகளையும் விவசாயப் பிரச்சினைகளுக்கான தீர்வுகளையும் பெற்றுக் கொடுத்து விவசாயிகளுக்கு உதவி வருவதோடு தேவையான ஆலோசனைகளையும் வழங்கி வருகிறார். அது மாத்திரம் இல்லாமல் விவசாயத்திணைக்களத்துடன் இணைந்து இயங்கும் தொண்டு நிறுவனங்கள் கிராம அபிவிருத்தி சங்கங்கள் இளைஞர் மகளிர் சங்கங்களுடன் இணைந்து அரசியல்வாதிகளின் உதவிகளுடனும் பிரதேச செயலகம், நகரசபை உட்பட வெளிநாட்டு உள்நாட்டு முதலீட்டு நிறுவனங்களின் உதவியுடனும் வாழ்வாதாரங்களையும் சமூக நல்லிணக்க சுகாதார கல்வி நன்னடத்தை போன்றவற்றுக்கான உதவிகளையும் புரிந்து வருகிறார். அத்தோடு பொலிதின் பாவனையற்ற சமூகம் ஒன்றினையும் போதைப் பொருள் பாவனையற்ற சமூகம் ஒன்றினையும் கட்டி எழுப்ப உழைத்து வரும் ஒரு உத்வேகப் பெண்மணி ஆவார். வறட்சி, வெள்ளம் போன்றவற்றின் மூலமாக பாதிக்கப்பட்டவர்களுக்கும் அனாதை இல்லங்கள், பாடசாலை, குர்ஆன் மதரஸாக்கள், புற்றுநோய் பராமரிப்பு நிலையங்கள் போன்றவற்றுக்கும் தன்னாலான உதவிகளைப் புரிந்து வருகிறார். இவரது சேவைகளுக்காக 2023 ஆம் ஆண்டு "லக்ஸ்டூ மீடியா நெட்வொர்க் ஸ்ரீலங்கா" வினால் "சமூக மாமணி" விருது வழங்கி கௌரவிக்கப்பட்டார்.

ஏறாவூர் ஆதார வைத்தியசாலையின் சிரேஷ்ட வைத்திய அதிகாரி டாக்டர் ஜலீலா முஸம்மில் அவர்கள் சிறுவர்களுக்கு ஏற்படும் கக்குவான் இருமலும் நோய் நிவாரணமும் பற்றிய கட்டுரையைத் தந்திருப்பது மிகவும் பிரயோசனமானது. இக் கட்டுரை மூலமாக மேற்படி நோய் பற்றிய அறிகுறிகள், நோய் தொற்றின் தன்மைகள், அதற்குச் செய்ய வேண்டிய சிகிச்சை முறைகள், சிக்கலான நிலைமைகள் ஆபத்துகள் பற்றி எல்லாம் விளக்கமான முறையிலே தந்திருக்கிறார். ஒவ்வொரு பெற்றோரும் படிக்க வேண்டிய கட்டுரை இது.

வெண்ணிலாவின் 17வது இதழ் மீதான எனது (கலாபூஷணம் மாவனல்லை எம். எம். மன்ஸூர்) சிறப்பு பார்வை பற்றிய சிறப்பு கட்டுரையை ஆசிரியர் இந்த இதழில் இடம் பெறச் செய்திருக்கிறார். அவருக்கு நன்றிகள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த இதழில் எழுத்தாளர் ஏ. எம். கஸ்புள்ளா "நீ வாசிக்க மறந்த வரிகள் நான்" என்ற தலைப்பில் தொடர்கதை ஒன்றினை ஆரம்பித்திருக்கிறார். கதை பல்கலைக்கழக நண்பர்களின் ஊர் தரிசனத்துடன் ஆரம்பித்து சுவாரசியமாக தொடர்கிறது. தொடர்கதையில் பல திருப்பு முனைகளை நாம் சந்திக்க நேரிடும் என்பதை பாத்திரப்படைப்புகள் கட்டியம் கூறுகின்றன.

கவிதை மஞ்சரியாக உருவாக்கம் பெற்று தற்பொழுது பல்சுவை மஞ்சரியாக விரிவாக்கம் பெற்று வரும் வெண்ணிலாவின் நூல்நயம் பகுதியில் பன்நூல் ஆசிரியரும் பூங்காவனம் சஞ்சிகையின் ஆசிரியருமான வெலிகம ரிம்ஸா முஹம்மத் "இப்படிக்கு என் இதயம்" என்ற கவிதை நூல் பற்றிய தனது கண்ணோட்டத்தைச் செலுத்தியிருக்கிறார். இந்நூல் மாவனல்லையைச் சேர்ந்த பாத்திமா சில்மியாவின் கன்னி கவிதை நூல் என்பது குறிப்பிடத்தக்கது. நூல் அறிமுகம் பக்கத்தில் இலக்கியத்தில் பல்வேறு துறைகளிலும் தன் பங்களிப்பை செலுத்தி வரும் கலாபூஷணம் மருதூர் ஜமால்தீன் அவர்கள் எழுதிய "அகந்தை அழிந்தது" என்ற பெயரில் வெளியாகியுள்ள உருவகக் கதை தொகுப்பு பற்றிய அறிமுகமும், சிரேஷ்ட சட்டத்தரணியும் சிறுகதை எழுத்தாளரும் கவிஞருமான எம் எஸ் எம் ஜமீல் அவர்களது "இன்னொரு மனசு" என்ற கவிதை நூலும் அறிமுகம் செய்யப்பட்டிருக்கிறன. ஓய்வு பெற்ற ஆசிரியர் வித்யாதரிசி மு. மீ. அமீர் அலி அவர்களின் "சுவடுகளின் நோக்கு" எனும் மரபுக் கவிதை நூல் பற்றிய கருத்துக்களை இலங்கை கல்வி நிர்வாக சபையிலிருந்து ஓய்வு நிலையில் உள்ள தொடர்பாடலும் இதழியலும் முதுமாணி பட்டம் பெற்ற எம் எச் ஏ எம் இஸ்மாயில் அவர்கள் விமர்சன நோக்கோடு முன்வைத்துள்ளார்.

இதழில் ஐந்து சிறுகதைகள் இடம் பெற்றுள்ளன. பின் தொடரும் தர்மங்கள், அவளவனின் மேக தூதம், நெஞ்சக் கனல், மறந்தது மலருமா?, படிப்பு முக்கியம் ராசா என்ற தலைப்புகளில் அவை காணப்படுகின்றன.

உண்மை எது பொய் எது என்று கண்டுபிடிக்க முடியாத நிலையில் சுகாதார வைத்தியத்துறை இன்று சிக்கல் அடைந்து இருக்கிறது. அரசாங்கத் துறையிலும் தனியார் துறையிலும் ஆயிரக்கணக்கான டாக்டர்கள் இன்று கடமையாற்றுகிறார்கள். இவர்களுக்கு மத்தியில் போலி டாக்டர்களும் உலா வருவதாகச் சொல்லப்படுகிறது. அத்தகைய டாக்டர் ஒருவரிடம் ஸம்மி எடுத்துக்கொண்ட மருந்துகள் எதிர் விளைவுகளை ஏற்படக்கூடியதாக இருந்த வேளையில் தம்பியின் முயற்சியால் அது


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

தடுக்கப்பட்டு விட்டது. ஸம்மியின் தம்பி எம்.பி.பி.எஸ். டாக்டராகி ஊர் மக்களுக்கு சேவை செய்து இடையில் நோய் வாய்ப்பட்டு கோமா நிலையில் இருந்து மீண்டு வைத்திய சேவையுடன் மனிதாபிமான சேவைகளையும் செய்துவிட்டு இவ்வுலகத்தில் விடை கொடுத்தார்.



**கலாபூஷணம் மாவனல்லை எம். எம். மன்ஸூர்.**

கம்பளை இமையி எழுதியுள்ள "அவளவனின் மேக தூதம்" எனும் சிறுகதை மாமி மருமகள் பிரச்சினை, அண்ணன் தங்கை பிணைப்பு, கணவன் மனைவி இணைப்பு என ஒவ்வொரு துறையையும் இழையோட விட்டு அன்பு மனையாளிடம் அடக்கம் பெறும் கணவனின் செயற்பாடுகளுக்கு ஈடுகொடுக்குமாப் போல அன்பு மனையாளின் செயற்பாடுகள் அமைந்ததொரு சிறுகதையாக பார்க்கக் கூடியதாக உள்ளது. கதைப் போக்கு ஏனைய சிறுகதைகளை விட ஏதோ ஒரு வகையில் வேறுபட்டு இருப்பதை அவதானிக்க முடிகிறது.

கலாபூஷணம் கிண்ணியா சபீனாவின் "நெஞ்சக் கனல்" எனும் சிறுகதை பொதுவாக பெண் வீட்டாருக்குள்ள சிக்கல்களையும் ஏழைக் குடும்பங்களில் உள்ள இயலாமைகளையும் சிறப்பாக எடுத்துக்காட்டுகிறது. கரீமும் அஸீமாவும் அளவோடு பழகினாலும் திருமணம் என்ற பொழுது அஸீமாவின் குடும்ப நிலைகளை அறிந்திருந்தும் கரீமின் பெற்றார்கள் பணம் கறக்கும் நோக்கத்தில் இருப்பது வருந்தத்தக்கது. முடிவில் தனது டாக்டர் மருமகள் அஸீமாவின் உதவியுடன் கேன்சர் ஆஸ்பத்திரியில் அனுமதிக்க செல்லும் வேளையிலும் தான் செய்த தவறை எண்ணிப் பார்க்க மறந்துவிட்டார் கரீமின் தாய் பழீலா. கரீம் காதலிக்காக தனது தாயுடன் ஒரு வார்த்தையும் பேசாதது கரிமின் கோழைத்தனத்தைக் காட்டுகிறது.

"மறந்தது மலருமா?" என்ற சிறுகதை பொதுவாக கணவன் மனைவியரின் உறுதியான உள்ளங்களை எடுத்துக்காட்டுகிறது. சந்தேகம் என்ற நச்சுக்காற்றுக்கு அங்கு இடமில்லை. கல்லூரி வாழ்க்கையில் ஆயிரம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடக்கலாம். அன்பு, காதல், பாசம் என வித்தியாசமான நட்புகள் கல்லூரி நண்பர்களிடமும், தோழியர்களிடமும் ஏற்படலாம். என்றாலும் சில நிறைவேறலாம். சில நிராகரிக்கப்படலாம். அரவிந்தனின் கல்லூரி வாழ்க்கையில் ஷாலினியின் பங்கும் இடம் பெற்று இருந்தாலும். கல்லூரியை விட்டு விலகிய பின்னர் இருவரினதும் வாழ்க்கையும் வெவ்வேறு திசைகளில் போய்விட்டது. இடையிலேயே இருவருக்கும் பழைய நினைவுகள் வந்த போதும் அவர்களது வாழ்க்கையை அது பாதிக்கவில்லை என்பதை விளக்குகிறது செம்மைத் துளியானின் சிறுகதை.

கல்விக்கண் திறக்கப்படாவிட்டால் வாழ்க்கை இருளாக இருக்கும் என்பதற்கு கிண்ணியா ஏ. எம். ஏ. ரசூல் எழுதிய "படிப்பு முக்கியம் ராசா" என்ற சிறுகதை எடுத்துக்காட்டாக இருக்கிறது. தந்தை பரசுராமனால் தனது பிள்ளைகளின் கல்வி முன்னேற்றத்திற்காக எடுத்துக் கொண்ட முயற்சிகள் காரணமாக மகன் மகள் மருமக்களும் சிறந்த பெரிய உத்தியோகங்களில் அமர்ந்து பரசுராமனுக்கு அந்த கிராமத்திலேயே பெயரையும் புகழையும் தேடிக் கொடுத்துள்ளனர்.

அல்ஹாஜ் ஏ ஆர் ஏ சத்தார் ஜே.பி. அவர்கள் ஆரம்பித்திருக்கும் "மருதமுனை வரலாறும் வாழ்வியலும்" எனும் தலைப்பிலான கட்டுரை மூலம் மருதமுனையின் வரலாற்றைப் படம் பிடித்துக் காட்டுவது போல் கட்டுரையைத் தொடங்கி இருக்கும் விதம் மருதமுனை மக்களை மாத்திரமல்லாமல் இலங்கை வாழ் மக்களுக்கும் மருதமுனையைப் பற்றி அறிந்து கொள்வதற்கு ஒரு வாய்ப்பாக அமைந்துள்ளது. வாழ்த்துக்கள்.

வழமைபோல் ஓய்வுநிலை அதிபர் ஏ. ஆர். அப்துல் றசூல், மு. மு. மு. பாசில், கலாபூஷணம் மருதூர் ஜமால்தீன், வெலிகம ரிம்ஸா முஹம்மத், கலாபூஷணம் கிண்ணியா சபீனா, வேலணையூர் ரஜித்தன், ஏ. சீ. எப். பஸீயா, செண்பகச்சோலையாள் ஆய்ஷ், சுமை, ரிஹானா ஹரிஸ்கான், முகம்மது றியால், மக்கொனையூராள், கவிப்பொய்கை ஜவ்ஸன் அகமட், ஒலுவில் நழீம் ஹனீபா, ஏயாறே, தியத்தலாவ எச். எப். ரிஸ்னா, நிஸ்வா ஸலாம், மூதூர் றிஸ்வின், செல்வத்தமிழ் (தென்காசி), சம்மாந்துறை மஷூறா ஆகிய கவிஞர்களின் கவிதைகள் இதழை அலங்கரிக்கின்றன.

**- வாழ்த்துகள். -**

●●●


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மருத்துவக் கட்டுரை**

# புரத உணவின் ஆரோக்கியம்

**Dr. ஜலீலா முஸம்மில் (MBBS/SL)**

சிரேஷ்ட வைத்திய அதிகாரி

ஆதார வைத்தியசாலை, ஏறாவூர்.






நாம் நாளாந்தம் பல்வேறுபட்ட உணவு வகைகளை உள்ளெடுக்கிறோம். ஆனால் அவ்வுணவுகளில் உள்ள சத்துக்கள் மற்றும் கலோரிகளின் அளவு நம்மில் பெரும்பாலானோர் அறிந்திருப்பதில்லை.

நமது உணவில் மாப்பொருள் கொழுப்பு புரதங்கள் விட்டமின்கள், கனியுப்புகள் என பல்வேறு போசணைக்கூறுகள் அடங்கி உள்ளன. நம் உடலுக்கு கார்போவைதரேட்டுகள் மற்றும் கொழுப்புகள் தேவை என்றாலும் புரதங்கள் எல்லாவற்றை விடவும் முக்கியமானதாகும். அசைவ மற்றும் சைவ உணவுகளில் பிரதானமாக புரதம் காணப்படுகிறது இது உடலின் வளர்ச்சி மற்றும் பராமரிப்பிற்கு உதவுகிறது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மற்றும் வளர்சிதை மாற்றத்தை அதிகரிப்பதில் முக்கிய இடத்தை வகிக்கிறது.

புரதம் அல்லது புரதச்சத்து என்பது அமினோ அமில மூலக்கூறுகளால் இணைக்கப்பட்ட, உடலுக்குத் தேவையான அத்தியாவசிய ஊட்டச்சத்து ஆகும். புரதம் தான் உடலின் கட்டமைப்பு, கலங்களின் வளர்ச்சி,இழைய பராமரிப்பு ,தசை வளர்ச்சி, எலும்பு வளர்ச்சி, காட்டிலேஜ் எனும் குருத்தெலும்பு மற்றும் சருமத்தை உருவாக்குவதில் முக்கிய பங்கு வகிக்கிறது. புரதங்களில் தாவர அடிப்படையிலான புரதங்கள், விலங்கில் இருந்து கிடைக்கும் புரதங்கள் என இரண்டு முக்கிய வகைகள் உள்ளன. நமது உடல் எடையில் சுமார் 17 சதவீதம் புரதத்தால் ஆனது தான்.

ஒருவருக்கு ஒரு நாளைக்கு எவ்வளவு புரதம் தேவை என்பது அவர்களின் வயது மற்றும் உடல் எடையைப் பொறுத்து மாறுபடும். இருப்பினும், பொதுவாக ஆண்களுக்கு ஒரு நாளைக்கு ஒரு கிலோ உடல் எடையில் 0.84 கிராம் புரதமும், பெண்களுக்கு ஒரு கிலோவிற்கு 0.75 கிராம் புரதமும், கர்ப்பிணிப் பெண்களுக்கு குழந்தையின் உறுப்புகள் மற்றும் இழையங்களின் வளர்ச்சிக்கு தேவைப்படும் புரதத்தையும் சேர்த்து ஒரு கிலோ உடல் எடைக்கு 1 கிராம் புரதம் தேவைப்படுகிறது. அமினோ அமிலங்கள் எனப்படும் அடிப்படை சேர்மங்களால் ஆனதாக அறியப்பட்டுள்ள ஒரு புரத மூலக்கூறு சுமார் 300 அல்லது அதற்கு மேற்பட்ட அமினோ அமிலங்களால் ஆனது. அங்கு ஒவ்வொரு புரதத்திற்கும் குறிப்பிட்ட அமினோ அமிலங்களின் வரிசை மற்றும் எண்ணிக்கை காணப்படும்.

அமினோ அமிலங்களின் எண்ணிக்கை மற்றும் அவற்றின் வரிசையைப் பொறுத்து, புரதத்தின் வடிவமும் மாறுபடும். அதன் அடிப்படையில் புரதத்தின் செயல்பாடும் மாறுபடும். தாவரங்கள் தங்களுக்கு தேவையான அனைத்து அமினோ அமிலங்களையும் சேர்வையாக்கி தொகுத்துக் கொள்கிறது. ஆனால் விலங்குகளுக்கும் மனிதர்களுக்கும் அத்தியாவசிய மற்றும் அத்தியாவசியமற்ற புரதங்கள் அவசியம் தேவை. அத்தியாவசியமற்ற புரதங்கள் உடலால் உற்பத்தி செய்யப்படலாம், அதேசமயம் அத்தியாவசிய புரதங்கள் நம் உடலால் உற்பத்தி செய்ய முடியாதவை அவை பால், முட்டை, இறைச்சி போன்ற வெளிப்புற உணவு மூலங்களிலிருந்து பெறப்படுகின்றன. புரதம் நிறைந்த உணவுகளை உண்பதால் நமது உடலுக்கு பல்வேறுபட்ட நன்மைகள் கிடைக்கின்றன.

தாவர அடிப்படையிலான புரதங்கள் காய்கறிகள், பருப்பு வகைகள், கொட்டைகள், விதைகள் மற்றும் தானியங்களில் இருந்து கிடைக்கும். இந்த புரதங்கள் அத்தியாவசிய அமினோ அமிலங்களை வழங்குகின்றன. உடலுக்கு நார்ச்சத்துக்கள் அதிகம் கிடைப்பதோடு, இதய ஆரோக்கியத்துக்கும், சில வகை புற்று நோய்களின் அபாயத்தைக் குறைக்கவும், அதிகரித்த


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

உடல் எடையைக் குறைக்கவும் முடியும்.

**தாவர அடிப்படையிலான புரத உணவுகள்:**
சோயா பால், சோயா பீன்ஸ்,
பருப்பு வகைகள்,
பீன்ஸ், பச்சை பட்டாணி,
பாதாம், அக்ரூட் பருப்புகள்,
பிஸ்தா, வேர்க்கடலை,
முந்திரி, கீரை, ப்ரோக்கோலி,
காளான், முளைகட்டிய பயிர்கள்,
ஓட்ஸ், விதைகள்.

விலங்குகளை ஆதாரமாக கொண்ட உணவுப் பொருட்களில், புரதங்கள் அதிக அளவில் இருக்கும்.உணவில் அவற்றை சேர்த்துக் கொள்வதன் மூலம் அன்றாட புரதத் தேவையை பூர்த்தி செய்து கொள்ள முடியும். அதுமட்டுமல்லாமல், புரத பவுடர்கள், புரத ஷேக்ஸ் மற்றும் புரத துணையுணவுகள் சந்தைகளில் காணப்பட்டாலும் இயற்கை ஆதாரங்களில் இருந்து புரத ஊட்டச்சத்தைப் பெறுவதே சிறப்பானது. இதனால் சப்ளிமெண்டறி மற்றும் செயற்கை பொருட்களின் பக்க விளைவுகளை தவிர்க்க முடியும்.

**விலங்கு புரதங்கள்:**
முட்டைகள்
பால் மற்றும் பால் பொருட்கள்,
சீஸ், காட்டேஜ் சீஸ், யோகர்ட்,
மெலிந்த இறைச்சி,
தோல் எடுக்கப்பட்ட சிக்கன்,
சல்மோன் மற்றும் டியூனா
போன்ற மீன்கள், ஷெல்ஃபிஷ்
(சிப்பி நண்டின நீர்வாழ் உயிரி)

**புரதங்களின் நன்மைகள்:**

1) தசை வலிமையை அதிகரிக்கிறது

புரதங்கள் தசை வளர்ச்சிக்கும் உடலின் பராமரிப்பிற்கும் வெகுவாக உதவுகின்றன. தசைகள் பலமாகவும் ஆரோக்கியமாகவும் இருக்க துணை நிற்கும் . விளையாட்டு வீரர்கள், சிறுவர் மற்றும் பெரியவர்களுக்கும் தசைகள் உறுதியாக இருக்க புரதச்சத்து உதவுகிறது ஒருவர் நிறை இழக்கும்போது தசையின் தன்மையை பாதுகாக்கவும் இது உதவுகிறது.

2) நீண்ட நேரம் பசியின் கட்டுப்பாடு

காபோவைதரேட் மற்றும் கொழுப்புச் சத்து குறைவாக உள்ள புரோட்டின் பசியை நன்றாக அடக்குகிறது. நீண்ட நேரம் பசிக்காமல் உடலை வைத்திருக்கிறது . உடல் பருமன் கூடாமல் வைத்திருக்கும், கலோரியும் அதிகரிக்காமல் இருக்கும். இது உடலில் உள்ள பசி ஓமோன்களை ஒழுங்குபடுத்தவும் உதவு கிறது. இதனால் தேவையற்ற நேரத்தில் உண்பதைத் தடுக்கிறது.

3) குருதியில் உள்ள குளுக்கோஸ் அளவு கட்டுக்குள் இருக்கும்

அதிக கார்போவைதரேட் உணவுகள் இரத்தத்தில் குளுக்கோசு அளவை அதிகரித்து விடும். ஆனால், புரதச்சத்துள்ள உணவுகள் குளுக்கோசு அளவை உயர்த்துவது இல்லை.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4) அனுசேபத்தை / வளர்சிதை மாற்றத்தை ஊக்குவிக்கிறது

உடலின் மெட்டபாலிசம் எனப்படும் அனுசேபத்தை ஊக்குவிக்கிறது இதனால் உடல் உறுப்புகள் நன்றாக வேலை செய்யவும், சமிபாட்டு பிரச்சினைகள் அகன்று சமிபாட்டு தொகுதி நன்றாக வேலை செய்கிறது.

5) நிறை இழப்புக்கு உதவுகிறது.

சமிபாடு என்பது நமது உடலுக்கு மிகவும் கடினமான மற்றும் சக்தியைச் செலவழிக்கும் பணிகளில் ஒன்று. புரதங்கள் உடலில் கொழுப்பை எரியச்செய்யும் செயல்முறையை துரிதப்படுத்துகிறது. சரியான உடற்பயிற்சியுடன் புரதங்களை உட்கொள்வது எடை இலக்கை அடைய பெரிதும் உதவும்.

6) எலும்புகளுக்கான வலு

எலும்பு ஆரோக்கியத்தை பாதுகாக்கிறது. புரதச் சத்துள்ள தின்பண்டங்கள் எலும்புகளுக்கு தேவையான கல்சியம் மக்னீசியம் பொஸ்பரஸ் போன்றவற்றை உள்ளடக்கி இருப்பதால் எலும்புகள் ஆரோக்கியமாக இருக்கின்றன. எலும்பு முறிவுகளிலிருந்து பாதுகாக்கிறது. புரதங்கள் தசை வளர்ச்சிக்கு உதவுவதோடு, எலும்புகள் தேய்மானம் ஏற்படாமல் பாதுகாக்கிறது.

7) குறைந்த இரத்த அழுத்தம்

உயர் புரத உணவு ஆரோக்கியமான இரத்த அழுத்த அளவை பராமரிக்க பெரிதும் உதவுகிறது. உணவில் புரதங்களை சேர்த்துக்கொள்வது ஆரோக்கியமற்ற தின்பண்டங்களை உட்கொள்வதைத் தடுக்கிறது. புரதங்கள் நம் உடலை நல்ல கொழுப்புகளால் நிரப்புகின்றன. உடலில் உள்ள கெட்ட கொழுப்பைக் குறைக்க உதவுகிறது, இதனால் பக்கவாதம் மற்றும் மாரடைப்புகளைத் தடுக்கும் காரணியாக செயல்படுகிறது.

8) நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்கிறது

புரதங்கள் நம் உடல் நோய்வாய்ப்பட்டால் விரைவில் குணப்படுத்த உதவுகின்றன, மேலும் உடலில் நோய் எதிர்ப்பு சக்தி மேம்படவும், நோய்த்தொற்றுகளுக்கு எதிராக போராடும் பல்வேறு பிறபொருள் எதிரிகளை உற்பத்தி செய்யவும் உதவுகின்றன.

காலையில் 11 மணிக்கு அல்லது மாலை நேரங்களிலோ லேசாக பசிக்கும். அப்போது வறுத்த புரத உணவுகளை தானியங்களை உண்டால் நாவுக்கு சுவையாகவும் இருக்கும். அதேவேளை உடல் பருமன் முதற்கொண்டு நீரிழிவு, இரத்த அழுத்தம், கொலஸ்ட்ரோல் என பலவிதமான பிரச்னைகளை தடுக்கவும் அது உதவும். எனவே அதிக புரதம் உள்ள தின்பண்டங்களை உண்பது ஆரோக்கியமானது. வேக வைத்த கடலை, பாசிப்பயிறு, உலர் பழங்கள், ஆளி விதைகள், பூசணி விதைகள், சியா விதைகள் போன்றவற்றில் புரதம் நிறைந்துள்ளது. நன்றி.

- தொடரும் -


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தொடர்கதை** | **ஏ. எம். கஸ்புள்ளா** | **2**




**அங்கம் 02**

"நீங்க, தற்போது என்னவா இருக்கிறீங்க?" என்ற முதல் வார்த்தைகள் அவனுக்குள்ளிருந்து வெளியாகின. அதற்கு அவள் பதில் தரமுதலிலே... அடுத்த வார்த்தையும் "இன்று உங்கள் றெஸ் அழகாக உள்ளது. மிகவும் பொருத்தமான நிற செலக்ஸன் செய்துள்ளீங்க. நீங்க எப்போதும் இப்படித்தானா அணிந்து கொள்வது? இல்லையென்றால் இன்று மட்டும் ஸ்பெஷலா?" - வார்த்தைகள் அடுக்கடுக்காக, ஏற்கனவே பழகியது போன்று எந்த அச்சமும், கூச்சமும் இல்லாமல் அவனது பேச்சு அமைந்திருந்தது. அவளுக்கு இப்படியான வார்த்தைகள் புதிதுதான்.

இருந்தாலும் "அப்படியெல்லாம் ஒன்றுமில்லை. வழமையான றெஸ்தான்" என்று அவனது கேள்விக்கு அவள் பதிலளித்தாள். கிராமத்தில் பிறந்து வளர்ந்தாலும் நகர பாடசாலையில் கல்வியைக் கற்றுக் கொண்டுள்ளாள். அதனால் சரத்தின் பேச்சுக்கள் இப்படியிருப்பதில்லை. அவள் ஆச்சரியம் கொள்வதற்கில்லை.

"என் பெயர் சரத். தலைநகர் கொழும்பில் வேலை பார்த்துவிட்டு மாற்றலாகி சொந்த ஊருக்கே வந்திட்டேன். இப்போது மாவட்டச் செயலகத்தில் அபிவிருத்தி உத்தியோகத்தராக கடமை செய்கின்றேன்." தன்னை அவளிடம் அறிமுகம் செய்தான்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதே நேரம் தங்கள் குடும்பத்துடன் உள்ள உறவையும் அவளிடம் மெல்ல சொல்லி நின்றான். அன்று கச்சேரிக்கு உங்கள் அம்மா தேவையின் நிமித்தம் வந்தவங்க எங்கள் வீட்டுக்கும் வந்து போனார்கள். எனது அம்மா சிங்களம் அப்பா தமிழ். இருவரும் கலப்புத் திருமணம். அந்த வகையில் எனக்கும் தமிழ் நன்றாக பேசிட வரும். உங்கள் அம்மா எங்கள் அப்பாவழி உறவு என்றும் பேசிக் கொண்டார்கள்.

"அன்று அம்மா வந்த நேரம்தான் கட்டாயம் எங்கள் எல்லோரையும் வீட்டுக்கு வருமாறு அழைப்பு விடுத்தார்கள். அதன் நிமித்தம் இன்று உங்கள் வீட்டுக்கு வரக்கிடைத்தது" என சரத் சொல்லி முடித்தான்.

அவளும் "என் பெயர் கீர்த்தனா. பள்ளிப் படிப்பை முடித்து விட்டு பல்கலைக் கழக வாய்ப்பை எதிர்பார்த்துக் கொண்டிருக்கின்றேன். வீட்டில் இப்போது சும்மா இருக்காமல் ஆங்கிலப் பயிற்சி நெறிக்குப் போயிக்கொண்டிருக்கிறேன். எனக்கு தந்தையில்லை. சின்ன வயதிலிருந்து என்னை படிக்க வைத்து இந்தளவுக்கு ஆளாக்கியது எல்லாம் அம்மாதான். அப்பாவின் உடன் பிறப்புகள் பக்கத்தில் வசித்து வருகின்றனர். அவசரத் தேவைப்பாடுகள் இருந்தால் அவர்களிடம் தொலைபேசி மூலம் எடுத்துச் சொல்லுவேன். அவர்கள் வந்து செய்து தருவார்கள்" என குடும்ப நிலையைச் சொல்லி முடித்தாள்.

இருவரும் கதைத்துக் கொண்டிருக்கையில் பகல் உணவை உண்பதற்காக கீர்த்தனாவின் அம்மா விருந்தாளியாக வருகை தந்த சரத்தை அழைத்திட்டு உள்ளே வருமாறு சொல்லிட இருவரும் கைகளைக் கழுவிக்கொண்டு சாப்பிடச் சென்றனர்.

நீண்ட மேசையில் பல கலப்புணவுகள், பழவகைகள் எல்லாம் வைக்கப் பட்டிருந்தன.

"உங்களுக்கு பெரும் சிரமம் கொடுத்துவிட்டோம் போல" சரத் கீர்த்தனாவின் அம்மாவைப் பார்த்துக் கூற... "இதெல்லாம் என்ன சிரமம். கீர்த்தனா பாடசாலை விடுமுறை வந்தால் தன் தோழிகளும் கூட வந்து தங்கியிருந்து போயினம். எத்தனை நாள் என்றாலும் பரவாயில்லை. இவையெல்லாம் சுமையாக நாங்கள் நினைக்கவேயில்லை."

அங்கு வைக்கப்பட்ட உணவுகளில் சரத்திற்குப் பிடித்த இறால் மற்றும் மீன் பொரியல், கீரைச் சுண்டல் என சுவையான சாப்பாடு. போதும் போதும் என்று சொல்லும் வரை சாப்பாடு பறிமாறப்பட்டன.

பகல் சாப்பாடு முடிந்ததும் சிறிது ஓய்வை எடுத்துக் கொண்டனர். மாலைநேரமும் நெருங்கிட ஊருக்கு சரத் தன் குடும்பத்துடன் ரெடியானான். கீர்த்தனாவின் அம்மா தங்கிருந்து போகலாமே என்று சொன்னபோது நாளை வேலை நாள் என்பதால் அவர்கள் போயாகியே வேண்டும் என்றிருந்தது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்னொரு நாள் பார்க்கலாம் என்ற பதிலோடு புறப்பட்டுச் சென்றனர்.

அன்று திங்கட் கிழமை என்ற படியால் அலுவலகலத்தில் வேலைகள் கொஞ்சம் அதிகமாகத்தான் இருந்தன. பல்வேறு தேவைகள் நிமித்தம் பொது மக்கள் வந்து போவார்கள். சரத் கொழும்மில் வேலை செய்த அனுபவத்தால் அவனது எந்த வேலையும் பெண்டிங் இல்லாமல் அன்றன்று முடித்துக் கொள்ளும் ஆற்றல் உள்ளவன். அதே நேரம் ஏனைய ஸ்டாபுடனும் தன்னை நாடிவரும் மக்களிடமும் நல்ல முறையில் பழகும் தன்மையும் அவனிடமிருந்தது.

சட்டென கைத்தொலைபேசி அழைப்பு வருவதை உணர்ந்தவன் ஒன் செய்தான். அது நண்பன் சாதீரின் அழைப்பு. சரத் அலுவலகத்தில் இருப்பதை உணர்ந்ததால் சாதீர் அதிகம் பேசாமல் தான் சந்திக்க வரும் விடயத்தை மட்டும் சொல்லி முடித்துக்கொண்டான்.

வேலை முடிந்து வீட்டுக்கு வந்த சரத் தனது அம்மாவிடம் நண்பர் சாதீர் வரவிருப்பதைச் சொன்னான். அதைக்கேட்ட அவனது அம்மா "அப்படியா? அந்தத் தம்பி நமக்கு எவ்வளவு உதவிகள் புரிந்துள்ளான். வரட்டும் வந்து தங்கியிருந்து போகட்டும்."

"இங்கு விருந்தாளியா அவன் வரவில்லையம்மா! அவனது கலியாண விடயம் முடிவாகிற்று. அதற்கு அழைப்பிதழ் தரவே இங்கு வருகிறான்."

"அதுவும் நல்ல விசயம்தான். சாதீரின் கலியாணத்திற்கு கட்டாயம் நாம் போயாகணும்."

"சனிக்கிழமை வருகிறான் அவனுடன் நேரடியாக எல்லாம் கதைப்போம். அம்மா நான் அப்பாவின் தோட்டத்தை கொஞ்சம் பார்த்திட்டு வருகிறேன்." அவன் கிளம்பினான்.

இன்று சரத் இந்த நிலையில் இருப்பதற்கு சாதீர்தான் காரணம். அவன் இல்லாவிட்டால் எங்கள் மகன் எங்களுக்கு கிடைத்திருப்பானா தெரியாது. சரத் பற்றிய பழைய நினைவுகளை நினைத்துப் பார்த்தவள் கடவுளை கையெடுத்து கும்பிட்டாள். சரத்திற்கு தெரியாது சாதீர் எப்படி எந்த நிலையில் அவனுக்கு உதவினான் என்று. சரத் பற்றிய விடயம் இன்னும் இரகசியமாகத்தான் இருக்கிறது. இப்போதைக்கு அவ்வாறு இருப்பதுதான் அவனது பழைய விடயங்களை மறந்து வாழமுடியும். சரத் பற்றிய அந்த நினைவுகளிலிருந்து மீண்ட அவனது அம்மா இரவுநேர சமையலுக்காக சமையல் அறைக்குள் சென்றாள்.

தோட்டத்திற்குச் சென்ற சரத் அப்பாவின் வேலைகளை பார்வையிட்டான். அங்கு கத்தரிச் செடி ஒரு பகுதியிலும் இன்னொரு பகுதியில் வெண்டிக்காயும் சில பூத்தும் சில காய்த்தும் கிடந்தன. அவை எல்லாவற்றுக்கும் அப்பா மோட்டார் இயந்திரத்தின் மூலம் தண்ணீர் பாய்த்துக் கொண்டிருந்தார். காலை தொடக்கம் மாலைவரை இவ்வாறு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சீக்கிரத்தில் மறந்திருக்கமாட்டார். அவரின் இன்னொரு மகனாக அவனைப் பார்க்கிறார். சரத் நினைவற்று இருந்த போது பல விடயங்கள் மறந்திருந்தான். நினைவுகள் திரும்பிய போதும் சில ஞாபகங்கள் அவனுக்குள் மீள வரவில்லை. மறந்தே உள்ளன. அவ்வாறு வராமல் இருப்பது அவனது எதிர்கால வாழ்வுக்கு நல்லது.

பயிர்களுக்கு என்ன செய்யனுமோ எல்லாவற்றையும் முறையாகச் செய்துவிட்டுத்தான் வீடு திரும்புவார்.

இவ்வளவு காலமும் என் கல்விக்காக அவர் பல கஷ்டமான தொழில்களை செய்துள்ளார். அதனால் அவரிடம் சேமிப்பு என்பது இல்லாமையே இருந்தது. இப்போதுதான் பணத்தை ஓரளவு சேமித்து ஒரு காணியை வாங்கி தோட்டம் செய்து வருகின்றார்.

சரத்தைக் கண்டதும் "என்ன மகன் இந்தப் பக்கம்" அப்பா கேட்டிட "தோட்டத்தைப் பார்க்கத்தான் வந்தேன் அப்பா!" என்று அவருக்கு பதிலளித்தான். "சரிமகன். என்ற வேலை முடிந்து விட்டது. இனி நான் வீட்டுக்குப் போகும் நேரம்" என்று இருவரும் கதைத்துக் கொண்டு கால் நடையாக வீட்டை வந்தடைந்தனர்.

இரவுச் சாப்பாட்டின் நேரம். நண்பன் சாதீர் ஊருக்கு வரவிருப்பதை சரத் தன் அப்பாவிடம் எத்திவைத்தான். "ஓ வரட்டுமே" என்று சந்தோசமாக பதிலளித்தார். அவர் சாதீரை அவ்வளவு

நினைவுகள் திரும்பும்போது அதை தனக்குள் ஒரு கெட்ட கனவாக நினைத்து புதிய வாழ்வுக்கு காலடி வைக்கின்ற மன நிலையை உருவாக்கினால் நல்லது இது வைத்தியரின் அறிவுரையாக இருந்தது. மகனின் நினைவுகளில் கடந்தவர் அன்றைய சாப்பாட்டை முடித்துக் கொண்டு சற்று நேரத்திற்குப் பின்னர் தூக்கத்திற்காகச் சென்றார்.

கிராமத்தின் அழகிய விடியல் மறைந்து செல்லும் மஞ்சள் வானம். நெஞ்சம் நிறைந்த சந்தோசத்தின் அலைகளை திரும்பும் பக்கமெல்லாம் காணக்கூடியதாக இருந்தது பறவைகளின் இன்னிசை பறக்கும் முன்னே ஒலித்து நிற்கும். அதுவே மனிதர்களை துயில் எழுப்பும் மந்திர ஒலிகள்.

இவ்வாறான பொழுதுகளின் அழகியலை நகரத்தில் காண முடிவதில்லை. அங்கே வாகன இரைச்சலுக்கு மத்தியில் பொழுது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விடியும். "அந்த வாழ்க்கையும் நான் வாழாமலில்லை" என்று வீட்டுக்கு முன்னால் பரந்து விரிந்த நிழல் தரும் வேம்பு மரத்தின் கிளைகளில் சிறு துண்டை முறித்து சுத்தப்படுத்தி தனது பற்களின் இடைகளில் சரத் தேய்த்து தேய்த்து நின்றான்.

கிராமங்களில் பல் துலக்கும் விதங்களில் இதுவும் ஒன்று. "ஆலும் வேலும் பல்லுக்குறுதி. நாலும் ரெண்டும் சொல்லுக்குறுதி" என்பதை கிராம மக்கள் கடைபிடித்து வருகிறார்கள்.

மற்றுமொரு பல் துலக்கும் முறை பல்பொடியாகும். எரிந்த சாம்பலை அல்லது விறகுக் கரிகளை எடுத்து பற்களை கிராம மக்கள் சுத்தம் செய்வதாகும். கிராமங்களில் இந்தப் பல்பொடி தயாரிப்பு தொழிலாகவும் செய்து வருகிறார்கள். வீண் செலவற்றதும் உள்ளதைக் கொண்டு வாழ்கின்ற வழிமுறையாக கிராம மக்களது வாழ்வு அமைந்துள்ளது. சில பணம் படைத்தவர்களிடம் காண முடியாத பண்பும் பரிவும் நல்ல மன நிம்மதியும் நிறையவே இவர்களிடம் உள்ளது.

இவற்றையெல்லாம் உணர்ந்த சரத் "பெருமைப்படக்கூடிய ஊர் எனது ஊர்" என்று தனக்குள்ளே நினைத்துக் கொண்டு காலைக்குளியல் குளித்துக் கொண்டு தன் மேனியில் உள்ள ஈர ஆடைகளைக் களைந்து கொண்டு அதனைக் கையில் எடுத்துக் கொண்டு உலர வைப்பதற்காக வெளியே வந்தான்.

வயல் வெளி வரம்புகளில் யாரோ ஒருவர் நடந்து வருவது தெரிந்தது. எதையோ அவர் விசாரிப்பதும் கொஞ்சம் விளங்கத்தான் செய்தது. அங்கிருந்து அந்த மனிதர் நமது வீட்டுக்குத்தான் வருகிறார். அவர் அருகில் வந்ததும் கண்களுக்குத் தெளிவானது. அடடா நண்பன் சாதீர். அவனை கட்டித் தழுவி வரவேற்றவனாக,

"ஏன் சாதீர்! வந்து கோல் எடுத்திருந்தால் பஸ் நிலையத்திற்கு வந்திருப்பேனே" சாதீரைப் பார்த்து சரத் கேட்க "ஊரைப்பார்த்து நீண்ட நாளாகிவிட்டது. அதுதான் கால் நடையாகவும் ஆட்டோவிலும் ஒரு சுற்றல் சுற்றி வந்து சேர்ந்தேன்" என சாதீரின் பதிலமைந்தது.

சாதீரை உள்ளே சரத் அழைத்துச் சென்றான். வீட்டு முன் வராந்தையில் அமர்ந்து கொண்டு சிறு உரையாடல் இருவருக்கும் தொடங்கின. வெசாக் காலம் தானே வீதியெல்லாம் தான தர்மம் மற்றும் குளிர்பானம் வழங்குவதிலும் இன்னும் இளைஞர் யுவதிகள் பயணிகளுக்கு தண்ணீர் வழங்குவதிலும் ஈடுபாடு காட்டி நின்றார்கள். அவற்றையெல்லாம் குடித்துக் கொண்டு பயணம் அமைதியாக கழிந்தது. இம்முறை ஐஸ் கிறீம் கூட தந்தார்கள். எனவேதான் பயணச் செலவு மிகுதியானது.

இருவரின் உரையாடலை கேட்டு சரத்தின் அம்மா எட்டிப் பாரத்தாள். அது சாதீர். "நல்ல படியாக வந்திட்டீங்களா


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தம்பி?" என்று அவனைப் பார்த்து வினவிக் கொண்டு குடிக்க எதுசரி கொண்டு வருகின்றேன் என்று சொல்லிச் சென்றாள்.

"சாதீர் நீயும் கொஞ்சம் உறங்கி ரெஸ்ட் எடு. நான் கடைப்பக்கம் போயி வருகின்றேன். இந்த அறையைப் பயன்படுத்திக் கொள்" என்று அவனிடம் சொல்லி அம்மாவிடம் சாதீர் உறங்கட்டும் தேவையானதை கொடுங்க. "அம்மா, என்னென்ன பொருள் வாங்கனும்? அந்த லிஸ்டையும் தந்தால் இலகுவாக இருக்கும். ஒரே தடவையில் வாங்கிட்டு வந்திடுவேன்." சரத் அம்மாவின் கையிலிருந்த லிஸ்டை வாங்கிக் கொண்டு சென்றான்.

சாதீர் ஓய்வெடுத்து எழுந்தவன் குளித்து ரெடியானான். சற்று நேரத்தில் சரத்தின் அப்பா தோட்டத்தில் இருந்து வீட்டுக்குள் நுழைய முன் கை, கால்களை கழுவிக் கொண்டு உள்ளே வந்தார்.

சாதீரை அவர் கண்டதும் "தம்பி நலமா?" என விசாரித்துக் கொண்டு அங்கு போடப்பட்ட கதிரையில் அமர்ந்தவர், அவனையும் உட்காருமாறு சொன்னார். அது பழங்கால கதிரைகள். கைவேலைப்பாடுகளின் அழகினை கண்ட சாதீர் வியந்தான். "இந்தக் கதிரைகள் உங்களின் காலத்தில் செய்யப்பட்டதா?" என்று சாதீர் கேட்டான். "இல்லப்பா எனது அப்பாவின் காலத்தில் செய்யப்பட்டது நான் பிறக்கும் முன்னே இந்தக் கதிரைகள் இந்த வீட்டிலேதான் இருந்தன. தலைமுறை தலைமுறையாகப் பாவித்து வருகிறோம்"என்று சாதீரின் கேள்விக்கு அவர் பதிலளித்தார்.

"அத்துடன் உங்களுக்கு கலியாணம் என்று மகன் சொன்னார். எப்போது? எங்கே நடக்கப் போகுது?" எனவும் வினவினார். "அந்தக் கலியாணத்திற்கு அழைக்கத்தான் நான் இங்கு வந்ததே! எட்டாவது மாதம் நடக்கவுள்ளது. குடும்பத்துடன் நீங்க எல்லாரும்




Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

கலந்து கொள்ளனும்" என்று சரத்தின் அப்பாவிடம் சாதீர் சொன்னான்.

"கட்டாயம் உன் கலியாணத்திற்கு வருவோம் தம்பி. ஒரு நாளைக்கு முன்னமே அங்கு வந்து சேர்ந்திடுவோம். சந்தோஷம்தானே!" பதிலுக்குச் அவரும் சொன்னார்.

அதற்கிடையில் கடைக்குச் சென்ற சரத்தும் வீடு திரும்பினான். பகல் உணவு ரெடியானது. எல்லோருமாகச் சேர்ந்து சாப்பிட்டார்கள். "இதற்குப் பெயர்தான் சஹன் சாப்பாடு என்ன?" சரத் சாதீரிடம் சொல்ல, "ஆமாம்" என்று தலையசைத்தான்.

சாப்பிட்டு முடிய "நமக்கும் ஒரு மருமகள் வந்தால் வீட்டுக்கும் எனக்கும் துணையாய் இருப்பாள்" சரத்தின் அம்மா மனதில் இருந்ததையும் மகனுக்கு நல்ல துணையொன்றை அமைத்துக் கொடுப்பதிலும் உள்ள ஆசையை மனம் திறந்து இத்தருணத்தில் பேசினார்.

"நீங்க சொல்வது சரிதான் அம்மா! உங்களுக்கும் வயதாகிக் கொண்டு போகுது. இப்போதிலிருந்து மணமகள் தேடும் படலத்தை ஆரம்பிப்போம்" என்று சாதீரும் அம்மாவுக்கு ஆதரவாகப் பேசினான். சரத்தின் முகத்தில் ஒரு மெல்லிய புன்னகை வெளியானது. அவனால் அந்த நேரத்தில் கர்த்தனா மனதில் இருப்பதைச் சொல்லிக் கொள்ள முடியவில்லை. அவளின் மனதில் என்ன இருக்குமோ என்ற தயக்கத்தில் அமைதி காத்தான்.

"சாதீர் தம்பி, இன்னும் இரண்டு நாள் இருந்து போகலாம்தானே. அப்போது படிக்கும் காலத்தில் வந்த நீங்கள் இப்போதுதான் வந்துள்ளீர்கள்" என்று இடையில் வினயமாகக் கேட்டிட, "இல்லை அம்மா எனக்கு அங்கு அதிகமான வேலைகள். நான் போனால்தான் முடியும் அதிகமானவர்களுக்கு கலியாண அழைப்பிதழ் கொடுக்கவில்லை. இப்படி எத்தனையோ வேலைகள் கிடக்கிறது. அதனால்தான் இரண்டு நாளல்ல இன்றைய இரவு மட்டும் தங்கிச் செல்கின்றேன். நாளைக்குப் புறப்படுகின்றேன்" என்று உடன்பட்டான்.

அன்றிரவு நண்பன் சரத்தின் அறையில் பல்கலைக்கழக வாழ்வு தொடக்கம் இன்று வரையில் எல்லாமே கதைத்து முடித்து விட்டார்கள். இருந்தும் ஒன்றும் மட்டும் சரத் மறந்திருந்தான். அவனது பழைய வாழ்வில் திருமணம் என்ற ஒன்று நடந்தது என்பது பற்றி அவன் கதைக்கவே இல்லை.

அடியோட மறந்திட்டாணா? இல்லை, அதை மறந்திருப்பதுதான் நல்லது என்று நினைக்கிறானா? ஒன்றும் விளங்கவில்லை. அதனை சாதீராலும் புரிந்து கொள்ளவும் முடியவில்லை. சரத்திற்கும் நல்ல துணை அமைய வேண்டும் என மனதிற்குள் நினைத்துக் கொண்டான். அன்றைய இரவுகளின் பாதிநேரம் கதையிலே கழிந்து சென்றாலும் எஞ்சிய நேரங்களில் இருவரின் கண்களிலும் தூக்கம் மிகைத்து நின்றன.

**வரிகள் தொடரும்...**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**புலனாய்வுச் சிறுகதை:**

# வனஜாவின் நிழல் வதனா!



**— செம்மைத்துளியான் —**

அடிக்கடி தொலைபேசி அழைப் பெடுத்து யாரிடமாவது பேசுவது, வருகின்ற அழைப்புக்களோடு நீண்ட நேரம் சாவகாசமாக பலதையும் பத்தையும் உரையாடிக் கொண்டிருப்பது, ஒரு முறை ஒரு மனிதரை நேரடியாகப் பார்த்துவிட்டால், அவர் எவராக இருந்தாலும் சரி, அவரின் தொலைபேசி இலக்கத்தை நாசூக் காகத் தேடி எடுத்து, தொடர்பை ஏற்படுத்துவது வதனாவிடமுள்ள அருவருக்கத்தக்க ஒரு கெட்ட பழக்கம் இதுவாகும்.

கணவர் வெளிநாட்டில் இருக்கிறார் என்ற நினைப்பு. தன்னைக் கேள்வி கேட்க எவருமில்லை என்ற மமதை. வதனாவின் இந்தப் போக்கு அவளைச் சுற்றி இருப்பவர்களுக்கு ஒரு விசித்திரமான மர்மமாக இருந்தது!

அவள் ஒரு சாதாரண பெண்ணாகத் தோன்றினாலும், தொலைபேசி உரையாடல்களில் அவளிடம் ஒரு தீவிரமும், தொடர்புகளைத் தேடி அலைவதில் அவளுக்கு ஒரு துல்லியமும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருந்தது. அவள் பேச்சிலும் ஒரு கவர்ச்சி . அதற்குப் பின்னால் எதையோ மறைப்பது போன்ற ஒரு வெளிப்பாடு!

ஒரு பொன் அந்தி மாலை, வதனா தனது அறையில் அமர்ந்து, மொபைலில் ஒரு பழைய நண்பரின் இலக்கத்தைத் தேடிக் கொண்டிருந்தாள். அவள் கண்கள் திரையில் ஓடினாலும், மனம் வேறு எங்கோ இருந்தது!

அப்போது, அவளது மொபைலே ஒலித்தது, தெரியாத ஓர் இலக்கத் திலிருந்து அழைப்பு வந்ததால், கொஞ்சம் தயங்கி, அதன் பின், போனை எடுத்தாள்.

"ஹலோ?" மெதுவாக அவள் பதிலளித்தாள்!

மறுமுனையில் ஒரு கம்பீரக் குரல் ஒலித்தது.

"வதனா, இப்போது உன்னை நான் கண்டுபிடித்து விட்டேன்."

அவள் முகத்தில் ஒரு பதற்றம். இந்தக் குரல் அவளுக்கு அந்நியமாக இருந்தாலும், அது ஒரு பழக்கமான தொனி அதில் ஒலித்தது.

"நீங்கள் யார்? எப்படி என்னைத் தெரியும்?" அவள் கேட்டாள் குரலில் உறுதி குறையாமல்.

"நீ மனிதர்களைத் தேடுவது போலவே, நான் நீண்ட காலமாக உன்னைத் தேடினேன். ஆனால், உனது விளையாட்டு இனிமேல் மாறத்தான் போகிறது!"

திடீரென அழைப்பு துண்டிக்கப் பட்டது. வதனாவின் இதயம் வேகமாகத் துடித்தது. அவள் மொபைலை இறுகப் பற்றியபடி, அறைக்கு வெளியே தனது கண்களைச் சுழல விட்டாள்.

ஜன்னல் திரைச்சீலை மெல்ல அசைந்தது. எழுந்து சென்று வேகமாக யன்னலை மூடினாள்.

ஆனால், மனதில் பல கேள்விகள் எழுந்தன. 'யாரிவன்? தன்னைப் பற்றி தெரிந்து வைத்திருக்கும் இவன் ஏன் என்னைத் தொடர்கின்றான்?' அதற்கு மேல் அவளால் அமைதியாக இருக்க முடியவில்லை. செல்ஃபிலிருந்த பழைய டைரியை எடுத்து, குறித்து வைத்திருந்த தொலைபேசி இலக்கங்களைப் புரட்டத் தொடங்கினாள்.

ஒவ்வொரு பெயரையும்.. ஒவ்வொரு உரையாடலையும் மனதில் அசை போட்டாள். இந்த மர்ம மனிதன்... அவளது கடந்த காலத்துக்குள் எங்கோ ஒரு மூலையில் மறைந்திருக்க வேண்டும்.

அப்போது, அவள் கவனித்தாள்... ஒரு பெயர்... ஒரு இலக்கம், பல ஆண்டுகளுக்கு முன் கிறுக்கப்பட்டு பின்னர் கோடிடப் பட்டிருந்தது.

"அர்ஜுன்!" அவள் மூச்சு ஒரு கணம் நின்றது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அர்ஜுன் - அவள் வாழ்க்கையில் ஒரு முறை மட்டுமே சந்தித்தவன். ஒரு மழைத் தூறல் மாலை வேளையில்... அவள் வனஜாவாக இருந்தபொழுது... ஒரு பயணத்தின் போது... சில மணி நேர உரையாடல். அப்போது அவனது கண்களிலிருந்த ஆழம், அவனது புன்னகையின் மர்மம்... அவள் நினைவுக்கு வந்தன.

அதன் பின்னர், அவனைப் பற்றி நீண்ட காலமாக அவள் எதுவும் தேடவில்லை. அவனாகவே அவள் மனதிலிருந்தும் மறைந்து போனான்.

அவள் விரல் தயங்கியபடி அந்த இலக்கங்களை மொபைலில் ஒவ்வொன்றாக அழுத்தியது.

"வனஜா" அதே குரல் மீண்டும் ஒலித்தது.

"நீ என்னை மறக்கவில்லை, இல்லையா?"

அவள் மனதில் எண்ணங்கள் சுழன்றன. இது ஒரு விளையாட்டா அல்லது ஏதோ பெரிய ஆபத்தின் தொடக்கமா? வதனா மெல்ல பதிலளித்தாள்.

"அர்ஜுன், நீ என்னை விரும்புகிறாயா?" - மறுமுனையில் ஒரு சிரிப்பு.

"நான் விரும்புவது உன்னை, ஆனால், முதலில், நீ என்னை யாரென்று கண்டுபிடிக்க வேண்டும்"

அழைப்பு மீண்டும் துண்டிக்கப் பட்டது. வதனாவின் கைகள் நடுங்கின. அவள் மொபைலை மேசையில் வைத்துவிட்டு, ஆழ்ந்த மூச்செடுத்தாள்.

இது ஒரு சவால்... அவள் வாழ்க்கையில் எப்போதும் தேடப்பட்டவள், இப்போதும் தேடப்படுபவளாக மாறியிருக் கின்றாள். ஆனால், வதனா ஒரு விஷயத்தை உறுதியாகத் தீர்மானித்தாள் - இந்த மர்மத்தை அவள் கண்டறிவாள்.

அவள் டைரியை மூடி வைத்துவிட்டு, தன் கோட்டை எடுத்து அணிந்தாள். வெளியே மழை தூறத் தொடங்கியிருந்தது. அவள் வீட்டை விட்டு வெளியேறி, இருளில் மறைந்தாள் அர்ஜுனைக் கண்டறியும் பயணத்தை அவள் இப்போது தொடங்கி விட்டாள்!

மழைத்துளிகள் வதனாவின் முகத்தில் மென்மையாக விழுந்தன, ஆனால் அவள் மனம் ஒரு புயலாகச் சுழன்று கொண்டிருந்தது. அர்ஜுனின் குரல் அவள் காதுகளில் ஒலித்தபடியே இருந்தது - அதில் ஒரு கிண்டல் ஓர் ஆபத்து!

அவள் தெருவோரத்தில் நடந்து கொண்டிருந்தபோது, கொழும்பு நகரத்தின் இரவு அவளை ஒரு மாய உலகத்திற்கு இழுத்துச் செல்வது போலிருந்தது.

மஞ்சள் விளக்குகளின் ஒளியில், மனிதர்கள் நிழல்போல் நடமாடினர்.

வதனாவின் மனதில் ஒரு திட்டம் உருவாகத் தொடங்கியது. அர்ஜுனைப்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பற்றி அவளுக்கு நினைவிலிருந்த ஒரே தகவல்... ஒரு பழைய க∴பே, “நிலவொளி க∴பே”

அந்த இடம் இப்போது அவளுக்கு ஒரு துப்பாக இருந்தது.

அவள் ஒரு ஆட்டோவை அழைத்து, “நிலவொளி க∴பே, வெள்ளவத்தை!” என்று கூறினாள். ஆட்டோ மழையைக் கிழித்துகொண்டு சென்றது!

வதனாவின் மொபைல் மீண்டும் ஒளிர்ந்து ஓய்ந்தது. ஒரு குறுஞ்செய்தி:

“நீ வேகமாகக் கற்றுக் கொள்கிறாய், ஆனால், கவனம். நிலவொளியில் எல்லாமே தெரிவதில்லை” அவள் மூச்சை இழுத்து, செய்தியை மீண்டும் படித்தாள்.

இது அர்ஜுனா? அல்லது வேறு யாரோவா? அவள் மொபைலைப் பாக்கெட்டில் வைத்துவிட்டு, ஆட்டோவின் ஜன்னல் வழியாக வெளியே பார்த்தாள். மழை இன்னும் வலுத்திருந்தது.

நிலவொளி க∴பே... ஒரு பழைய கட்டிடத்தின் மூலையில், மங்கலான விளக்குகளுக்கு நடுவே அமைந்திருந்தது. வதனா உள்ளே நுழைந்தபோது, க∴பேயில் சிலர் மட்டுமே இருந்தனர்... ஒரு மூலையில் ஒரு இளைஞன் தனியாக உட்கார்ந்து புத்தகம் படித்துக்கொண்டிருந்தான்... மற்றொரு மேசையில் ஒரு வயதான தம்பதி மெதுவாகப் பேசிக்கொண்டிருந்தனர். வதனா கவுண்டரை நோக்கி நடந்தாள்.

“ஒரு காபி, பிளாக்,” அவள் ஆர்டர் செய்துவிட்டு ஒரு பக்கமாகப் போய் அமர்ந்தாள். அவளது கண்கள் க∴பேயை ஊடுருவிப் பார்த்தன.

அப்போது, கவுண்டரில் இருந்த பெண், ஒரு விசித்திரமான புன்னகையுடன்,

“நீங்கள் வதனாவா?” என்று கேட்டாள். வதனாவின் இதயம் ஒரு கணம் துடித்தது.

“எப்படி உங்களுக்கு...” அவள் வாக்கியத்தை முடிக்கும் முன், அந்தப் பெண் ஒரு மடித்த காகிதத்தை அவளிடம் நீட்டினாள்.

“இது உங்களுக்கு” என்று கூறி, அவள் வேறு வாடிக்கையாளரை நோக்கி நகர்ந்தாள்.

வதனா காகிதத்தைப் பிரித்தாள். அதில், நீல மையால் எழுதப்பட்டிருந்தது

“முதல் படி சரியானது... ஆனால், இது ஒரு பயணத்தின் தொடக்கம் மட்டுமே. இரவு 11 மணிக்கு, காலிமுகத் திடலில், பழைய கலங்கரை விளக்கத்தின் அடியில் சந்திப்போம்!”

காகிதத்தில் ஒரு சிறிய வரைபடமும் வரையப்பட்டிருந்தது, கலங்கரை விளக்கத்தைச் சுற்றி ஒரு வட்டமிடப்பட்டிருந்தது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவள் கடிகாரத்தைப் பார்த்தாள். மணி 10:15. நேரம் குறைவு. அவள் கா..பியை அவசரமாகக் குடித்துவிட்டு, க..பேயை விட்டு வெளியேறினாள்.

மழை இப்போது தூறலாக மாறியிருந்தது, ஆனால் காற்றில் ஒரு குளிர் பரவியிருந்தது. வெள்ளவத்தையிலிருந்து காலிமுகத் திடல் கொஞ்ச தூரத்தில் இருந்தது. இரவு நேரத்தில் அங்கு செல்வது பாதுகாப்பாகத் தோன்றவில்லைதான் ஆனாலும், வதனாவுக்கு வேறு வழியில்லை.

அர்ஜன் அல்லது இந்த மர்ம மனிதன் அவளை இழுத்துச் செல்கின்றான். ஆனாலும், அவள் பின்வாங்க மாட்டாள்.

கலங்கரை விளக்கத்தின் அடியில், இருள் அவளை விழுங்குவது போல் இருந்தது. அலை ஓசைகள் மட்டுமே கேட்டன. அவள் காகிதத்தில் குறிப்பிடப்பட்ட இடத்தில் நின்று, சுற்றிலும் பார்த்தாள். யாருமில்லை. மணி 11:05!

அவள் பொறுமையிழந்து, மொபைலை எடுத்து அர்ஜுனின் இலக்கத்திற்கு மீண்டும் அழைத்தாள். ஆனால், அது இயங்கவில்லை என்று ஒரு தானியங்கிக் குரல் பதிலளித்தது.

திடீரென, அவள் பின்னால் ஒரு நிழல் அசைவதை உணர்ந்தாள். அவள் திரும்பியபோது, ஒரு உருவம் இருளில் இருந்து மெல்ல முன்னேறி வந்தது. அவனது முகம் மங்கலாகத் தெரிந்தது, ஆனால் அந்த புன்னகை - அதை அவளால் மறக்க முடியாது. "அர்ஜுன்" அவள் முனகினாள்.

"வதனா" அவன் குரல் மென்மையாக ஒலித்தது,

"நீ வந்துவிட்டாயா? ஆனால், இது என்னைப் பற்றிய பயணமல்ல உன்னைப் பற்றியது." என்று கூறிவிட்டு, கையில் ஒரு சிறிய பெட்டியை நீட்டினான்.

"இதைத் திற. உன் கேள்விகளுக்கு முதல் பதில் இதில் இருக்கிறது."

வதனா அந்தப் பெட்டியை எடுத்தாள், ஆனால் அவள் கண்கள் அவனை விட்டும் நகரவில்லை.

"நீ யார்? ஏன் இந்த விளையாட்டு?" அவள் கேட்டாள், அவளது குரலில் கோபமும் பயமும் கலந்திருந்தது.

அவன் சிரித்தான், ஆனால் அந்தச் சிரிப்பில் ஒரு துக்கம் இருந்தது.

"நான் ஒரு நினைவு, ஆனால், நீ இன்னும் உன்னை மறந்திருக்கிறாய்" கூறிவிட்டு அவன் பின்னால் நகர்ந்து, இருளில் மறைந்தான்.

வதனா அவனை அழைக்க முயன்றாள், ஆனால் அவள் குரல் காற்றில் கரைந்தது. அவள் கையில் இருந்த பெட்டியைப் பார்த்தாள். அது பழமையான மரத்தால் ஆனது, மேலே ஒரு விசித்திரமான சின்னம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொறிக்கப்பட்டிருந்தது.. அவள் எங்கோ பார்த்தது போல் இருந்தது, ஆனால் எங்கே என்று நினைவுக்கு வரவில்லை. அவள் அதனைத் திறந்தாள்.

உள்ளே, ஒரு பழைய புகைப்படம், ஒரு சாவி மற்றும் ஒரு காகிதத் துண்டு. புகைப்படத்தில், ஓர் இளம் பெண்ணும் ஓர் ஆணும் கடற்கரையில் நின்றபடி சிரித்துக் கொண்டிருந்தனர். அந்தப் பெண்... அவளைப் போலவே இருந்தாள்.

காகிதத்தில் எழுதப்பட்டிருந்தது: "அடுத்த பதில்: உன் கடந்த காலத்தை நோக்கி- கொழும்பு மத்திய நூலகம், நாளை மாலை 6 மணி."

வதனாவின் மனம் குழம்பியது. இது ஒரு புதிர், ஒரு பயணம், ஓர் ஆபத்து. ஆனால், அவள் ஒரு விஷயத்தை உணர்ந்தாள் - இந்த மர்மத்தின் மையத்தில், அவளது கடந்தகால அடையாளம் மறைந்திருக்கிறது.

வதனா கையில் அந்தப் பெட்டியை இறுகப் பற்றியபடி, கலங்கரை விளக்கின் அடியில் நின்றிருந்தாள். கடல் அலைகள் அவளது எண்ணங்களைப் போலவே கொந்தளித்தன. புகைப் படத்தில் இருந்த பெண்ணின் முகம் அவளை உறுத்திக் கொண்டிருந்தது. அது அவளாக இருக்க முடியாது,

ஆனால் அந்த ஒற்றுமை... அவள் மனதில் ஒரு மூடுபனி படர்ந்திருந்தது, நினைவுகள் மறைந்திருப்பது போல்.

அவள் பெட்டியை மீண்டும் பார்த்தாள். சாவியை எடுத்து உற்று நோக்கினாள் - அது ஒரு பழைய, துருப்பிடித்த சாவி. அதன் மேல் ஒரு சிறிய எண் பொறிக்கப்பட்டிருந்தது: "54". காகிதத்தில் குறிப்பிடப்பட்ட கொழும்பு மத்திய நூலகத்திற்கும் இந்த சாவிக்கும் என்ன தொடர்பு? அவள் மனதில் கேள்விகள் குவிந்தன, ஆனால் பதில்கள் தொலைவில்தான் இருந்தன.

அந்த இரவு வதனா தூங்கவில்லை. அவள் அறையில், மேசையில் புகைப்படத்தையும் சாவியையும் வைத்து, மணிக்கணக்காக அவற்றைப் பார்த்தபடி அமர்ந்திருந்தாள்.

அவள் மொபைலை எடுத்து, அர்ஜுனின் இலக்கத்திற்கு மீண்டும் அழைத்தாள், ஆனால் மறுமுனையில் வெறுமை மட்டுமே. அவள் மனதில் அவனது வார்த்தைகள் ஒலித்தன.

"நீ இன்னும் உன்னை மறந்திருக்கிறாய்." அது என்ன அர்த்தம்? அவள் யார்? மறுநாள் மாலை, கொழும்பு மத்திய நூலகத்தின் பிரம்மாண்டமான கட்டிடத்தின் முன் வதனா நின்றிருந்தாள்.

மணி 5:45. அவள் கையில் பெட்டியும், மனதில் ஒரு பதற்றமும் இருந்தன. நூலகத்தின் உள்ளே, பழைய புத்தகங்களின் மணம்...

நூலகத்தின் அமைதியான சூழலில், வதனா வேகமாக நடந்து, புத்தக


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அலமாரிகளுக்கிடையே சென்றாள். அவள் கண்கள் சுற்றிலும் தேடின - ஏதாவது துப்பு, ஏதாவது அடையாளம். அவள் சாவியை இறுக்கமாகப் பற்றியபடி, ஒரு உள்ளுணர்வு அவளை பழைய ஆவணங்கள் பிரிவுக்கு இழுத்துச் சென்றது. அங்கு, மரத்தாலான ஒரு பெரிய மேசையில், ஒரு பழைய பெட்டி கண்ணில் பட்டது. அதன் மேல் ஒரு பூட்டு - அதில் ஒரு எண் 54.

வதனாவின் இதயம் வேகமாகத் துடித்தது. அவள் சாவியை எடுத்து, பூட்டில் பொருத்தினாள். ஒரு மெல்லிய கிளிக் சத்தத்துடன் பெட்டி திறந்தது. உள்ளே, ஒரு தோலாலான பழைய நோட்டுப் புத்தகம், அதன் பக்கங்கள் மஞ்சள் நிறமாக மாறியிருந்தன. அதனுடன், ஒரு சிறிய உலோகக் குறியீடு - அதே விசித்திரமான சின்னம், பெட்டியில் பொறிக்கப்பட்டிருந்த அதே சின்னம். அவள் நோட்டைத் திறந்தாள். முதல் பக்கத்தில், அவளது கையெழுத்தைப் போலவே இருந்தது. "நீ மறந்தவை உன்னைத் தேடி வரும். அவர்களை நம்பாதே." அவள் மூச்சை இழுத்தாள்.

இது அவளது கையெழுத்தா? ஆனால், இந்த நோட்டை அவள் எழுதிய நினைவு இல்லை. பக்கங்களைப் புரட்டியபோது, வரைபடங்கள், குறியீடுகள், மற்றும் பெயர்களின் பட்டியல் தோன்றின. அவற்றில் ஒரு பெயர் அவளைக் குழப்பியது, 'வனஜா, 2005' அவளது பெயர், ஆனால் அவள் பிறந்தது 1995ல். இது யாரோ வேறு ஒரு வனஜாவா? அல்லது...

அவள் மனம் மறுக்க முயன்ற ஒரு எண்ணம் தோன்றியது - அவளுக்கு மறைந்திருக்கும் மற்றொரு வாழ்க்கை இருக்கிறதா? திடீரென, ஒரு மெல்லிய சத்தம் -நூலகத்தின் மூலையில் இருந்து யாரோ அசைவது போல். வதனா திரும்பினாள், ஆனால் யாரையும் காணவில்லை. அவள் நோட்டையும் குறியீட்டையும் பையில் திணித்து, வேகமாக வெளியேறினாள்.

ஆனால், வெளியே, நூலகத்தின் படிக்கட்டுகளில், ஒரு உருவம் நின்றிருந்தது. மங்கலான விளக்கில், அவனது முகம் தெரியவில்லை, ஆனால் அவன் கையில் ஒரு காகிதத்தை வைத்திருந்தான். "வதனா" அவன் குரல் அமைதியாக ஒலித்தது, "நீ மிக அருகில் இருக்கிறாய். ஆனால், உன்னைப் பார்க்கிறவர்கள் எல்லோரும் நண்பர்கள் இல்லை!"

அவன் காகிதத்தை படிக்கட்டில் வைத்துவிட்டு,இருளில் மறைந்தான்.

வதனா மெல்ல முன்னேறி, காகிதத்தை எடுத்தாள். அதில் ஒரு முகவரி இருந்தது. 'செட்டியார் தெரு, இலக்கம் 23/1/3. இன்று நள்ளிரவு' அத்துடன் மற்றுமொரு வாக்கியம்: "உண்மை உன்னை உடைக்கலாம். ஆனால், பொய்கள் உன்னை அழிக்கும்."

வதனாவின் மனதில் பயம் கலந்த ஆர்வம் எழுந்தது. செட்டியார் தெரு - அது கொழும்பின் பழைய பகுதி, குறுகலான தெருக்களும் மறைவான


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வீடுகளும் நிறைந்த இடம். அவள் கடிகாரத்தைப் பார்த்தாள் - மணி 7:30. நள்ளிரவு வரை இன்னும் நேரம் இருந்தது, ஆனால் அவளுக்கு ஒரு உணர்வு தோன்றியது - இந்த முகவரியில், அவளது கடந்தகாலத்தின் ஒரு பகுதி காத்திருக்கிறது.

அவள் வெளியே நடந்தபோது, ஒரு கார் மெல்ல அவளைக் கடந்து சென்றது, அதன் ஜன்னல் சற்றே திறந்திருந்தது. உள்ளே, ஒரு முகம் அவளைப் பார்ப்பது போல் இருந்தது - அது அர்ஜுனா? அவள் அழைக்க முயன்றபோது, கார் வேகமாக மறைந்தது. வதனா ஒரு ஆழமான மூச்செடுத்து, தன் மொபைலை எடுத்து முகவரியை உள்ளிட்டாள்.

அவள் மனதில் ஒரு எண்ணம் உறுதியாகத் தோன்றியது - இந்தப் பயணத்தில், அவள் தன்னை மட்டுமல்ல, ஒரு மறைந்திருக்கும் உண்மையையும் கண்டறிய வேண்டும். ஆனால், ஒவ்வொரு அடியிலும், ஆபத்து அவளை நெருங்குவதுபோல் இருந்தது.

வதனா செட்டியார் தெருவை நோக்கி நடந்து கொண்டிருந்தாள், அவள் கைகளில் அந்தப் பெட்டியும், மனதில் எண்ணற்ற கேள்விகளும் இருந்தன.

கொழும்பு இரவு அவளை ஒரு மர்ம உலகில் இழுத்துச் செல்வது போல் இருந்தது. குறுகலான தெருக்களில் விளக்குகள் மங்கலாக ஒளிர்ந்தன, அவள் நிழல் தரையில் நீண்டு அசைந்தது. மணி 11:45. அவள் முகவரியை மீண்டும் சரிபார்த்தாள் - செட்டியார் தெரு, இலக்கம் 23/1/3. அவள் மனதில் ஒரு குரல் எச்சரித்தது,


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனால் அவள் பின்வாங்க முடியாது. உண்மை இப்போது மிக அருகில் இருந்தது.

இலக்கம் 23/1/3. ஒரு பழமையான வீடு. அதன் மரக் கதவு பழுதடைந்து, சுவர்களில் பாசி படர்ந்திருந்தது.

வதனா மெல்ல கதவைத் தட்டினாள். உள்ளிருந்து எந்த சத்தமும் வரவில்லை. கைப்பிடியைத் திருகினாள். கதவு திறந்தது.

இருள் அவளை வரவேற்றது. மெல்லிய மெழுகுவர்த்தி ஒளிமட்டும் வீட்டின் உள்ளே தோன்றியது. அவள் உள்ளே நுழைந்தாள்.

வீட்டின் உட்புறம் எதிர்பார்த்ததை விட பெரியதாக இருந்தது, பழைய தளவாடங்களும் புத்தகங்களும் அங்கங்கே குவிந்திருந்தன. மையத்தில், ஒரு மர மேசையில், ஒரு பெரிய கண்ணாடி. அதன் சட்டத்தில் விசித்திரமான சின்னங்கள் பொறிக்கப்பட்டிருந்தன. பெட்டியிலிருந்த அதே சின்னம்.

மேசையில் ஒரு கடிதம் ஒன்றிருந்தது. அதில் அவள் பெயர் இருந்தது. வதனா. அவள் கடிதத்தை எடுத்து திறந்தாள். உள்ளே இருந்த கையெழுத்து, அவளுடையதைப் போலவே இருந்தது.

ஆனால் வித்தியாசமான ஒரு தொனியில்:

"வதனா, நீ இங்கு வந்துவிட்டாய். ஆனால், உண்மையை அறிவது உன்னை மாற்றும். நீ யார் என்று உனக்குத் தெரியாது, ஏனெனில் நீ மறக்க வேண்டியிருந்தது."

"2005ல், நீ வனஜா. ஒரு ரகசியத்தைப் பாதுகாக்க முயன்றவள். அந்த ரகசியம் உன்னை அழித்தது. ஆனால், நீ மீண்டும் பிறந்தாய் - வதனாவாக, புதிய நினைவுகளுடன், புதிய வாழ்க்கையுடன். அர்ஜுன் உன்னை நினைவூட்ட வந்தவன். ஆனால், அவனை நம்பாதே. அவன் உண்மையை விரும்பவில்லை - அவன் ரகசியத்தை விரும்புகிறான்."

வதனாவின் கைகள் நடுங்கின. அவள் கண்ணாடியைப் பார்த்தாள். அதில், அவளது பிரதிபிம்பம் மெல்ல மாறுவது போல் இருந்தது - அவள் முகம், ஆனால் வேறு கண்கள், வேறு புன்னகை. அது வனஜாவா? அவள் மனதில் ஒரு மின்னல் ஓர் இரவு, ஒரு ரகசிய ஆவணம், ஒரு துரோகம், ஒரு விபத்து.

2005ல் வனஜா ஒரு பத்திரிகையாளராக இருந்தாள்! ஒரு சக்திவாய்ந்த குழுவின் மறைவான செயல்களை வெளிக் கொணர முயன்றாள்.

ஆனால், அந்தக் குழு அவளைக் கண்டுபிடித்து விட்டது. அவள் உயிர் பிழைத்தாலும், அவளது நினைவுகள் அழிக்கப்பட்டன.

அவள் வதனாவாக மாறினாள். புதிய அடையாளம், புதிய வாழ்க்கை.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவள் கண்ணாடியைத் தொட்டபோது, கதவு மூடப்படுவது போல் ஒரு சத்தம்!

அவள் திரும்பினாள். அர்ஜுன் அங்கு நின்றிருந்தான், அவனது கண்களில் ஒரு ஆழமான புன்னகை.

"நீ கண்டுபிடித்துவிட்டாய், வதனா" அவன் கூறினான்.

"ஆனால், இப்போது என்ன செய்யப் போகிறாய்?"

"நீ யார், அர்ஜுன்?" அவள் கேட்டாள், குரலில் உறுதி.

"நீ என் நண்பரா, அல்லது அவர்களில் ஒருவனா?"

அவன் மெல்ல முன்னேறினான், அமைதியாக இருந்த அவனது பார்வையில், ஓர் ஆபத்து மின்னியது.

"நான் உன்னை நினைவூட்ட வந்தவன் உண்மை உன்னை விடுவிக்காது அது உன்னை அவர்களிடம் கொண்டு செல்லும். அந்த ரகசிய ஆவணம் இன்னும் இருக்கிறதென்பது அவர்களுக்குத் தெரியும். அவர்கள் அதைத் தேடுகிறார்கள். உன்னால் மட்டுமே அதைக் கண்டுபிடிக்க முடியும்."

வதனாவின் மனதில் எல்லாம் தெளிவாகியது. அவள் வனஜாவாக இருந்தவள், ஆனால் இப்போது வதனா. அவளது பழைய வாழ்க்கை அழிக்கப்பட்டிருக்கலாம், ஆனால் அவளது



எழுத்தாளர் செம்மைத்துளியான்

உள்ளுணர்வு இன்னும் உயிருடன் இருந்தது. அவள் அர்ஜுனைப் பார்த்து, ஒரு முடிவெடுத்தாள்.

"நான் அதைக் கண்டுபிடிப்பேன்" அவள் கூறினாள், "ஆனால் உனக்காக அல்ல. எனக்காக."

அவள் பையில் இருந்த நோட்டை எடுத்து, அதன் கடைசி பக்கத்தைப் புரட்டினாள். அங்கு, ஒரு முகவரி. ஒரு பழைய கிடங்கு, கொழும்பு புறநகரில். அவள் மனதில் ஒரு படிமம் தோன்றியது. அந்த ஆவணம், ஒரு பெட்டியில் மறைக்கப்பட்டிருந்தது அவள் அதை மறைத்த இடம் அவளுக்குத் தெரியும். அவள் அர்ஜுனைப் பார்த்து புன்னகைத்தாள்.

"நீ என்னை இங்கு கொண்டு வந்ததற்கு நன்றி. இது உன் எதிர்பார்ப்பைப்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூர்த்தி செய்யாது."

"நீ தாமதிக்கிறாய்," அர்ஜுன் எச்சரித்தான்.

ஆனால், வதனாவின் கண்கள் மேசையில் இருந்த கண்ணாடியைப் பார்த்தன. அவள் ஒரு முடிவெடுத்தாள்.

"நீ விரும்புவது உண்மையல்ல, அர்ஜுன். நீ விரும்புவது அதிகாரம்" அவள் கூறினாள்.

மெல்ல பின்னால் நகர்ந்து திடீரென, அவள் பையிலிருந்த உலோகக் குறியீட்டை எடுத்து, கண்ணாடியை நோக்கி வீசினாள். கண்ணாடி உடைந்து, ஒரு மறைவான பகுதி திறந்தது

அது ஒரு சிறிய அறை, உள்ளே ஒரு பழைய பெட்டி. அர்ஜுன் திரும்பியபோது, வதனா ஓடி, பெட்டியைப் பற்றினாள். ஆனால், அவள் அதைத் திறப்பதற்கு முன், ஒரு சத்தம் - வீட்டின் கதவு உடைக்கப்பட்டது. கருப்பு உடைகளில் மூன்று உருவங்கள் உள்ளே நுழைந்தன. அவர்களது முகங்கள் மறைக்கப்பட்டிருந்தன.

"ஆவணத்தைக் கொடு, வனஜா!" ஒருவன் கத்தினான். வதனாவின் மனதில் எல்லாம் இணைந்தது - இவர்கள் அந்தக் குழு, 2005-ல் அவளை அழிக்க முயன்றவர்கள். ஆனால், இப்போது அவள் வதனா - பயமற்றவள், உறுதியானவள்.

அர்ஜுன் அவர்களை நோக்கி திரும்பி, "நான் இதைக் கையாள்கிறேன்!" என்று கூறினான், ஆனால் வதனா அவனை நம்பவில்லை. அவள் பெட்டியை இறுகப் பற்றி, அறையின் மறுபுறத்தில் இருந்த ஒரு சிறிய ஜன்னல் நோக்கி ஓடினாள். ஒரு கருப்பு உருவம் அவளைப் பிடிக்க முயன்றபோது, அவள் பையில் இருந்த சாவியை அவன் முகத்தில் வீசி, ஜன்னலை உடைத்து வெளியே குதித்தாள்.

மழை பெய்து கொண்டிருந்தது. வதனா குறுகலான தெருவில் ஓடினாள், பெட்டி அவள் மார்பில் அழுந்தியது. அவள் பின்னால் காலடி சத்தங்கள் கேட்டன, ஆனால் அவள் திரும்பிப் பார்க்கவில்லை. அவள் மனதில் ஒரே எண்ணம் - கிடங்கு. அவள் ஒரு ஆட்டோவைப் பிடித்து, "ஆமர் வீதி... வேகமாக!" என்று கூறினாள்.

ஆமர் வீதியில் அந்தக் கிடங்கு இருளில் மூழ்கியிருந்தது. வதனா உள்ளே நுழைந்து, அங்கிருந்த ஒரு பெட்டியைத் திறந்தாள். உள்ளே, ஒரு கோப்பு - பழைய ஆவணங்கள், பெயர்கள், தேதிகள், ஒரு சக்திவாய்ந்த நிறுவனத்தின் மோசடிகளை வெளிப்படுத்தும் ஆதாரங்கள். அதனுடன், ஒரு சிறிய குறிப்பு, அவளது கையெழுத்தில்: "வனஜா, உண்மையை உலகிற்கு கொண்டு செல். உலகம் உன்னை ஒருபோதும் மறக்காது."

வதனாவின் கண்கள் கலங்கின. அவள் வனஜாவாக இருந்தவள்,


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனால் இப்போது வதனா. ஒரு புதிய உறுதியுடன் வெளிப்பட்டிருப்பவள்!

திடீரென, கிடங்கின் கதவு திறந்து, அர்ஜுன் உள்ளே நுழைந்தான், அவனுடன் அந்தக் கருப்பு உருவங்கள். "முடிந்தது, வதனா" அவன் கூறினான்.

"ஆவணத்தைக் கொடு."

ஆனால், வதனா சிரித்தாள். "நீ தாமதமாகிவிட்டாய், அர்ஜுன்." அவள் பாக்கெட்டில் இருந்த மொபைலை உயர்த்தினாள் - அவள் ஆவணத்தை ஸ்கேன் செய்து, ஒரு பத்திரிகையாளர் நண்பருக்கு அனுப்பினாள்.

"இப்போது உலகம் உண்மையை அறியும்."

அர்ஜுனின் முகம் மாறியது, ஆனால் முன் அவனால் நகர முடியவில்லை. கிடங்கிற்கு வெளியே சைரன்கள் ஒலித்தன.

வதனாவின் ஊடக நண்பர் காவல்துறையை அழைத்திருந்தார்.

கருப்பு உருவங்கள் தப்ப முயன்றன, ஆனால் வதனா அர்ஜுனைப் பார்த்து,

"நீ என்னை கண்டுபிடித்தாய், ஆனால் நான் உண்மையைக் கண்டுபிடித்தேன்." என்று கூறினாள்.

காவலர்கள் உள்ளே நுழைந்த போது, வதனா ஆவணத்தை அவர்களிடம்



ஒப்படைத்தாள். அர்ஜுன் கைது செய்யப்பட்டான், ஆனால் அவனது கண்களில் ஒரு விசித்திரமான புன்னகை இருந்தது.

"இது முடிவல்ல, வதனா" என்று முனகினான்.

வதனா வெளியே நடந்தாள். மழை அவள் முகத்தில் விழுந்தது. அவள் வனஜாவின் நினைவுகளை இழந்திருக்கலாம், ஆனால் வதனாவாக, அவள் உண்மையை வென்றாள்.

அவள் மொபைல் ஒளிர்ந்தது - ஒரு அநாமதேய செய்தி:

"நீ முதல் பகுதியைக் கண்டாய். ஆனால், ரகசியம் இன்னும் உயிருடன் இருக்கிறது."

வதனா புன்னகைத்தாள். அவள் யார் - வனஜாவின் நிழல், வதனாவின் உறுதி.

அவள் திரும்பி, இரவில் மறைந்தாள், மற்றொரு உண்மையைத் தேட...

●●●


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடமையில் காணும் இன்பம்



- ஜெனீரா தௌபீக் ஹைருல் அமான் -
கிண்ணியா

நித்ரா தேவியின் அரவணைப்பில் இருந்து விடுபட்டவளாக நள்ளிரவு 12.00 மணி பஸ்ஸில் ஏறிக் கொண்டாள் பிரபாலினி. நேரம் மெது மெதுவாக நகர்ந்து கொண்டிருந்தது. ஆண் துணையில்லாமல் பயணப்படுவது இதுவே முதற் தடவையாகும்.

அவளது கணவன் மரணித்து ஐந்து வருடங்களாகின்றன. பிள்ளைகளுக்குத் தாய், தந்தை எல்லாம் அவளே. வீட்டு வேலைகள் மட்டுமல்லாது கடைக்குச் செல்வது, துணிமணி வாங்குவது, பிள்ளைகளைப் பாடசாலைக்கு அனுப்புவது, வைத்தியசாலைக்குச் செல்வதென அவளது வாழ்க்கைப் பயணம் நீண்டு கொண்டே சென்றது. ஆயினும், பிரபாலினி எதற்கும் சளைத்தவளல்ல. தனது வேலைகளைத் தானே செய்து முடிப்பதில் கெட்டிக்காரி.

பிரபாலினிக்கு மூன்றும் பெண் பிள்ளைகள். அவர்களைப் படிக்க வைக்கப் பெரிதும் சிரமப்பட்டாள். குடும்பத்தினர் பெரிய வசதியாக வாழ்ந்தாலும் மருந்துக்குக் கூட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதவ மாட்டார்கள். அவள் யாருடைய உதவியையும் எதிர் பார்க்கவும் மாட்டாள். உள்ளதைக் கொண்டு போதுமாக்கிக் கொள்வாள். இவ்வாறிருக்கையில், பிரபாலினிக்குப் பிரபலமான பாடசாலையில் ஆசிரியர் நியமனம் கிடைத்தது. அவள் கடமையில் கண்ணும் கருத்துமாக இருந்தாள். சக ஆசிரியர்களிடத்தில் அன்பாகப் பழகினாள். மாணவர்களிடம் மிக நெருக்கமாகவும், பாசமாகவும் பழகினாள். இதனால் மாணவர்களும், பெற்றோரும் மிகவும் நேசித்தனர். மாலை நேரங்களில் இலவசமாக வகுப்புகளை நடாத்தினாள். விலைவாசி மலைபோல உயர்ந்து காணப்பட்டபோதிலும், அவள் யாரிடமும் கைநீட்டி ஒரு சதம் கூட வாங்குவதில்லை. பிரபாலினி கல்வியை யாருக்கும் விற்கவில்லை.

இளைய மகள் துஷானி புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்ததால், கண்டியிலுள்ள ஆங்கிலப் பாடசாலையில் கற்பதற்கு அனுமதி கிடைத்தது. சாப்பாடு, தங்குமிட வசதி இலவசம். துஷானி தாயின்ஆசைப்படி கற்று ஆசிரியர்களிடத்தில் பெரும் பாராட்டைப் பெற்றாள். பல்வேறு நிகழ்ச்சிகளிலும் கலந்து முதலிடங் களைப் பெற்று வெற்றி வாகை சூடினாள். இதனால் பாடசாலைக்கு நற்பெயரை எடுத்துக்கொடுத்தாள்.

கடிவாளமில்லாத பரி போல நாட்கள் அசுர வேகத்தில் நகர்ந்து சென்றன. மூத்த மகள் பேராதனைப் பல்கலைக் கழகத்தில் வைத்தியத் துறையில் அதிவிசேட திறமைகாட்டியதால், 'ஸ்கொலசிப்' கிடைத்து அவுஸ்திரேலியா பயணமானார். பிரபாலினியின் இரண்டாவது மகள் துஷாரா கொழும்பு சட்டத் துறைக்குத் தெரிவாகி இரண்டாம் வருட மாணவியாகக் கற்று வருகிறார்.

பிரபாலினி பிள்ளைகளைக் கவனிப்பதில் பம்பரமாய்ச் சுழன்றாள். வீட்டிலே தனிமை வாட்டியது. தனிமையைப் போக்குவதற்கு வீட்டுத் தோட்டம் அமைத்தாள். அது வாழ்க்கைச் சுமையை ஓரளவு குறைத்தது. திருமண வீடு, நோயாளர் வீடு, மரண வீடு என எல்லா இன்ப துன்பங்களிலும் பங்கேற்றாள். வாழ்க்கைச் செலவுகள் அதிகரிப்பினால், பொருளாதாரக் க்டங்கள் தலை விரித்தாடின. தனது மூன்று பிள்ளைகளின் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக சீட்டுப் பிடித்தாள். அதில் வரும் தொகையைப் பிள்ளைகளுக்காகச் செலவு செய்தாள். தாய்படும் துன்பங்களைப் பார்த்து பிள்ளைகள் மனம் வருந்தினர். "என்னைப் பத்தி நீங்க கவலைப்படாதீங்க. உங்க கல்வித் தரங்களைக் கூட்டிக் கொள்ளுங்க." - தாயின் உற்சாக வார்த்தைகள் மென்மேலும் கற்பதற்குத் தூண்டு கோலாக அமைந்தன.

திடீரென, தன் மூன்றாவது மகளின் அதிபர், பிரபாலினியை அவசரமாக வருமாறு அழைப்பு விடுத்திருந்தார். அவளுக்கு நெஞ்சு பயத்தால் படபடத்தது. கை, கால்கள் நடுங்கின. ஓராயிரம் கற்பனைகள் தோன்றி மறைந்தன. கண்கள் கண்ணீர் சிந்தின. பிரபாலினிக்குப் பயணம் செய்வது பழக்கப்பட்ட விடயம்தான்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பயணத்தைத் தொடர்ந்தாள்.

துஷானி குளியலறையில் வழுக்கி விழுந்ததில் தலையில் பலமான காயம். உடனே அவசர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டாள். ஒரு வாரம் மகளுடன் வைத்தியசாலையிலிருந்து பூரண குணமடைந்த பின்னர், மீண்டும் கல்லூரியில் சேர்க்கப்பட்டாள்.

பிரபாலினி தனது கடமையை மேற்கொள்வதற்காகப் பாடசா லையை வந்தடைந்தாள். நேரம் 8.00 மணியைத்தாண்டியிருந்தது. ஏற்கனவே ஒரு வாரம் லீவு. இன்னும் நீடிப்பது சரியில்லை என எண்ணினாள். நெருப்பில் கால் வைத்தவளாய், சமைக்காமல், சாப்பிடாமல் பாடசாலைக்கு ஓட்டமும் நடையுமாய் சென்றடைந்தாள். அங்கே 'சிவப்புக் கோடு' (Red line) அடிக்கப்பட்டிருந்தது. "இது எனது தவறு. நேரம் பிந்தி விட்டது. நம்மில் தவறை வைத்துக்கொண்டு பிறர் மீது குற்றம் சுமத்தக் கூடாது." நினைத்தவாறு, அமைதியாக வகுப்பறைக்குச் சென்று பாடங்களைக் கற்பித்தாள். அன்றைய நிகழ்வு அன்றோடு முடிந்து விட்டது.

மறுநாள் காலை பாடசாலைக்குச் சென்றாள். அவள் வருகையை எதிர்பார்த்துக் காத்திருந்ததுபோல் ஓடிச் சென்று சிவப்புக்கோடு அடிப்பதைக் கண்டுகொண்டாள். அவளது உள்ளம் கொழுந்து விட்டெரிந்தது. இந் நாடகம் இரு வாரங்களாக அரங்கேறியது. "கலகம் பிறந்தால் நியாயம் பிறக்கும். இதற்கு மேலும் பொறுக்க முடியாது. நெஞ்சிலே அடி விழுந்தால் நினைவிலே வலி இருக்கும்." என எண்ணியவளாக வழமைபோல கையொப்பமிட்டு உரிய நேரத்தைப் போட்டாள். பின்னால் வந்தவர்கள் Red line இல் மாட்டிக் கொண்டனர். இது தொடர்ந்தது. எல்லோரும் பிரபாலினியை ஏசினர். திட்டித் தீர்த்தனர். அவள் எதையும் கண்டு கொள்ளவில்லை. சட்டம் பொதுவானது. ஆளுக்காள் வேறுபடக் கூடாது. பிரபாலினி நேர்மையாய் நடந்து கடமையில் இன்பம் கண்டாள்.

அது நீடிக்கவில்லை. பிரபாலி னியின் வகுப்பு வேறோர் ஆசிரியருக்குக் கைமாற்றப்பட்டது. அவளுக்கு எதுவித வகுப்புக்களோ, பாடங்களோ இல்லாது ஒதுக் கப்பட்டாள். படிப்பித்துப் பழக்கப் பட்டவளுக்கு இது பெரியதொரு தண்டனையாகப் பட்டது. அவளது உள்ளம் குமுறியது. வழமைபோல் பாடசாலைக்குத் தொடர்ந்து சென்றாள்.

அவளது நிலைமை ஏனைய ஆசிரியர்களுக்கும், மாணவர்களுக்கும் சொல்லொணாத் துயரத்தைக் கொடுத்தது. பெற்றோர் அணிவகுத்துச் சென்றனர். "பிரபாலினி ஆசிரியர் மிகத் திறமையாகக் கற்பிக்கக் கூடியவர். அவருக்கு அதே வகுப்பு வழங்கப்பட வேண்டும். தவறும் பட்சத்தில் உரிய நடவடிக்கை எடுக்கப்படும்" என வலியுறுத்திக் கூறினர். உடனடியாக, அதே வகுப்பு மீண்டும் வழங்கப்பட்டது. மாணவர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்கள் குதூ கலித்தனர். பிரபாலினி மகிழ்ச்சிக் கடலில் நீந்தியவளாகத் தனது வகுப்பினைப்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொறுப்பேற்றாள். மகிழ்ச்சிகரமான கற்பித்தலால் மாணவர்கள் முன்னேற்றப் பாதையில் வெற்றி இலக்கையடைந்தனர்.

பிரபாலினி ஆசிரியர் திரும்பும் திசையெல்லாம் அவளிடம் கற்ற மாணவர்கள் வைத்தியர், அதிபர், ஆசிரியர், சட்டத்தரணி, கணக்காளர், கிளார்க் எனப் பல்வேறு அலுவலகங்களிலும் பணி புரிந்தனர். பழைய சம்பவங்கள் யாவும் மறந்து கடமையில் இன்பம் கண்டாள். இனி அவளது எதிர்காலம் பிரகாசமாக அமையும் என்பதில் எவ்வித ஐயமுமில்லை.

இது இவ்வாறிருக்கையில், பிரபாலினியின் இளைய மகள் துஷானிக்கு பிரதேச செயலாளருக்கான அனுமதிக் கடிதம் கிடைத்தது. மூன்றும் பெண் பிள்ளைகள். அன்று அவளால் எவ்வாறு கரைசேர்க்க முடியும் என அங்கலாய்த்தவர்கள் இன்று போற்றிப் புகழ்கின்றனர். பிரபாலினியின் மூன்று பெண் பிள்ளைகளும் தாயை மகா ராணியாக உள்ளமெனும் சிம்மாசனத்தில் ஏற்றி வலம் வந்தனர்.

இனி அவளது வாழ்க்கை என்றும் இன்பமயம். ●●●

---

## சிறுகதையின் இலக்கணம்

1) சிறுகதை என்றால் அளவில் சிறியதாய் முழுமை பெற்று இருக்க வேண்டும்.
2) தனிமனித அல்லது சமுதாய வாழ்க்கையைச் சுவையோடு பிரதி பலிக்க வேண்டும்.
3) சிறுகதையில் ஒரு மனிதர் அல்லது ஓர் உணர்வு, ஒரு நிகழ்ச்சி அல்லது ஒரு சிக்கல்தான் தலைதூக்கியிருக்க வேண்டும்.
4) அளவுக்கு அதிகமான கதை மாந்தர்களுக்கு அங்கு இடம் இல்லை.
5) விரிவான வருணனைக்கும், சூழ் நிலைக்கும் சிறுகதை இடம் தரல் கூடாது.
6) குறைவான, ஏற்ற சொற்களால் இவை சுட்டிக்காட்டப்பட வேண்டும்.
7) பாத்திரங்களின் உரையாடல்களில் சொற்செட்டு அவசியம்.
8) சிறுகதை நம்பக்கூடிய உண்மைத் தன்மையினைக் கொண்டு விளங் குதல் வேண்டும்.
9) நல்ல சிறுகதை ஆல விதையைப் போல் விரிவாகக் கூடிய கதைக் கருவைக் கொண்டிருத்தல் வேண்டும்.

ஒரு நல்ல சிறுகதை என்பது ஒரு சுவைமிக்க மாம்பழத்தை இறுதிவரை விரும்பிச் சுவைப்பது போன்றதாகும். அவ்வாறு இன்றி, மாம்பழத்தை முதல் கடியிலேயே வீசியெறிந்து விட வேண்டும் என்ற எண்ணத்தை ஒரு சிறுகதை ஏற்படுத்தினால், அச் சிறுகதையினால் பயன் ஒன்றும் இல்லை.

ஒரு சிறுகதைக்குப் பின்னே உள்ள படைப்பாளரின் கலை ஆற்றல், கற்பனைத் திறன், சொல்லாட்சி, அவர் மறைமுகமாகக் கூறும் செய்தி, இவையனைத்தும் இலக்கண வரம்புகளை விட முக்கியமானவை.

**- எழுத்தாளர் சுஜாதா அவர்கள்.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**நூல் நயம்**

# பழனத்தில் விளைந்த பவளங்கள்

நூல்: பழனத்தில் விளைந்த பவளங்கள்.
நூலின்வகை: சிறுகதைகள்
நூலாசிரியர்: ஜெனீரா கைருள் அமான்.
முதற்பதிப்பு: 2023
வெளியீடு: எகுத்தார் இலக்கிய மன்றம்.
நூல் தேவைகளுக்கு: 0777162707



இலக்கியம் என்பது இயற்கையின் பிரதிபலிப்பு தானே. அது கடந்து செல்லும்போது நம்மையும் அதில் கலந்து கட்டுண்டவர்களாக கைபிடித்து அழைத்துச் செல்கிறது கலைத்துவத்தின் காலக் கண்ணாடியாக, எழுத்தை முன்னோடியாக வைத்து இதனை சமூகத்திற்கு எடுத்துச் செல்லவும், படிப்பாளிகளிடம் சமர்ப்பிக்கவும் சிறந்த படைப்பாளிகளால் மட்டும்தானே முடிகிறது.

அந்த வகையில் இன்று நாம் பார்க்கப் போகும் கதாசிரியராக, சிறந்த கதை சொல்லியாக எழுத்தாளர் ஜெனீரா தௌபீக் ஹைருல் அமான் அவர்களைக் குறிப்பிடலாம்.

அண்மையில் அவரின் "பழனத்தில் விளைந்த பவளங்கள்" என்ற அருமையான சிறுகதைத் தொகுப்பு எனக்கு வாசிக்கக் கிடைத்தது. அருமையான சிறுகதைகள் 14 அந்நூலுக்குள் அடக்கம்.

நூலைக் கையில் எடுத்தவுடன் அழகிய அட்டைப் படமே நம்மைக் கவர்கிறது. ஒரு அட்டைப் படமும் ஒரு நூலுக்கு மிக முக்கியம் என்பதை இந்நூலைப் பார்த்ததுமே புரிந்து கொள்ளலாம். "மறந்து போன மாட்டு வண்டி பயணம்", பச்சை பசேலென


**ஏ. எஸ். சித்தி மிஸ்ரியா அமீன்,**
**கிண்ணியா.**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பசுமை கொஞ்சும் நெல் வயல்கள் மனதை கொள்ளைகொண்டு விடுகின்றன.

நம் நூலாசிரியர் பற்றியும் சில வரிகள் நாம் அறிந்து கொள்வது அவசியம் தானே. இந்நூலாசிரியரான ஜெனீரா தௌபீக் ஹைருள் அமான் அவர்கள் தனது தந்தையின் இலக்கிய பயணத்தை அடியொட்டியே சிறு வயது முதல் எழுத்துத் துறையில் பிரசித்தி பெற்று விளங்குபவர்.

ஆரம்பத்தில் தேசிய பத்திரிகைகளிலும் சஞ்சிகைகளிலும் தனது திறமைகளை வெளிப்படுத்திக் கொண்டிருந்தவர். பின்னர் பல நூல் வெளியீடுகள் மூலம் இலக்கிய உலகத்துக்கு தொண்டாற்றி வருகின்றார். பன்முக எழுத்தாளரான இவர் சிறுகதைத் தொகுப்பு, கவிதை, சிறுவர் பாடல்கள் என இதுவரை 9 நூல்களை பிரசவித்திருக்கின்றார். ஒரு நூல் வெளியீடு என்பது ஒரு பிரசவத்துக்கு சமம் என்பர். ஒன்பது நூல்கள் வெளியிட்ட இவரை நாம் வியந்து நோக்குவதில் தப்பேதுமில்லை.

இந்நூலை வெளியிடுவதற்கு ஏற்பட்ட சிரமத்தை இந்நூலில் அவர் குறிப்பிட்டு இருக்கிறார். கிண்ணியா வலயக்கல்வி பணிப்பாளர் திருமதி முனவ்வரா நளீம் அவர்கள் வாழ்த்துரை வழங்கியிருப்பதும், கலாபூசணம் நூருல் அயின் நஜ்முல் ஹுசைன் அவர்கள் அணிந்துரை வழங்கியிருப்பதும், கவிஞர் ஷெல்லி தாசன் அவர்கள் வாழ்த்துரை வழங்கியிருப்பதும் இந்த நூலுக்கான சிறப்பைக் கூறுகின்றன.

"இலக்கிய இளநிலா" என்ற அடைமொழியும் இவருக்குச் சொந்தமானது.

தனது இலக்கிய பயணத்திற்கும், கல்வி வளர்ச்சிக்கும், எழுத்துக்களுக்கும் என்றுமே துணை நிற்கும் தனது அன்புக் கணவனாருக்கு இந்நூலை சமர்ப்பணம் செய்திருப்பது பதிபக்தி எனலாம்.

நூலின் உள்ளே நுழைந்ததுமே எல்லாச் சிறுகதைகளையும் ஒரே மூச்சில் வாசித்து முடிக்கக் கூடியவாறான சிறந்த சிறுகதைகளாகத் தந்திருப்பது அருமை.

நூலாசிரியர் தனது அனுபவ ரீதியான விடயங்களை கதை வடிவங்களாக்கி இருப்பது புலனாகிறது.

**அவன் காத்திருக்கிறான்...**
என்ற கதை மூலம் கல்யாண கனவுகளுடன் அடிக்கடி கற்பனை உலகில் தங்களை தொலைத்து விட்டுக் கனவு காணும் இன்றைய வாலிபர்களின் யதார்த்தத்தை மிக அருமையாகக் கூறியிருக்கிறார் நூலாசிரியர்.

**நம்பிக்கை துரோகி கதை மூலம்...**
எமது சமுதாயத்தில் எத்தனையோ நம்பிக்கையான ஊழியர்கள், இரவு பகல் பாராது, பசி தூக்கம் இல்லாது, தனது சேவகத்தை அர்ப்பணிப்பாகவே செய்து வரும் வேலைக்கார ஊழியர்களின் மத்தியில் தஸ்மின் போன்ற நம்பிக்கைத் துரோகிகளும் இருக்கிறார்கள் என்ற


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மையை சித்தரிக்கும் கதையாக தந்திருக்கிறார்.

அடுத்து டெங்கு காய்ச்சல் பற்றிய விழிப்புணர்வை அருமையான கதையுடனும், கதா மாந்தர்கள் மூலமும், வாழைப்பழத்தில் ஊசி ஏற்றுவது போல மெதுவாகவும் ஆழமாகவும் தந்திருக்கிறார்.

நமது கதாசிரியர் ஜெனீரா, தான் ஒரு அன்பான "ஆசிரியத் தாய்" என்பதனையும், சமூக நல்லிணக்கத்திற்கு "சாதி மத பாகுபாடு தேவையில்லை" என்பதனையும் அழகாகக் கூறும் கதையாக **பூ ஒன்று உதிர்ந்தது** கதையைத் தந்திருப்பது சிறப்பு.

அடுத்து பாடசாலை மாணவர்களுக்கு இடையே மிகச் சர்வ சாதாரணமாக திகழும், போட்டி பொறாமையின் மறுவடிவத்தில், திறமைசாலிகளான மாணவர்கள் அநியாயமாகத் தண்டிக்கப்படுவதும், கண்டிக்கப்படுவதும், அதற்கு சில சமயங்களில் தீர விசாரிக்கப்படாமல் அசமந்தத்தனம் காரணமாக ஆசிரியர்களே துணை நிற்பதும் பரவலாக நிகழ்ந்து விடுவது உண்டுதான். இவைகளை முறியடித்து எதிர்நீச்சல் போட்டு பாடசாலை வாழ்க்கையில் மாணவர்கள் பலர் சாதனை நிகழ்த்திய சம்பவங்களும் நமது பாடசாலை வரலாறுகளில் இல்லாமல் இல்லை. அப்படி ஒரு சம்பவத்தை அழகிய உயிரோட்டமுள்ள சிறுகதையாக **உண்மை உயர்ந்தெழும்போது** கதையின் மூலம் நமக்குத் தந்திருப்பதைக் காணலாம்.

"இறை நம்பிக்கையாளனை இறைவன் கைவிடுவதில்லை" என்ற அருமையான கூற்றை நிரூபிக்கும் கதையாக **பழனத்தில் விளைந்த பவளங்கள்** கதை எமக்கு கூறுகின்றது. இந்நூலின் தலைப்பும் இக்கதையின் தலைப்பேதான். ஆச்சரியமாகவே இந்நூலின் தலைப்பை நானும் நோக்கினேன். இக்கதையை வாசித்ததன் பிற்பாடுதான் தலைப்பின் அர்த்தமே எனக்கு முழுமையாக தெளிவாகியது.

"மனிதம் தொலைந்து போன சமூகத்தில் மனிதத்தை தேடி ஒரு பயணம்" போல நமக்கு இவரின் இச் சிறுகதை தொகுப்பு நூல் கிடைத்திருக்கின்றது. இது போலவே அனைத்து கதைகளும் மனித வாழ்வின் "துருப்பிடித்த துயர நினைவுகளை மொழியின் வழிகடத்தும்" அற்புத இலக்கியமாக தந்திருக்கிறார், மூன்று தலைமுறைகள் கண்ட நமது மூத்த எழுத்தாளர் ஜெனீரா அமான் அவர்கள்.

இவ்வாறு நமது சிந்தனைக் குதிரையைத் தட்டி எழுப்பும் அருமையான 14 சிறுகதைகளை 114 பக்கங்களில் தந்திருக்கிறார். இக்கதைகள் அத்தனையும் வாழ்வின் எதார்த்தங்களைப் புடம் போட்டுக் காட்டி நிற்பது இந்த நூலின் சிறப்பெனவேக் கூறலாம். அத்தனை கதைகளும் கிழக்கு மாகாண கிண்ணியா மண் மணம் மாறாத பண்பாட்டுக் கோலங்கள் என்பதும், நமது பிரதேசத்தை அண்டி வாழும் பிற சமய மத நல்லிணக்கத்தை மேம்படுத்தும் விதமாகவும், கதாபாத்திரம், கதா மாந்தர்கள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சித்தரிக்கப்பட்டிருப்பதுவும் இவரின் இலக்கிய பயணத்தின் முதிர்ச்சியான மைல்கல் என்றே நாம் காணலாம்.

இவர் மேலும் பல நல்லிலக்கியங்கள் படைத்து, இலக்கியப் பிரியர்களுக்கான அறுசுவை விருந்து படைக்க வேண்டும் என்பதே எமது ஆசை. நீண்ட ஆரோக்கியத்துடன் மேலும் இலக்கியப் பணியாற்ற வாழ்த்துகள்.

இந்த அருமையான சிறுகதை தொகுப்பு நூலும் சிறந்த வாசிப்புக்காக நம் புத்தக அலுமாரிகளையும் அலங்கரிக்கட்டும்.

●●●



நூலாசிரியர்:
ஜெனீரா தௌபீக் கைருள் அமான்.

---

**வெண்ணிலா அடுத்த இதழ்: 20 எதிர்வரும் ஜனவரி 2026 முதலாவது வாரம் வெளிவரும். இவ்விதழில் பிரசுரிப்பதற்கான கவிதை, கட்டுரை, சிறுகதை, நூல் நயம் போன்ற ஆக்கங்களை கணினி அல்லது கைத்தொலைபேசி மூலம் தட்டச்சுச் செய்து எமது மின்னஞ்சல் முகவரிக்கு அல்லது வட்ஸ்அப் இலக்கத்திற்கு மட்டுமே அனுப்பவேண்டும். ஆக்கங்களுக்குப் பொருத்தமான தெளிவான படங்கள் இருப்பின் அவற்றையும் இணைத்து அனுப்பலாம்.**

**நூல் நயம் பகுதிக்கு அனுப்பும் ஆக்கங்கள் தொடர்பான நூலின் ஒரு பிரதி கட்டாயமாக அனுப்பிவைக்கப்படல் வேண்டும்.**

**ஆக்கங்களை அனுப்பவேண்டிய இறுதித் தினம்:**

**15-12-2025**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டுரை

- ஐ. ஏ. சத்தார் -

# ஆசியாவின் வியக்க வைக்கும் ஹைபர் மார்கட் லுலு!




வரலாற்றில் முத்துக் குளித்தலுக்குப் பெயர்போன இடமாக அறியப்பட்ட துபாய், அபூதாபிப் பகுதியிலிருந்து, 'பனியாஸ்' இனக் குழுவினர்களான, அல்-மக்தூம் குடும்பத்தினர் தலைமையில் துபாயில் குடியேறியதுடன் இதன் நவீன வரலாறு ஆரம்பமாகி, கடந்த சில ஆண்டுகளில் வியக்கத்தக்க வளர்ச்சி கண்டுள்ளது.

துபாய் மக்கள் தொகையில் குறைந்த பட்சம் 80 சதவிகிதம் வெளிநாட்டினராக உள்ளனர். இங்கு ஆட்சி அதிகாரத்திலும், அரசுப் பணிகளிலும் பிற நாட்டினர் நுழையப் பல தடைகள் இருந்தபோதிலும், வர்த்தகத் துறையிலும், கட்டுமானப் பணிகளிலும் பிற நாட்டவர்களே ஆதிக்கம் செலுத்தி வருகின்றனர்.

எண்ணெய் வளம் அதன் தொடர் வளர்ச்சிக்கு போதுமானதாக இருக்காது என்பதை துபாய் அரசு உணர்ந்ததன் காரணமாக பிற தொழில் துறைகளுக்கு ஊக்குவிப்புச் செய்து வருவதும், இந்நாட்டு மக்கள் சிறுபான்மையாக இருந்தாலும், நாட்டின் ஆட்சி அதிகாரத்தைத் தமது கைக்குள் வைத்துக் கொண்டு, வர்த்தகத்துறைக்கு பிற நாட்டவர்களுக்குப் போதியளவு சுதந்திரத்தை வழங்கியிருப்பதுதான் இந்நாட்டின் அபிவிருத்திக்கும்,



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

வளர்ச்சிக்கும் முக்கிய காரணமாக இருக்கின்றது.

வெளிநாட்டு மூலதனத்தை அதிகரிக்கும் பொருட்டு அரசு நடை முறைப்படுத்திய திட்டங்களின் விளைவாக துபாய், கடந்த முப்பது ஆண்டுகளில் பொருளாதாரத்தில் பல மடங்கு வளர்ச்சி அடைந்தது. குறிப்பாக வெளிநாட்டவர் துபாயில் குறிப்பிட்ட சில பகுதிகளில் சொத்து வாங்க அனுமதி அளித்தமை இவ்வாறு வெளிநாட்டு முதலீடு பெருக ஒரு முக்கிய காரணமாகியது. அதனால், துபாய் மிகக் குறுகிய காலத்தில் மிகுந்த வளர்ச்சி பெற்ற நகராகியது.

துபாயில் ஏற்பட்ட புதிய கொள்கை யானது, இன்று ஆசியாவின் மிகப்பெரிய சில்லறை விற்பனைச் சங்கிலித் தொடர்களுள் ஒன்றான "லூலூ ஹைப்பர் மார்க்கெட்"டை, அல்ஹாஜ் எம். ஏ. யூசுப் அலி அவர்கள் 2000ம் ஆண்டில் தொடங்கி வைத்தார்.

அவ்வாறான லூலூ சர்வதேச ஹைபர் மார்கட்களில் ஒன்றான, 184,000 சதுர அடி பரப்பளவு கொண்ட, இரண்டு மாடிகளில் அமைந்துள்ள சிலிக்கான் சென்ட்ரலுக்குச் சென்று பொருட்கள் வாங்கும் சந்தோஷமான சந்தர்ப்பம் அண்மையில் எனக்குக் கிடைத்தது!

சிலிக்கான் சென்டரை இந்தியாவில் லக்னோ, திருவந்திரம் ஆகிய இடங்களிலுள்ள லூலூ ஹைபர் மார்க்கட் கட்டடங்களை வடிவமைத்த லண்டனைத் தளமாகக் கொண்ட 'டிசைன் இன்டர்நேஷன'லே வடிவமைத்துள்ளது. இந்த சிலிகான் சென்டருக்குள்தான் 9,000 சதுர மீற்றர் பரப்பளவிலேயே லூலூ ஹைப்பர் மார்கட் உள்வாங்கப்பட்டுள்ளது. மிகுதியான இடங்களில் உலகப் பிரசித்தி பெற்ற 'டிபிரேண்டட்' கடைகள் பல அமைந்துள்ளன. அவற்றுள் ஜெய் அலெக்ஸ், மலபார் போன்ற நகைக்கடைகளைக் குறிப்பிட்டுக் கூறலாம்.

நகர மையத்திலிருந்து 12 கிலோ மீற்றர் தொலைவிலும், விமான நிலையத்திலிருந்து 15 கிலோ மீற்றர் தூரத்திலுமுள்ள சிலிக்கான் சென்ட்ரல், துபாய் சிலிக்கான் ஓசிஸ் பகுதியில் அமைந்துள்ளது.

துபாயில் மிகவும் பிரபலமான சில்லறை விற்பனைக் கடைகளில் ஒன்றான, லூலூ ஹைப்பர் மார்க்கெட், அபூதாபியைத் தலைமையிடமாகக் கொண்டு இயங்கும் லூலூ குழும - இந்தியப் பன்னாட்டு நிறுவனமாகும்!

இது மத்திய கிழக்கு, ஆசியா, ஆப்பிரிக்கா உள்ளிட்ட பல நாடுகளில் பரவலாக இயங்கி வருகின்றன. ஆனால் துபாயில் இதன் இருப்பு மிகவும் குறிப்பிடத்தக்க அளவில், சுமார் 24 இடங்களில் அமைந்துள்ளதாகவும், ஒவ்வொரு கிளையும் பரந்த அளவிலான பொருட்களையும், சேவைகளையும் வழங்கி வருகின்றன என்பதையும் அறிய முடிந்தது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதில் மளிகைப் பொருட்கள், உணவு வகைககள், ஆடைகள், மின்னணுப் பொருட்கள், புதிய காய் கறிகள், பழங்கள், இறைச்சி, மீன், ஸ்மார்ட்போன்கள், டிவிகள், வீட்டு உபயோகப் பொருட்கள், குழந்தைகள், ஆண்கள், பெண்கள் என அனைவருக்குமான ஆடை - அணி கலன்கள், மரச் சாமான்கள், சமையறைப் பொருட்கள் மற்றும் அலங்காரப் பொருட்கள் என்பவற்றைக் குறிப்பிடலாம்.



அத்துடன், லூலூ ஹைப்பர் மார்க்கெட் ஆன்லைன் தளத்தின் மூலம் (www.luluhypermarket.com) வீட்டு விநியோக சேவையைகளையும் வழங்கி வருகின்றது என்பதுவும் குறிப்பிடத்தக்க ஒரு விடயமாகும்.

'லூலூ' தனது வாடிக்கையாளர் களுக்கு தரமான பொருட்களை, மலிவு விலைகளில் வழங்குவதற்குப் பெயர் பெற்றது மட்டுமல்லாது, தள்ளுபடி விற்பனைகள், சிறப்பு ஆஃபர்கள் மற்றும் விசுவாசத் திட்டங்கள் (Loyalty Programs) மூலமாகவும் வாடிக்கையாளர்களை ஈர்க்கின்றது. அதனால், இது துபாயில் உள்ள குடியிருப்புப் பகுதி மக்களின் அன்றாட தேவைகளைப் பூர்த்தி செய்யும் முக்கிய இடமாக உள்ளது.

துபாயில் 1990களில் முதல் ஹைப்பர் மார்க்கெட் திறக்கப்பட்ட போதிலும், லூலூ குழுமம் 2000ம் ஆண்டு ஆரம்பமானது. தற்போது, மத்திய கிழக்கில் மட்டும் 259 ஹைபர் மார்கட்கள் இயங்கி வருகின்றன. இவற்றில், உலகளவில் 65,000க்கும் மேற்பட்ட ஊழியர்கள் பணிபுரிந்து வருகின்றனர்.

பொதுவாக, துபாயில் உள்ள லூலூ ஹைப்பர் மார்க்கெட்கள் காலை 8:00 மணி முதல் நள்ளிரவு 12:00 மணி வரை இயங்குகின்றன. ஆனாலும், இந் நேரக்கணிப்பு கிளைகளைப் பொறுத்து மாறுபடலாம்.

துபாயில் லூலூ ஹைப்பர் மார்க்கெட் ஒரு முழுமையான சொப்பிங் அனுபவத்தை எனக்கு வழங்கிய தோடு, தரம், மலிவு விலை மற்றும் பன்முகத்தன்மையையும் உறுதி செய்தது. அதனால், இது துபாயில் வாழும் உள்ளூர் மக்களினதும், பன்னாட்டு மக்களினதும் தேவைகளைப் பூர்த்தி செய்துவரும் ஒரு நிறுவனம் என்பதில் எவ்வித ஐயமுமில்லை என்று துணிந்து கூறலாம்!

●●●


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிழையழகு - அழகேதான்


A. R. அப்துல் ரசூல்
(ஓய்வுநிலை அதிபர்)





நூல்: பிழையழகு
நூலின் வகை: கவிதைகள்
நூலாசிரியர்: மலீஸ் அமீன்
முதற்பதிப்பு: 2025
வெளியீடு: அமீன் (BA) பவுண்டேஸன்
பக்கங்கள்: 72
விலை: ரூபா. 700
தொடர்பு: 0772788950

அறுபத்தியொரு கவிதைகளை
அழகாகச் சுமந்து வரும்
"பிழையழகு" உன்னைப்
பிரியமுடன் வாழ்த்துகிறேன்.

அறுபத்தியொரு கவிதைகளும்
அவனியதன் அழகுதனை
அழகுற உணர்த்தி
அகிலமதை ஆட்கொள்கின்றன.

பிழையழகும் அழகுதான்
பிரியமுடன் படிப்போருக்கு,
பிரச்சினைகள் பலவற்றைப்
பிரியமுடன் தீர்த்து வைக்கும்.

கவிதைகள் ஒவ்வொன்றும்
கன சித்தமாய் அமைந்து
படிப்பவர் உள்ளங்களை
பரவசப் படுத்தி விடும்.

பிழையழகு அலங்கரிக்கும்
பிரியமான கவிதைகளில்
பின்வரும் கவிதைகள்
பிரமிப்பினை ஊட்டுவன.

மண வாழ்க்கை நீண்ட
காலம் நீடிக்கிறது
என்றால் அங்கு நிறைய மன்னிப்புகள்
வழங்கப்பட்டிருக்கலாம்.

எதிர்பார்ப்புக்கு
இங்கு இடம் இல்லை...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தங்கம், வைரம் இங்கு விலையில்லை..
என் தங்கை அன்புக்கு ஈடு இல்லை.
செல்வத்தின் அழகு
கால்களில் ரசிக்க வைக்கின்றது.
இயற்கை அழகுக்கும் அவளுக்கும்
என்ன வித்தியாசம் என்பதை
அறிய முடியாது
இசையாய் வரும் கொலுசு சத்தமும்
உன் கால் விரல்களில் மாறிய
பாதணிகளும்
பிழையழகியல் ஒரு அழகு.

அழகின் உண்மையை வர்ணிக்க
உன் தோகையை கடன் கேட்கின்றேன்
வனத்தில் வானவில்லை
அழகின் அரசியே
உன் இறகின் ஓவியனாக
நான் மாறிவிட வேண்டும்.

உன் சமூகம் உன்னை
தோல்வியடையச் செய்யலாம்
ஆனால், நாளை வரலாற்றில்
உன் பெயரை
பதிப்பதற்கு மறந்து விடாதே.

கவிதை எழுத முனையும் போது
பேனா முனையில் சிந்துவது
மை துளிகளை அல்ல
உன் நினைவுத் துளிகள்.

பிழையழகு கவிதை நூல் உட்பட ஆறு நூற்களை அழகுற அமைத்த மலீஸ் அமீன் பாராட்டுக்குரியவர்.

இன்னும் பல நூற்களை எழுதி பாரினில் புகழ்பெற வல்ல இறைவனிடம் வாஞ்சையுடன் வேண்டுகிறேன்.

●●●



நூலாசிரியர்
கவிஞர் மலீஸ் அமீன்

நூல் நயம் பகுதிக்கு ஆக்கங்களை அனுப்பும் படைப்பாளிகள் தங்களது ஆக்கங்களை கணினி அல்லது கைத்தொலைபேசி ஊடாக தட்டச்சு செய்து எமது மின்னஞ்சல் முகவரிக்கு அல்லது வட்ஸ்அப் இலக்கத்திற்கு மட்டுமே அனுப்பவேண்டும். அத்துடன் நூலின் ஒரு பிரதி கட்டாயமாக அனுப்பிவைக்கப்படல் வேண்டும். - ஆசிரியர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மருதமுனையில் கொடியேற்று விழா

## (1959-1963)

– சென்ற இதழ் தொடர்ச்சி –



பன்னூலாசிரியர் ஏ. ஆர். ஏ. சத்தார்

தைத்து தயார் நிலையில் எங்களது வீட்டில் வைக்கப்பட்டிருந்த கொடியைப் பொறுப்பேற்று அதனை அவ்விடத்தில் இருந்து ஊர்வலமாக கொண்டு வர ஆயத்தமாகிவிட்ட குழுவினர், மிகவும் பக்குவமாக, பக்தி சிரத்தையுடன் அதனைக் கையேற்று தக்பீர் முழக்கத்துடன் ஊர்வலத்தை ஆரம்பித்தனர். அதிகளவான மக்களும் சிறுவர்களுமாக பின்னால் பக்திப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரவசத்துடனும் பைத்துக்களுடனும் தத்தமக்குத் தெரிந்த அரபு வசனங்களைத் திரும்ப திரும்பக் கூறிக்கொண்டு வருவதன் மூலம் தமது பணிவையும், பக்தியையும் வெளிப்படுத்தினர்.

சுமார் இருநூறு மீட்டர் தொலைவிலுள்ள கொடிக் கம்பத்தை அடைவதற்கு அதிக நேரம் எடுத்தாலும் சுமார் ஐந்து மணிக்கு கொடி உரிய இடத்திற்கு வந்து விட்டதில் ஏற்பாட்டாளர்களுக்கு மகிழ்ச்சிதான். அதற்கு ஒரு முக்கியமான காரணமும் இருந்தது. பொழுது சாய்வதற்கு முன்னர் கொடி ஏற்றியாக வேண்டும். இதுநாள் வரை மக்கள் நடமாட்டம் இரவில் அறவே இல்லாத பிரதேசமாகவும் மையவாடி என்பதனால் இயற்கையாகவே ஏற்படும் ஒரு பயமும், அண்மையில் பக்கத்து ஆல மரத்தில் இளைஞன் ஒருவன் தூக்கிலிட்டுக்கொண்டதுவும் இராக்காலங்களில் மக்கள் வருவார்களா என்ற ஒரு ஐயப்பாடும் அவர்களுக்கு இருந்தது.

மாலை ஐந்தைத்தாண்டிவிட்டது. கொடிக் கம்பம் நிலத்தில் படுத்துக் கிடக்கிறது. அதனருகில் ஐந்து பாவாக்கள் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தனர். அவர்கள் ஐவரும் பச்சைத் தலைப்பாகையும் கழுத்து நிறைய பல அளவுகளில் மணி மாலைகள் அணிந்தவர்களாகவும், வாளும் ஒரு வகையான கூரிய ஆயுதமும் தரித்திருந்தனர். நேரம் ஆயிற்று, ஆலிம் தனது கைகளை அசைத்து சைகை செய்ததுதான் தாமதம், பாவாக்களின் தாளவாத்தியங்கள் இசைக்கத் துவங்கின. கூடி நின்ற பெண்கள் எல்லாம் தமது வாய்மேல் கைவைத்து ஒரு வகையான சப்தம் எழுப்பினர், அதுவும் கோஷ்டிகளாகப் பிரிந்து போட்டிக்கு குரவை இட்டனர். ஆண்கள் எல்லாம் தக்பீர் முழங்க கொடி கம்பத்தில் இணைக்கப்படுகிறது. மீண்டும் ஆலிமின் சைகை, பலர் கூடி கொடிக்கம்பத்தைப் பக்தியோடு உயர்த்துகின்றனர், மெல்ல மெல்ல கொடி உயர்த்தப்படுகிறது. மக்கள் எல்லோரும் ஒருமித்த குரலில் தக்பீர் மொழிந்து தத்தமது பக்தியை வெளிப்படுத்துகின்றனர், இருந்தாற்போல் ‘ஹல் மதாத்’ என்றொரு சப்தம், எல்லோரும் ஆடிப் போய்விட்டனர், அங்கு பார்த்தால் ஒரு பாவா தான் வைத்திருந்த கூரிய ஆயுதத்தால் தன் தலையில் ஓங்கி ஒரு குத்து. கழட்டி மீண்டும் ஒரு குத்து. இது பற்றி முன்னர் எதுவும் தெரிந்திராத சிறுவர்களாகிய நாங்கள் உண்மையில் ஆடிப்போய் விட்டோம் என்றால் பாருங்களேன்.

கொடி இப்போது கம்பீரமாக காற்றின் திசைகளுக்கு ஏற்ப அசைந்து அங்கு கூடியிருந்த மக்களுக்கு தமது சந்தோசத்தை வெளிப்படுத்துகிறது போலும். கொடிக்கம்பத்தில் ஏறுவதற்கு வசதியாக ஒரு பத்தடி உயரத்திற்கு குறுக்கு கம்புகள் கட்டப்பட்டிருந்தன. அதில் ஆலிம் ஏறுகிறார், அவர் பின்னால் ஓடாவியார் ஒரு ஓலைப் பெட்டி சகிதம் ஏறுகிறார், என்ன செய்யப் போகிறார்கள் என்ற எதிர்பார்ப்பு எல்லோரையும் தொற்றிக் கொள்ளும் அதேவேளை பெட்டியில் இருந்து பலகாரம் டொபி இனிப்புப் பண்டங்கள் என மக்கள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மீது வீசப்படுகிறது, அடித்து விழுந்து எல்லோரும் அதனைப் பொறிக்கி எடுக்கின்றனர், அன்று எனது கையில் ஒரே ஒரு அலன்ஸ் டொபிதான் அம்பிட்டதில் எனக்கு கவலைதான். கொடியேற்றக் குழுவினர் வெற்றிக் களிப்பில் கதாநாயகர்களாக காட்சி தருகின்றனர். கொடுப்பு நிறைய சிரிப்பு என்பார்களல்லவா அதே மாதிரித்தான் மிகவும் சந்தோசமாக காட்சி தந்தனர்.

கதிரவன் தனது அன்றைய கடமையை முடித்து விட்டேன் என்று சொல்வதைப் போல விடைபெறுகிறது. மஃரிப் தொழுகைக்கான அதான் ஒலிக்கிறது. அப்பிரதேசத்தைப் பற்றிய பயம் மக்களை விட்டும் பிரிந்து விட்டதற்கு சாட்சியாக பகல் கடந்தும் அவ்விடத்தை மகாசனங்கள் நிறைத்திருந்தனர். மஃரிப் தொழுகையை ஆலிம் இமாமாக நின்று நடத்தி முடிந்ததும் அங்கிருந்த தலயணைகள் யாவும் வளைத்து வைக்கப்பட்டு அதற்கு மேலால் வெள்ளைத் துணி கொண்டு போர்த்தப்படுகிறது. ஏதோ நடக்கப் போகிறது என்றிருந்த எங்களது செவிகளில் 'மௌலூது' ஓதப் போகிறார்கள் என்று கூறுவது விளங்கிவிட்டது பள்ளியினுள் இரண்டு பெற்றோல் மெக்ஸ் விளக்கு ஒளி பரப்பிக் கொண்டிருக்க வெளியே போடப்பட்டிருந்த கடைகளில் சிலதில் பெற்றோல் மெக்ஸ், சிலதில் பெரிய பந்த விளக்குகள் இன்னும் சிலதில் ஹரிக்கன் லாம்புகள் எனப் பிரதேசமே ஜொலித்துக் கொண்டிருந்தது.

பள்ளியின் உள்புறம் தலையணை போட்டு வெள்ளை விரிப்புக்கள் விரித்து வட்டவடிவில் அமர்ந்திருக்கும் வெள்ளாடை தரித்த பெரியவர்கள் சிறுவர்களைக்காண மிகவும் ஆனந்தமாக இருக்கிறது. அவர்கள் இசைக்கப் போகும் பைத்துக்கள் பாடல்கள் எல்லோர் மனங்களிலும் ஓர் இனம்புரியாத பக்தியையும் பரவசத்தையும் ஏற்படுத்தியதை முன்னர் பல சந்தற்பங்களில் நாம் கண்டிருக்கிறோம். பைத்துக்கள் மத்தியில் இரு அணிகளாக நின்று எதிர் பாட்டு பாடுவதை எல்லோரும் ரசிப்பார்கள். அதற்கு பதம் பாடுதல் என்று கூறுவர், அவ்வாறானதொரு நிகழ்வு மௌலூதுக் கலரி நடைபெறப்போவதில் ஏதோ ஒரு மகிழ்ச்சி. அவர்களுக்கு வழங்கப்படும் மரியாதை அப்பாடா, மனம் குளிர்ந்து விடுகிறது. பின் நாட்களில் இதை நானும் அனுபவித்திருக்கிறேன்.

வகைவகையான பலகாரம், மாதுளம் பழம், கற்கண்டு, பிளம்ஸ் என்பன பீங்கான்களில் பரப்பப்பட்டிருக்கின்றன. பாடிக் கொண்டிருக்கையில் கிடைக்கின்ற இடைவெளிகளில் அவை ருசிக்கப்படுவதைக் காண எமக்கும் வாயில் நீர் சுரப்பதைத் தவிர்க்க முடியவில்லை. இப்போது இஷாவுடைய நேரம் நெருங்கி விட்டதால் அதான் ஒலிக்கப்பட்ட பின் மீண்டும் பாடல்கள் மிக ராகத்துடனும் சப்தத்துடனும் ஆ... பிரதேசமே களை கட்டிவிடுகிறது. ஒருவாறு பாட்டுக்கள் எல்லாம் முடிய இஷாத் தொழுகை இமாம் ஜமாஅத்தாக நிறைவேற்றப்பட்டபின் விரிப்புக்கள் எல்லாம் அப்புறப்படுத்தப்பட்டு இராப்போசனம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்களுக்கு வழங்கப்பட ஏற்பாடுகள் நடைபெறுகிறது. இடியப்பம் பிட்டுகள் நிறைக்கப்பட்ட பாத்திரங்களும் இறைச்சிக் கறி பருப்புக் கறியுடன் அரிசிமா பாணியும் வைக்கப்பட கலகலப்பாக இராப்போசனம் நடைபெற்றதன் பின் அவர்களின் கைகளுக்கு என்வலப்கள் கைமாறும் போது அவர்கள் ஒரு வகை கூச்சத்தில் நெளிவதும் ரசனைக்குரியது.

இரவு ஒன்பது மணியளவில் இவ்விடயங்கள் எல்லாம் ஒரு முடிவுக்கு வர, கொடிக்கம்பத்தின் பக்கத்தில் அமர்ந்திருந்த பாவாக்கள் உசாராகிவிட்டார்கள். அவர்களது தகரக்கட்டைகள் விண்ணை நோக்கி செல்வதும் மீண்டும் அவர்களது கைகளில் வந்தமர்வதுமாக பாட்டுக்கள் விண்ணைத் தொடுகிறது. இது என்ன சினிமாப் பாடலா அல்லது இசுலாமிய கீதங்களா இல்லை அவர்களே இயற்றிப் பாடுகிறார்களா என்பது யாருக்கும் புரியாத மர்மம். ஒருவேளை உட்சென்ற புகையின் விளையாட்டாக இருக்கலாம். இப்படி இரவு நடுநிசியைத் தாண்டிவிட்ட நிலையில் படிப்படியாக மக்கள் தத்தமது வீடுகளுக்கு செல்வது தெரிகிறது. மேலும் சிலர் பயத்தில் தயங்கி நிற்கின்றனர், உடன் செல்ல துணை தேடுகின்றனர், எவ்வாறாயினும் மேலும் சிலர் பள்ளியினுள் உறங்குவதற்கும் தயாராகிவிட்டனர். சிலர் எவ்வாறாயினும் வீடு செல்ல வேண்டும் என்ற பிடியில் நின்றனர். அவர்களை உரிய இடத்திற்கு அழைத்துச் செல்லும் பொறுப்பு இளைஞர்களான ஏற்பாட்டாளர்களிடம் ஆலிமால் ஒப்படைக்கப்பட்ட பின் ஒருவாறாக அன்றைய நிகழ்ச்சிகள் எல்லாம் முடிவுக்கு வருகிறது.

ஆங்காங்கே சிலர் தம்மை மறந்த நிலையில் உடுத்தி இருந்த சாறனினால் உடம்பை மறைத்துக்கொண்டு உறங்குவதும் உறங்கும்போது அவர்கள் விடும் குறட்டை ஒலிகளும் ஒருவித அச்சத்தை ஏற்படுத்துகின்றது. கொடியேற்ற விழாவின் முதலாம் நாள் ஒருவாறு நிறைவு பெறுகிறது. கொடி இறங்குவதற்கு இன்னும் பதினொரு நாட்கள் இருக்கிறதல்லவா? இவ்விழாவில் பிற்காலங்களில் தாக்கம் செலுத்திய சில விடயங்களை நாம் அறிய வேண்டுமானால் நமது கொடியேற்ற வளாகத்திலிருந்து சற்று அப்பால் செல்லவேண்டிய கட்டாயம் இருக்கிறது. உங்கள் அனுமதியுடன் சற்று வெளியில் சென்றுவருவோமே, நிச்சயம் கொடி இறங்கமுன் வந்துவிடலாம்.

நமது கதாநாயகர்களான இளைஞர் குழு யாராக இருக்கலாம் என்று அறிய ஆவலாய் இருக்கிறீர்கள் என்பது எனக்குப் புரியாமலில்லை. அதற்காகத்தான் கொடியேற்ற திடலை விட்டும் சற்று அப்பால் செல்ல வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது மட்டுமல்லாமல் அடுத்தடுத்து வந்த வருடங்களில் இந் நிகழ்வு இல்லாமலாக்கப் பட்டதற்குமான காரணங்களை நாம் அறிந்து கொள்ள முடியும். இருந்தாலும் உங்கள் ஆவலை ஓரளவேனும் நமது கொடியேற்றலுக்கு மிக முக்கிய காலாக இருந்த அவ்விருவரையும் உங்களுக்கு முதலில் அறிமுகம் செய்யலாம் என


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

விரும்புகிறேன். அதில் முதலாமவர் ஆலிம் மர்ஹூம் ஐபீரி சுபியான் அவர்களின் தந்தை அப்துல் கரீம் ஆலிம். இவரைப் படல் ஆலிம் என்றும் அழைப்பர். இரண்டாமவர் ஓடாவியார். இவர் இனாமுல்லா அதிபரின் அப்பா. அதாவது மன்னி ஓடாவியார் என்று அழைக்கப்படும் அபூபக்கர் ஓடாவியாரின் தந்தை அச்சிமுகம்மது ஓடாவியார். இப்போதைக்கு இது போதுமானது.

இனி விடயத்துக்கு வருவோமா? தற்போதைய மைதான வீதிக்கு மேற்கே முந்திரிகைத் தோட்டங்கள் பல காணப்பட்டன. இவ் வீதியுடன் ஹாஜியார் வீதி சந்திக்கும் இடத்திற்கு கிழக்கே குஞ்சித் தம்பியர் என்கின்ற முகம்மது கனீபா இபுறாலெப்பை என்பர் சில மாணவர்களை வைத்து குர்ஆன் வகுப்புகளை நடாத்தி வந்தார். இவரது வீட்டிற்கு மேற்குப் புறத்தில் அட்டாளைச்சேனையரது முந்திரித் தோட்டமும், அதற்கு வடக்கே முருங்கையருடைய குடியிருப்புக் காணியும் அதைத் தொடர்ந்து சாத்திரியாருடைய காணியும் காரியப்பர் வீதிவரை அமர்ந்திருந்தது. மர்ஹூம் தாவுத் லெப்பை அவர்களின் தந்தையான சாத்திரியார் தனது காணியில் ஒரு பகுதியை பள்ளிவாசல் மற்றும் மதரசா அமைப்பதற்காக ஒரு காணி வேண்டும் என்ற கோரிக்கையை ஏற்று தற்சமயம் மக்பூலியா பள்ளிவாசல் அமைந்திருக்கும் காணியை அன்பளிப்பு செய்தார். மேற்படி காணியில் விரிவுரையாளர் மாகிர் அவர்களின் தந்தை முகம்மது இஸ்மாயில் (ஹப்சா) அவர்களைத் தலைவராகக் கொண்ட ஒரு குழுவினர் ஓர் ஓலைக் கொட்டில் அமைத்து ஐங்காலத் தொழுகை மற்றும் குர்ஆன் மதரசாவையும் நடத்தி வந்தனர். இதன் முஅல்லிமாக குஞ்சித்தம்பி ஆலிம் செயற்பட்டு வரும் வேளையில் ஒரு சுழற் காற்று அடித்து அவ்வோலைக் கொட்டிலைத் தரை மட்டம் ஆக்கியதனால் தொழுகை நிறுத்தப் பட்டுவிட்டது. மத்ரசா மீண்டும் குஞ்சித் தம்பியர் வீட்டுக்கு மாற்றப்பட்டது. 1956 முதல் 1958 வரையான இரண்டு வருடங்களில் இவை நடந்தேறியது. காரியப்பர் வீதி மற்றும் மசூர் மௌலானா வீதிக்கு இடையிலுள்ள காணிகளில் தென் புறமாக நாட்டியர் உடைய காணியும் வட புறமாக காலைக்காற வெள்ளைக் குட்டியருடைய காணியும் காணப்பட்டது. இங்கு முந்திரிகை மரங்கள் நிறைந்து காணப்பட்டன. பாடசாலையின் மேற்கே வெள்ளைக் குட்டியரின் முந்திரித் தோட்டம் அமைந்திருந்ததால் மாணவர்களின் கைவரிசைகளில் இருந்து தோட்டத்தைப் பாதுகாத்துக் கொள்வதற்கு முட் பற்றைகளாலும் கள்ளிச் செடிகளாலும் பாதுகாப்பு வேலிகள் அமைக்கப்பட்டிருந்தன. அதையும் தாண்டி சில மாணவர்கள் உள் நுழைந்து தமது கைவரிசைகளைக் காட்டுவதும், பிடிபட்டு அதிபரிடம் ஒப்படைக்கப்படுவதும் சிலபோது திட்டு வாங்குவதும் வாடிக்கையான விடயங்கள்தான்.

வெள்ளைக் குட்டியர் ஒரு சுவாரஸ்யமான மனிதர். கடின உழைப்பாளி, துணிந்தவர், நடிகர் ராஜ்கிரனை


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

ஒத்த உருவம், ஆனால் அவரைவிட வெண்மை நிறமுடையவர். முஸ்தபா பயில்வானின் தந்தை ஹிர்பஹான் அதிபரின் அப்பா. இவரும் எனது தந்தையும் மிக நெருங்கிய நண்பர்கள். இவர் மரக்கறித் தோட்டம் செய்து நல்ல விளைச்சலைப் பெறும் ஆற்றல் மிக்கவராகவும், கரும்புத்தோட்டம் செய்தல், ஆடு மற்றும் கோழி வளர்த்தல் என்பவையும் இவரது மேலதிக தொழில்களாகும்.

ஒருநாள் இவருடைய ஆட்டுக் காலைக்குள் புகுந்த புலி ஆட்டுக் குட்டி ஒன்றைக் கொன்று சாப்பிட்டுவிட்டுச் சென்றுவிட்டது. காலையில் இந்தக் காட்சியைக் கண்டதும் பெரும் கவலையாகி விட்டது அவருக்கு. நிச்சயமாக நாளையோ மறு தினமோ புலி வரும் என்று கணக்குப் போட்டு, வரும்போது அப்புலி மாட்டிக் கொள்வதற்கான மரத்தினாலான பொறி ஒன்றினை வடிவமைத்து உரிய இடத்தில் வைத்துவிட்டார். அவர் எதிர்பார்த்த படியே அப்புலி ஆடு திருட வந்து பொறியில் வசமாக மாட்டிக் கொண்டது. மாட்டிக்கொண்ட புலியை இரு சங்கிலிகளால் கட்டி இரு தென்னை மரங்களுக்கு இடையே உயரக் கட்டி மக்களின் பார்வைக்காக வைத்துவிட்டார். இந்தச் செயலானது அவரை ஊரில் மிகப் பிரபல்யப் படுத்திவிட்டது. மட்டுமல்லாமல் அந்தக் காலகட்டத்தில் அம்பாரை அரச அதிபராக இருந்த அஸீஸ் துரை இவரது நெருங்கிய நண்பராக இருந்தார். நேரம் கிடைக்கிற போது அஸீஸ் துரை அவர்கள் இவரைக் கண்டு சிலநேரங்களை இவரோடு கழித்துச் செல்வார். பலமுறை வாகனத்தை அனுப்பி வெள்ளைக் குட்டியர் நானாவை அழைத்து வருமாறு தமது சாரதிகளை அனுப்பி வைப்பார். இவரது விசேட குணங்களில் ஒன்று, தன்னைப் பார்க்க வருபவர்களுக்கு கரும்பு, மரக்கறி என அன்பளிப்பு கொடுத்தே அனுப்புவார். விசேடமாக அரச அதிபர் துரை அவர்களுக்கு எங்கள் வீட்டில் நெய்யப்படும் கம்பாயப் பிடவைகள் சாறன்களை வாங்கி வாகனத்தில் வைத்து விடுவார். ஊரில் நிற்கின்ற போது எங்கள் வீட்டுக்கு வராமல் உறங்கமாட்டார். பகற்காலங்களில் பாடசாலை விடுமுறையானால் என்னை அவரது வீட்டிற்கு அழைத்துச் சென்று பல கதைகள் சொல்வார். கண்டிப்பாக கரும்பும் பசுப் பாலும் சுவைத்தே ஆகவேண்டும்.

நீங்கள் அறிந்து கொள்ள வேண்டிய இன்னும் சில முக்கிய விடயங்கள் இருக்கின்றன. இவைகள் நமது கொடியேற்றத்துடன் எந்த வகையில் தொடர்பு கொள்கிறது, அந்த இளைஞர் குழுவினர் யாவர் என்பதை விரைவில் அறிந்து கொள்ளப் போகிறீர்கள். கொடியேற்ற மூன்றாம் நாளில் நாம் இப்போது நிற்கிறோம். ஐந்தாம் நாளில் இருந்து திடலுக்கு செல்ல வேண்டியிருக்கிறது. சற்று பொறுமையுடன் இருங்கள் நண்பர்களே!

மசூர் மௌலானா வீதியின் வடபுறம் மைதான வீதியின் மேற்கே முதலில்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அச்சிப்பிள்ளையின் குடியிருப்புக் காணியும், சில பனை, முந்திரி மரங்களும், அதை அடுத்து குருவி மனிசியின் முந்திரித் தோட்டத்துடன் கூடிய காணியும் அதையடுத்து பிஸ்மில்லாகாறியின் வளவில் பாரிய அளவினாலான ஒரு கோழிப் பண்ணை சம்சம் வீதி வரை கிசுமத்து மனீயின் குடியிருப்புக் காணியும் இருந்தது. இதில் கோழிப்பண்ணைக்கு பின் புறமாக முகம்மதலிபா என்ற அப்துல் றகீம் மரைக்காருடைய வீடு இருந்தது. இவர் ஒரே காலத்தில் பல தொழில்களில் ஈடுபட்டு வந்ததனால் மிகவும் வசதியாகவும் செல்வாக்குடனும் வாழ்ந்து வந்தார்.

குயின்மேரி என்ற இரண்டு கரைவலைத் தோணிகளுக்கு சொந்தக்காரர். றாணமடுவில் மற்றும் நமது மேட்டு வட்டையில் சொந்தமாக வயல் காணிகள் வைத்து நெற் செய்கையில் ஈடுபட்டார். வீட்டில் பத்துக்கும் அதிகமான தறிகள் இயங்கி வந்தன. அவற்றில் இரண்டு குளித்தறிகளும் அடக்கம். இங்கு நெசவாளர்களாக, சாப்பாட்டுக்கடை ஜின்னாவின் வாப்பா அபூபக்கர், நவ்பர் பேக்கரியின் தந்தை முகைதீன் பிச்சை, அவரது காக்கா குத்தூஸ், அவரது தம்பி மஜீத், முஸ்தபா பயில்வான், பொண்டுக மீரார், மீராமொகிதீன், நொளும்பு மாஸ்டர், குதிரயர்ர அகமலெவ்வை போன்றவர்களும், மீன்பிடி தொழிலுக்காக மன்னி ஓடாவியார், அலிமம்மது நானா, இஸ்மாயில் (சீப்பலஸ்), சேகாதிபோடி குடைக்கட்டியர் அச்சுமுகம்மது, சாய்வு தண்டயல் ஆகியவர்களுடன் அவரது தமிழ் நண்பர்கள் சிலரும், வயல்காறர்களாக வேலிப்பிள்ளை, பூபாலப் போடி, தேவநாயகம், சிவகுரு ஆகியவர்களும் உதவி யாளர்களாக இருந்தனர். தவிரவும் நெசவுக்கான நூல்கள் அப்போது பாகிஸ்தான், எகிப்து ஆகிய நாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்பட்டு அரச கூட்டுறவு நிலையங்கள் மூலம் பதிவு செய்யப்பட்ட சங்கங்களுக்கே வழங்கி வந்தனர். இந்த வகையில் இங்கு றகுமானியா சங்கம் அப்துல் றகுமான் மரைக்கார் அவர்களைத் தலைவராகவும், அப்துல் றகீம் மரைக்கார் அவர்களைச் செயலாளராகவும் கொண்டு இயங்கியது. இதனூடாகவே நெசவாளர்களுக்குத் தேவையான நூல்களை மட்டக்களப்புக்கு சென்று நூல் கொள்வனவு செய்யப்பட்டு இங்கு உரிய நெசவாளர்களுக்கு வழங்கப்படும். எந்த நேரத்திலும் இவரது வீட்டில் ஆட்களுக்குப் பஞ்சமில்லை.

இதே வேளையில் மத்திய பள்ளி வாசலில் ஒரு குர்ஆன் மத்ரசா வெள்ளத்தம்பி ஆலிம் என்பர் நடாத்தி வந்தார். இவருடன் பகுதிநேரமாக சாஹுல்ஹமீட் மௌலவி அவர்களும் மதரசாவில் விசேட வகுப்புகளை மேற் கொண்டார். அத்துடன் இப் பள்ளிவாசலின் செயலாளராகவும் இருந்தார். இப் பள்ளியின் சூழலில் பல இளைஞர்களில் சிலர் பாடசாலை செல்பவர்களாகவும் பலர் பாடசாலைக் கல்வியில் ஆர்வம் கொள்ளாது நெசவு, மீன்பிடி, பீடி சுற்றுதல் போன்ற


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொழில்களில் ஈடுபட்டனர். இன் நாட்களில் பிற கிராமங்களில் இருந்து வந்து எல்லோரும் உறங்கிய நேரம் பார்த்து ஆடு, மாடு மட்டுமன்றி கைக்குக் கிடைக்கிற பொருட்களைத் திருடிச் சென்றனர். இத் திருட்டுச் சம்பவம் நாளுக்கு நாள் அதிகரித்துச் சென்று கொண்டே இருந்தது. எவ்வாறாயினும் இதனைக் கட்டுப்படுத்த வேண்டும் என்ற நோக்கில் பல இளைஞர்கள் ஒன்றாக இணைந்து பாதுகாப்பு மேற்கொண்டனர்.

ஒரு இரவு நடு நிசியில் திருடவந்த ஒருவனின் அசட்டையினால் பக்கத்தில் தூங்கியிருந்த ஒருவர் கண்விழித்ததும் திருடன் திருடன் என்று கூப்பாடு போட்டதும் கள்வன் துண்டைக் காணோம் துணியைக் காணோம் என ஓட்டம் பிடித்தான். இதைக்கண்ட இரண்டு வாலிபர்கள் திருடனைப் பின்னால் விரட்டிச் செல்ல, முடிந்த வரை அவனும் ஓட அரசடியை மூவரும் நெருங்கிவிட்டனர். மேலும் ஓட முடியாத திருடன் ஒரு உபாயம் செய்தான். மெதுவாக நின்று பின்னால் வந்த இரு இளைஞர்களையும் நோக்கி "அவன் போற போக்குக்கு நாம எங்கே பிடிச்சம்" என்று கூற அவ்விருவரும் "அதுவும் சரிதான்" என்றபடி வீடு திரும்பினர். பின்னர்தான் அவர்களது மூளைக்குப் பட்டது கள்வன்தான் நம்மை அவ்வாறு சொல்லி ஏமாற்றிவிட்டான் என்பது. இப்படிப் பல சம்பவங்கள் நடந்தன. ஊர் மக்கள் இவ்வாறு இயங்கிய இளைஞர்களை மன்னிப் பட்டாளம் என்று அழைக்கத் துவங்கிவிட்டனர்.

அடுத்து நாம் சற்று கடற்கரைப் பக்கமும் சென்று வருவோம். 1950 களின் பின்னர் கடற்தொழில் மருதமுனையில் படிப்படியாக அதிகரிக்கத் துவங்கியது. பெரிய நீலாவணை, பாண்டிருப்பு ஆகிய கிராமங்களில், சொந்தமாக தோணி வலை வைத்திராத காரணத்தால், அப்பிரதேசங்கள் அனைத்திற்கும் சென்று மீன் பிடிக்க ஏதுவாக இருந்தது. நீலாவணை முதல் பாண்டிருப்பு வரை இருபதுக்கும் அதிகமான கொண்டோடி வலைகளையும் தோணிகளையும் வைத்திருந்தனர். இவற்றின் பெயர் களாகக் காக்கா மொட்டையன், குயின் மேரி, பஞ்சமி, பைரவன், டம்பர், வெள்ளைவத்தை, சாரவத்தை இப்படி பல பெயர்கள். 1958 களில் தோணிவலை உரிமையாளர்களுக்கு வாடி அமைப்பதற்கு மேற்குப்பக்க பூமியில் இட ஒதுக்கீடுகள் செய்வதென ஒரு செய்தி வந்ததுதான் தாமதம் அனைவரும் தமக்கென ஒவ்வொரு வளவுத் துண்டை அடைத்து அதில் வாடிகளமைத்து அதில் தமது மீன்பிடி உபகரணங்களைப் பாதுகாத்து வந்ததுடன் அவ் எல்லைகளுக்குள் தென்னம் பிள்ளைகளையும் வைத்து பராமரித்தனர்.

இப்போது நாம் நமது திடலுக்கு வரப்போகிறோம், ஆம், வந்து விட்டோம். தற்போது நாம் இருக்கின்ற திடலைத்தான் தம்பிராசா தண்டயல் பராமரித்து வந்தார். அவர் செய்னுலாப்தீன் மௌலவி அவர்களுடைய வாப்பா அப்துல் றசாக் என்பவர். பின் நாட்களில் அவரை நான் கொமாண்டர் என்று செல்லமாக


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

அழைக்கும் நேரங்களில் அவரது புன்முறுவலைப் பார்க்க வேண்டுமே, ப்பா...

வழமை போல அன்றும் பெரிய ஆலமரத்து நிழல்ல விளையாடிக்கி இரிக்கம். வளைச்சி கம்பி வலையால அடைச்ச அரை லொறி ஒண்டு வந்து நிண்டிச்சி. அதுக்குள்ள இருந்து காக்கி நிறத்தில கட்டைக் களிசானும் அரைக்கை சேர்ட்டும் போட்டாப்போல நாலஞ்சி பேர் எறங்குறாங்க. ஒராள்ள கையில பொல்லு. இன்னொராள்ள கையில சொட்கண் ஒண்டு. மத்தாள் என்னண்டா பெரிய அத்தாங்கு ஒண்டு. இன்னம் ரெண்டு பேர்ர கையில சாக்கும் தேடாக் கவுறும். எங்களுக்கெண்டா ஒண்டும் வெளங்கல்ல. கொத்தன் சேர்ர மொகத்த மாறி மாறி பாத்தம். அவருக்கும் மொதல்ல வெளங்கல்ல. பொறகுதான் தெடல் பக்கமா பாத்திற்று, அவனுகள் விசர் நாய் புடிக்க வந்திருக்கானுகளாக்கும் எண்டு. நானெண்டா உண்மையா நெனச்ச நம்மட கொடியையும் அதை ஏத்தின ஆக்களையும்தான் புடிக்கப் போறானுகளோ எண்டு.

ரெண்டு மணித்தியாலம் எப்பிடி போன எண்டு தெரியல்ல. வந்த ஆக்கள் அந்த மையத்து புட்டியில ஒடித்திரிஞ்ச பத்து பயினஞ்சி நாயள புடிச்சி அந்த அரை லொறிக்குள்ள போட்டுக்கு போனாங்க. சனமெண்டா கேள்வி பட்டு கேள்வி பட்டு கெடந்த ஆக்களெல்லாம் வந்திற்றாங்க புதினம் பாக்க. மஹ்ரியாப் போச்சி. பாவாமார் அவங்கட பாட்டுக்கு அங்கால ஆடுறதும் றாத்திபாம் எண்டு எழும்பி எழும்பி குதிக்கதும் வெட்டுறதும் குத்துறதுமாக் கெடக்கு. கொஞ்சப் பேர் அதை வெச்சிக்கி நிக்காங்க. இன்னம் கொஞ்சப் பேர் கடைவளிய சுத்திக்கி இரிக்காங்க. இஞ்ச பள்ளிக்குள்ள மௌலத்து ஓதுறத்துக்கு ரெடியாகிறாங்க. இஷா தொழுது முடிய தொடங்குவம் எண்டு ஆலிமு சொல்லிப் போட்டாராம் எண்டு இண்டைக்கி கொஞ்சம் பிந்திற்று. அதுக்குள்ளயும் சாப்பாட்டுக்கு என்ன சாமான் வந்திரிக்கு எண்டு அறியிறதிலதான் கவனமா இரிக்காங்க. ஆலிமும் வந்தாச்சி, மௌலூதும் ஆரம்பிச்சிற்றாங்க, பதமும் பாட்டும் தூள் பறக்குது. ஒருமாதிரியா ஓதி முடிச்சிற்று ராச்சாப்பாட்டையும் அடிச்சிற்று மொள்ள மொள்ள ஆக்கள் கலயத் தொடங்கிற்றாங்க. அண்டைய நாள் ஒரு மாதிரியா முடிஞ்சி. விடிஞ்சா ஆறாவது நாள்.

பொழுது நல்லா விடியவுமில்லை. ஒவ்வொருத்தர்ர கையிலயும் மம்பட்டி. ஏழெட்டுப் பேராக்கள் நிக்காங்க. சுணாமியில மகுத்தான ஆக்கள ஒருமிக்க அடக்கின எலவ, அந்த எடந்தான் நான் இன்னா சொல்லுற. எல்லாருமா சேந்து ஒரு மேடையப் போல மண்ணைக் குமிச்சாங்க, நடு மத்தியானமாப் போச்சி, பெரிய மேடைமாதிரி மணலக் கூட்டி முடிச்சிற்றாங்க. ஒரு மூணு மணியப் போல வேற கொஞ்சாக்கள் வந்து வளச்சி கம்புகள நாட்டி வளச்சி கவுறும் கட்டினத்துக்கு பொறகுதான் வெளங்கிச்சி என்னமோ குஷ்தி போடப் போறாங்கெண்டு. கேள்விப்பட்ட


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சனங்களெல்லாம் வந்திற்று. தேசமும் திருநாளுமா போச்சி அந்த நாள். வளச்சி பெற்றோள் மெக்ஸ் லைற் ஏழெட்டு பத்துது. பீக்கறில யாரோ தொண்ட கிழிய கத்திக்கி இரிக்கார். இதையெல்லாம் கேக்க நெலமயில ஆக்களில்ல. எல்லாரும் வாயப் பொளந்துக்கு மேடயத்தான் பாத்துக்கு இரிக்காங்க. இதோ வந்துவிட்டார் சாகுல்கமீட் பயில்வான். சத்தம் கேட்டதான் தெரியும் சந்தோசத்தில எல்லாரும் கையடிக்கத் தொடங்கிற்றாங்க. அமைதி அமைதி பீக்கரில அந்தாள் சொல்லிக்கிட்டுத்தான் இரிக்கார். சனம் கேட்டாத்தானே வாப்பா!

இதோ சகீட் பயில்வான். மறுகா கையடிக்கத் தொடங்கிற்றுதுகள் இந்த சனங்கள். இனி எங்க கையடி நிக்கப் போகுது எண்டு அறிவிக்கவருக்கு தெரியுந்தானே. தொடந்து இதோ கோயா நெய்னா மொகம்மத் பயில்வான். இதோ வருகிறார் அப்துல் அஸீஸ் பயில்வான். ப்பா, சனத்துக்கெண்டா இனி இல்லயெண்ட சந்தோசம். பொறகு சொன்ன ரெண்டு பேரயும் வெளங்குத? சாகுல்கமீத் பயில்வான், சகீட் பயில்வான் எண்டா எல்லாருக்கும் லேசா வெளங்கும். கோயா நெய்னா எண்டா, நடிகர் மணாபட மச்சான் ஜலீல்ல வாப்பா. அஸீஸ் பயில்வானெண்டது நம்மட மசூர் மௌலானா இரிக்காங்ளே அவியட மச்சான். இப்ப வெளங்கிற்ற? பயில்வான்மார்களின் சாகசங்கள் இடம்பெறப் போகிறது. இதற்கு நடுவராக இப்றாகீம் பயில்வான் கடமையாற்றுவார் எண்டு சொன்னான் தெரியும் ஒரு மெலிஞ்ச ஆள் வாறார். அங்க ஆர்ராண்டு பாத்தா நம்மட நாப்பட்டிமனையில களியாணம் முடிச்சிக்கி இரிக்காரே இபுறாகிம் வைத்தியர் எண்டு அவர்தான் வாறார். மொதல்ல சகீட் பயில்வான்தான் வந்தார். ஒரு செவத்த களிசான்தான் போட்டுக்கு இருந்தார். வந்தார் மனிசன் ஒரு சொட்டு குனிஞ்சி இடுப்பில கையக் குத்திக்கி அவர்ர வகுத்த உறுட்டின உறுட்டு இரிக்கே, ப்பா, மறக்கேலா வாப்பா. இனி மல்யுத்தம் நடைபெறப் போகிறது எண்ட சத்தம் கேக்கிறதுக்கும் சகீட் பயில்வானும் கோயா பயில்வானும் வந்தாங்க. ஆளையாள் பிடிச்சி உளுத்தாட்டுற மாதிரியும் அடித்து நொறுக்கிற மாதிரியும் செஞ்சி காட்டினாங்க. மத்த சோடியும் இப்புடித்தான் செஞ்சாங்க. பொறகுதான் வெளக்கங் கெடச்சது. இது ஒரு சினேக பூர்வமான விளையாட்டு எனறு. இப்பண்டா பஞ்சு மெத்தைய போட்டு விளையாடர மாதிரியில்ல அப்ப. மணல்ல இப்ப அடிக்காப்போல அடிச்சா ஓரடியோட ஆள் குளோஸ்.

அண்டக்கி ரெண்டு மணியா போச்சி எல்லாம் முடியிறத்துக்கு. மறுகா என்னமோ சொல்லுற கேக்குது. உத்துக் கேட்டதில நாளை அலிபாதுஷா நாடகம் இதே மேடையில் நடைபெற ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன என்று. நாளக்கி நாடகம் பாப்பம் வாங்க சரியா!

ஆறாம் நாள் மல்யுத்தம் நடைபெற்ற வேளையில் அறிவித்தார்கள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அல்லவா? நாளை அலிபாதுஷா நாடகம் காண்பிக்கப்படும் என்பதாக. ஆம், காலையிலிருந்தே அதற்கான ஆயத்தங்களை செய்வதற்காக சிலர் வந்து மேடைபோடும் வேலைகளில் மும்முரமாக ஈடுபட்டனர். மாலை ஐந்து மணி சுமாருக்கு சகல வேலைகளையும் நிறைவு செய்து மஃரிப் தொழுகையின் பின்னர் நாடகம் ஆரம்பிக்கப்படும் என்று அறிவித்தல் செய்தனர்.

அலிபாதுஷா நாடகம் ஏற்கனவே 1952 களில் முதன் முதலாக மேடையேற்றப்பட்டு நல்ல வரவேற்பைப் பெற்றது மட்டுமன்றி அதன் பின்னர் பல தடவைகள் மேடைகண்டுள்ளதனால் இதற்கு நல்ல வரவேற்பு இருந்தது. இந்த நாடகத்தின் பிரதான நடிகர்களாக மணப் நீதிபதியின் தந்தை தாவுத் லெப்பை, முதுலித்தீன் டெய்லரின் தந்தை இப்றாலெப்பை, அன்வர்தீன் PD அவர்களின் தந்தை சாய்வு லெப்பை, வெள்ளைவத்தை அஸீஸ் பிள்ளை ஆகியோர் பிரதான பாத்திரமேற்று நடித்தனர். அவசர அவசரமாக பள்ளியினுள் மௌலூத் ஓதியவர்களும் களரியை முடித்துவிட்டு நாடகம் பார்க்க வந்தனர். ஒருவாறு ஏழாம் நாளும் முடிவுற்றது.

எட்டாம் நாள் அதே மேடையில் Mr. மருதமுனை செய்யதலி அவர்களுடைய தந்தை சீனிமுகம்மது மௌலானா அவர்களுடைய சீனடி சிலம்படி நெருப்புப் பந்தம் வீசுதல் மற்றும் சுருட்டுவாள் வீசி மக்களின் ஏகோபித்த அபிமானத்தைப் பெற்றார். அடுத்தடுத்து வந்த நாட்களில் கொடி இறக்கும்வரை அந்த மேடையை பாவாக்களே ஆக்கிரமித்திருந்து தமது ஆடல் பாடல், றாதிப், குத்து வெட்டு என தமது சாகசங்களைக் காட்டினர். எப்படியோ எதுவித எதிர்ப்புக்களோ பிரச்சினைகளோ இன்றி 1959 ஆம் வருட கொடியேற்ற விழா நிறைவு பெற்றது. இது போலவே 1960 ம் ஆண்டு கொடியேற்ற விழாவும் முன்னரைப் போல் கோலாகலமாக நடைபெற்றது. நாடகங்கள், பொல்லடி, பாட்டுக் கச்சேரி (கஞ்சா பஜனை), பாவாக்களின் நிகழ்ச்சிகள் என மக்கள் கண்டு ரசிக்கக்கூடியதாக இருந்தது.

1960ல் எமது கிராமத்தின் தற்போது நல்ல ஆசிரியர்களாக உள்ளவர்களில் அதிகமானவர்கள் O/L பரீட்சை எழுதிவிட்டு நெசவுதல், பீடி சுற்றுதல் தொழிலில் ஈடுபட்டனர். அந்நாட்களில் றசீது மரைக்கார், மலையாளத்தார், ஏபீஎம் மரைக்கார் மற்றும் கல்முனைக்குடி தாஜ்மஹால் ஆகியோர்களின் பீடிசுற்றும் நிலையமும், அப்துல் றகீம் மரைக்கார், அப்துல் றகுமான் மரைக்கார், பட்டாணியார் ஆகியவர்களுடைய தறிமால்களும் மிக பிரசித்தம். பரீட்சை எழுதிவிட்டு ஆசிரியர் வேலைக்காக காத்திருந்த இவர்கள் மேற் சொன்ன இடங்களில் தொழிலுக்காக சேர்ந்தனர்.

மாலைவேளைகளில் பொழுது போக்கிற்காக ஒன்று கூடுவதும் முஸ்பாத்தியாக கதைப்பதும் நாடகங்கள் எழுதுவது, நடிப்பது போன்ற விடயங்களில் ஈடுபட்டு வரும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேளையில்! ஏன் நாம் ஒன்று சேர்ந்து ஒரு சங்கம் அமைக்கக் கூடாது என்று சிந்தித்ததன் விளைவாக இளைஞர் கலைக்கழகம் என ஒரு சங்கத்தை ஆரம்பித்து இயங்கத் துவங்கினர். பல பொதுப் பணிகளிலும் தம்மை ஈடுபடுத்தினர். அந்த நாட்களில் குழு ரீதியாக மன்னிப் பட்டாளம் மட்டுமே இயங்கி வந்தது. இவர்கள் சற்று முரட்டு சுபாவமும் ஒரு வகை சண்டித்தனம் காட்டுகிற குழுவாகவும் இருந்ததனால் ஊர்ப் பெரியவர்களோ உலமாக்களோ இவர்களை நெருங்குவதற்கு தயங்கினர். இதற்கிடையே ஊரில் நடைபெறும் கொடியேற்ற நிகழ்வை தடைசெய்ய வேண்டும் என்ற கருத்துக்களும் உலமாக்கள் சிலரால் முன்வைக்கப்பட்டது இதனைச் சாத்தியப் படுத்துவதானால் மன்னிப் பட்டாளத்தை எதிர்க்கக் கூடிய ஒரு குழுவினர் அவசியம் தேவை என்பதைக் கவனத்திற் கொண்ட உலமாக்கள், ஏற்கனவே இதற்கு தமது எதிர்ப்பைத் தெரிவித்திருந்த ஆசிரியர்களான தமிழ் அபூபக்கர் மற்றும் மீராப்பிள்ளை ஆகியோரை நெருங்கி அது சம்பந்தமாக கலந்துரையாடி, இது தொடர்பில் மிக நிதானமாகவே செயற்படவேண்டும் என்றும் தீர்மானித்தனர். மக்களின் ஆதரவைப் பெற்றிருந்த ஒரு விழாவாக கொடியேற்ற விழா அச்சமயம் பார்க்கப்பட்டதால் நன்கு திட்டமிட்டே இது விடயத்தில் இறங்க வேண்டும் என்பதிலும் கவனமாக இருந்தனர். இதனிடையே மேலும் இரண்டு வருடங்கள் கொடியேற்ற விழா வழமை போல் நடந்து முடிந்து, 1963 ஆம் வருடத்திற்கான கொடியேற்ற விழா நடைபெற இன்னும் ஓரிரு மாதங்களே இருந்தது. ஐந்தாவது கொடியேற்ற விழாவிற்கு என்ன நடந்தது.

அன்று ஒரு வெள்ளிக் கிழமை. பெரிய பள்ளியில ஜதிம்ஆ, அப்ப ஒரு கிழமை பெரிய பள்ளியிலயும், அடுத்த கிழமை சின்னப் பள்ளியிலயும்தான் ஜதிம்ஆ தொழுகிற வழமை. இதுக்கு மொதல் இரவு உலமாக்கள் பலரும் கொடி ஏற்றுவதைத் தடுக்க வேண்டும் என்ற கருத்தில் உள்ள சிலரும் ஒன்று கூடி, அன்றைய குத்பா பிரசங்கத்தில் இது தொடர்பில் சொல்ல வேண்டும் என்ற முடிவில் பிரசங்கம் செய்யவிருந்த அப்துல் மஜீத் மௌலவி அவர்களிடம் கூறி சில ஆலோசனைகளும் வழங்கப்பட்டு, அன்றைய குத்பா பிரசங்கத்தில் இலேசாக கொடியேற்றுவதால் எதுவித நன்மைகளும் இல்லை என்றும், முக்கியமாக ஆண்களும் பெண்களும் கலக்கின்ற வாய்ப்பை ஏற்படுத்துவதற்கு இந்த விழா கால்கோளாக அமைகிறது என்றும் சொல்லி தனது உரையை அவர் முடித்தார். தொழுகை முடிந்ததும் ஒரு சலசலப்பு. மன்னிப் பட்டாள உறுப்பினர்கள் வெளியில் குத்பா ஓதிய மௌலவியைத் திட்டியதுடன் அவர் வெளியில வரட்டும் என்று உறுமிக் கொண்டு நின்றனர்.

இந்த நிகழ்வானது படித்த இளைஞர்கள் மத்தியில் ஒரு சிந்தனை மாற்றத்தை ஏற்படுத்தியது. இப்போது சமூகசேவைகள் செய்வதற்கென பல சங்கங்கள் உருவாகியிருந்தன. இவற்றின் உதவிகள் இவ்விடயத்தில் அவசியம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என உணரப்பட்டு இவர்களுடன் ஒரு கலந்துரையாடல் ஏற்பாடு செய்யப்பட்டு, இக்கலந்துரையாடல் இரகசியமாக ஓர் இடத்தில் கூட்டப் பட்டது. இக்கூட்டத்தில் முக்கியமான சில தீர்மானங்கள் எடுக்கப்பட்டன. அதில் ஒன்று அச்சிமுகம்மது ஓடாவியாரின் தலையீட்டைத் தவிர்த்தல். சும்மா இலேசில நடக்க விசயமில்ல இது. எப்படியோ இந்தப் பொறுப்பை அவரது மச்சினன் அப்துல் றகீம் மரைக்காரிடம் ஒப்படைக்கப்பட்டு அதற்கான ஒப்புதலும் வாங்கப்பட்டாயிற்று.

அந்த நாட்களில் புரட்சிக் குணம் கொண்ட, முதன்மை ஊக்கம் உடைய, சமூக சேவைகளில் அதிகம் ஈடுபடவேண்டும் என்ற ஆர்வத்துடன் சில இளைஞர்கள் காணப்பட்டனர். இவர்களில் பிரதானமான ஒருவராக அமீன் ஆசிரியர் காணப்பட்டார். அந்த சிலருடனும் ஒரு கலந்துரையாடல் மேற்கொள்ளப்பட்டது. கொடியேற்ற நாளும் நெருங்கியது. 1963 ஆம் வருடம் மருதமுனையில் ஐந்தாவது கொடியேற்ற விழா மிகக் கோலாகலமாக ஆரம்பிக்கப்பட்டது. இதுதான் இறுதியான கொடியேற்ற விழா என்று அன்று எத்தனை பேர்தான் அறிந்திருப்பார்கள்!

அப்துல் றகீம் மரைக்கார் ஒரு புதிய தோணிவலை வாங்க வேண்டும் என்றும் அதனைக் கொள்வனவு செய்ய நீர்கொழும்புக்குப் போக வேண்டும் என்றும், தன்னுடன் ஓடாவியார் மச்சான் வரவேண்டும் என்பதான ஒரு விசயம் உருவாக்கப்பட்டு, பல வாதாட்டங்களுக்குப்



**பன்னூலாசிரியர்**
**ஏ. ஆர். ஏ. சத்தார்**

பின்னர் ஓடாவியாரின் சம்மதமும் பெறப்பட்டது. மச்சினனின் வேண்டுகோளை மறுத்தால் அவரிடம் இருந்து அடிக்கடி கிடைக்கிற அன்பளிப்புகளுக்கும் உதவிகளுக்கும் ஏதாவது தடங் கல்கள் வந்துவிடுமோ என்ற பயம் வேறு. தவிரவும் ஓடாவியார் தனது மனைவியின் வார்த்தைகளுக்கு ஓரளவு கட்டுப்படுபவர் என்பது ஒரு புறமிருக்க, "இஞ்சயிங்க, தம்பி தோணிவலை வாங்க எங்கயோ போப்போறானாம். கூடப் போய் வாங்கஎன்" மனைவியின் வார்த்தைக்கு மறு வார்த்தை சொல்வாரா அவர். கொடியேற்றி ஐந்தாம் நாள் மச்சானும் மச்சினனும் தோணிவலை வாங்க நீர்கொழும்புக்குப் புறப்பட்டனர்.

(தொடரும்)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டுரை

# மனித வாழ்வியலில் ஏன் உளவியல் அவசியம்?



நாம் வாழுகின்ற வாழ்க்கைக் கோலத்தில் ஒரு மனிதனுக்கு அடிப்படைத் தேவையான நீர், உணவு, வசிக்க வீடு, உடமைகள் எவ்வளவு முக்கியமோ அதே போல உளவியலும் அவசியமே.

இன்றைய நவீன கால கட்டத்தில் உளவியலின் அவசியம் அதிகரித்துள்ளதை நாம் உணரலாம். அன்றைய காலகட்டத்தில் உளவியல் பிரச்சனைகள் குறைவாகவே காணப்பட்டன. அதாவது அன்றைய காலத்தில் கூட்டுக்குடும்ப வாழ்க்கை, இயற்கையான சுற்றுச் சூழல், ஆரோக்கியமான உணவுகள், கூட்டாக விளையாடும் விளையாட்டுக்கள் என அனைத்தும் ஒருங்கே கிடைத்ததால் உளவியல் பிரச்சனைகள் குறைவாகவே காணப்பட்டன.

உதாரணமாக ஒரு வீட்டில் ஒரு குழந்தை பிறந்தால் அந்தக் குழந்தையை தாங்கிட, அரவணைத்திட பத்துக் கைகள் காத்துக்கிடக்கும். அன்பும், பண்பும், பாசமும் ஒருங்கே சேர்த்து ஊட்டப்படும்.

**எச்.டீ.எச் பஹ்தா, கொழும்பு.**



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

குழந்தை பிறந்ததிலிருந்து தாய்க்கும், சேய்க்கும் சேவைகளை அன்போடு செய்திட அனைவரும் கூடி நிற்பர். அதே போல தாய்க்கான ஊட்டச்சத்து உணவுகளும் நல்ல முறையிலே கிடைத்து விடும். இதனாலே உள்ளத்தில் அன்பும், புத்துணர்வும் நிறைந்து விடும். உளவியல் பிரச்சனைகளும் அகன்று விடும். இதனாலே வீட்டில் உள்ள முதியவர்கள் நாங்க அப்போ பத்து புள்ளய பெத்து வளர்த்தோம். இப்போ ஒரு பிள்ளையை பெற்றெடுக்க பல காரணங்களை கூறுகிறார்கள். உலகத்திலே இல்லாத, பொல்லாத நோய் வேறு என இன்றைய சமுதாய பெண்களை சொற்களால் காயப்படுத்துகின்றனர்.

மனித சனத்தொகை பெருக்கெடுக்க, காலமும் நேரமும் சுருங்கச் சுருங்க உலகமும் நவீன மயமாக்கலோடு பயணிக்க அனைத்திலுமே மாற்றங்கள் என்றால் அன்றைய கால மக்களுக்கு புரியவைக்க முடியாது. அதனால் இன்றைய காலகட்டத்தை பொறுத்தவரையில் நிச்சயமாக உளவியலின் தேவை பெருகிவருகிறது.

இன்றைய உலகிலே அடுக்கிடுக்கு மாடிகள் அடுக்கிக் கொண்டே செல்கின்றன. இயற்கை வளங்கள் அழிக்கப்படுகின்றன இயற்கை உணவுகள் அழிந்து செல்கின்றன. நாம் மூச்சு விடும் காற்றும் கழிவுகளாக மாறி வருகின்றது. பசுமையில்லாத உலகிலே எங்கே சுதந்திரக்காற்று கிடைத்து விடும். நிறுவனங்களில் இருந்து வெளியேற்றப்படும் கழிவுகளால் நீர் நிலைகளும் மாசடைந்து, வளியும் மாசடைந்து செயற்கை உலகிலே இன்றைய சமூகம் தத்தளிக்கிறது.

இன்றைய அடுக்கு மாடிகளில் நாம் இருவர் நமக்கிருவர் என வாழ்ந்து வருகின்றனர். இவ்வாறு வாழ்ந்து வருகின்ற குடும்பங்களிலே ஆணும், பெண்ணும் இருவருமே வேலைக்குச் செல்கின்றனர். இன்றைய உலகிலே செலவுகள் அதிகம் இதனாலே இருவரும் வேலைக்குச் செல்கின்றனர். வீட்டு வேலைகள் செய்ய உதவிக்கு யாரும் இல்லாமை, வீட்டு வேலைக்கு ஆட்கள் எடுத்தாலும் அவர்களுக்கான சம்பளம் வழங்கும் போது அதுவும் மனதைப் பாதிக்கிறது. குழந்தைகளை அவர்கள் பராமரித்தாலும் சம்பளத்திற்காக பராமரிக்கிறார்களோ அன்றி அன்பும் பண்பும் பகிரப்படாது வளர்க்கப்படுகின்றனர். இதனால் பிஞ்சு மனங்களை அன்பால் அரவணைக்காது வளர்க்கப்படுவதால் தாய் தந்தையரின் அன்பும் குறைவாகக் கிடைப்பதால் அவர்கள் உளவியல் ரீதியாக பாதிக்கின்றனர். அது மட்டுமல்லாது இன்றைய நவீன கைப்பேசி கைக்கு அடக்கமாக இருந்தாலும் முழு உலகையையே அடக்கி வைத்துள்ள ஒரு தொல்லை பேசி. இதற்கு குழந்தைகள் அடிமையாவதால் அவர்களுடைய எதிர்காலம் கேள்விக்குறியாக மாறுகிறது சிறு வயது தற்கொலைகளும் இதனாலே ஏற்படுகிறன.

அன்றைய காலகட்டத்தில் வயது முதிர்ந்தவர்கள் தாம் உளவியல் பிரச்சினைகளுக்கு ஆளாகினர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்றைய நவீன யுகமோ கருவிலே பல பிரச்சினைகளை சந்திக்கின்றது என்பதே உண்மை. கருவறையில் இருக்கும் போதே குழந்தைகளுக்கு அனைத்தும் கேட்கும் என்று ஆய்வுகள் கூறுகின்றன.

தாயும் தந்தையும் தனித்திருக்க குழந்தையும் கருவிலே தனிமையை உணர்கிறது. அடுத்து உண்ணும் உணவுகள் செயற்கை உரங்கள் இடப்பட்ட உணவுகள். இதனாலே பிறக்கும் முன்பே பல நோய்கள் தாய்க்கும், சேய்க்கும் ஏற்படுகின்றன. பெற்ற பின்னும் தாயையும் சேயையும் அன்பால் அரவணைத்திட யாரும் இல்லை. இதனாலே மனதளவில் பாதிக்கப்படுகின்றார்கள்.

அதே போல இன்றைய ஆண்களும், பெண்களும் சரிக்குச் சமமாக கைப்பேசியோடு காலத்தை ஓட்டுகின்றனர். இந்த கைப்பேசி ஒருவரை எந்த வேலையையும் செய்ய விடாது பசியையும் போக்கும் ஒரு வகை உணவே இதன் பாதிப்பு மனித சமூகத்தை அழிவிற்கே கொண்டு செல்கிறது. இன்றைய காதி நீதிமன்றங்களில் விவாகரத்திற்காக பலரும் காத்து நிற்கின்றனர். அதாவது அங்கு எடுத்து வைக்கப்படும் காரணிகளாவன என் கணவன் அதிக நேரம் கைப்பேசியிலே செலவிடுகிறார், நான் பேசுவதைக் கேட்கமாட்டார், என்னுடைய உணர்வுகளுக்கு மதிப்பளிக்கமாட்டார், நான் தனியாகவே அனைத்து வேலைகளையும் செய்ய வேண்டும், இவர் சிறு உதவிகளையும் செய்ய மாட்டார், நான் இவரின் அன்புக்காக ஏங்கி ஏங்கி ஏமாற்றம் அடைந்து விட்டேன் என கண்ணீர் சிந்தும் பெண்கள் இன்றைய சமூகத்தில் நிறையப் பேர் இருக்கின்றனர்.
அதே போல ஆண்களும் தங்கள் மனைவியினிடம் அனைத்தையும் புரிந்து நடக்கமாட்டார்கள். சிறு பிள்ளைகள் போல் அவர்களும் அனைத்திற்கும் கோபப்படுவார்கள், அவர்களும் கைப்பேசியிலே காலத்தைக் கழிக்கின்றனர் என அவர்களும் குற்றம் சாட்டுகின்றனர். இவைகளுக்கான தீர்வாக ஆணும், பெண்ணும் நிச்சயமாக உளவியல் பரிசோதனை செய்யப்பட்டு அவர்களின் வாழ்க்கையை அழகான முறையிலே நகர்த்த உளவியலின் அவசியம் கட்டாயமாகிறது.

அதே போல இன்றைய காலகட்டத்தில் தொடர்ச்சியாக அனைவரது உடல் ஆரோக்கியமும் குன்றியே காணப்படுகிறது. பிறக்கின்ற குழந்தை முதல் வயோதிபர் வரை அனைவருக்கும் கொடிய நோய்கள். நாளும் பார்த்துக்கொண்டும் கேட்டுக் கொண்டும் இருக்கிறோம். இதற்கான நிவாரணத்திற்காக பல லட்சங்கள் தேவைப்படுகின்றன. இதனை திரட்டிட பலரும் கடும் சிரமத்திற்கு உள்ளாகின்றனர். இதனாலே பலரும் மனதளவில் பாதிக்கின்றனர்.

அதே போல இன்று பலருக்கும் வைத்தியசாலை தாய் வீடு போல ஆகிவிட்டது. வேண்டா வெறுப்போடும் கட்டாயமான ஒரு சூழலிலே வைத்தியசாலையிலே தங்க வேண்டிய


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரிதாப நிலை. அன்றைய காலத்தில் குழந்தைப்பேறு கூட வீடுகளிலே தான். ஆனால் இன்று அனைத்தும் தலைகீழாக மாறிவிட்டது என்பதே உண்மை. இதற்கான தீர்வாக கூட்டுக் குடும்பங்கள் இல்லாவிடினும் தாய், தந்தையர்கள் ஒற்றுமையாக இருக்க வேண்டும். மனைவியின் கருமங்களில் கணவனும் பங்கெடுக்க வேண்டும். ஒருவருக்கு உதவியாக மற்றவர் செயல்பட வேண்டும். உணர்வுகளுக்கு மதிப்பளித்து அன்பால் அரவணைக்க வேண்டும் எனக்கு க்'டங்கள் வரும் போது என்னுடன் என் கணவன் இருக்கிறான் என்ற உணர்வு அவர்களுக்குள் வர வேண்டும்.

இதே போல மனைவியும் சிக்கனத்தை கடை பிடித்து கணவனின் தொழிலை சரியான முறையில் செய்திட மனைவியும் ஊன்றுகோலாய் நிற்க வேண்டும். பிரச்சினைகள் வரும் போது இருவரும் பங்கெடுத்து அதனைத் தீர்க்க வேண்டும். குழந்தைகளுடன் நாமும் சேர்ந்து விளையாட வேண்டும். அவர்களுக்கான தாய்ப்பாலையும் தாய்ப் பாசத்தையும் சேர்த்தே ஊட்ட வேண்டும். ஓய்வு நேரங்களில் கைப்பேசிகளைக் கொடுக்காது அவர்களுடன் நேரத்தைக் கடத்த வேண்டும். நாமும் அவர்களோடு சேர்ந்து விளையாட வேண்டும். குழந்தைகளின் மனதிலும் என் பெற்றோர்கள் என்னுடன் இருக்கின்றார்கள் என அவர்களின் மனதிலும் நாம் இடம் பிடிக்க வேண்டும். இவ்வாறு குழந்தைகளோடு நாமும் செல்வதால் அவர்களும் மகிழ்ச்சியாக இருப்பார்கள். இதனால் உள்ளம் சீராகி மன நலமும் ஆரோக்கியம் பெற்று விடும்.

அதே போல ஆரோக்கியமான உணவுகளை வீட்டிலே நட்டு உண்டால் மிகவும் சிறப்பாக அமையும். சோம்பல் நீக்கி நாளும் உடற்பயிற்சிகளை மேற்கொள்ளல், யோகா செய்தல், குடும்பத்தோடு பூங்காக்களுக்குச் செல்லல், அதிக நேரம் குடும்ப உறுப்பினர்களோடு கதைத்தல், அன்பைப் பரிமாறிக் கொள்ளல். இவை அனைத்தும் சிறந்த எதிர்காலத்தை உருவாக்கும்.

அதே போல இன்றைய காலகட்டத்தையும், அன்றைய காலகட்டத்தையும் முடியுமான அளவு குடும்ப உறவுகளுக்கு எடுத்துக்காட்டி அதற்கான விளக்கங்களைக் கொடுத்தால் சொற்களால் காயப்படுத்தும் உறவுகள் இதனை புரிந்து கொண்டால் உளவியல் ரீதியான பிரச்சினைகளைத் தடுக்கலாம். தற்காலத்தில் அனைவருக்கும் இதற்கான விளக்கங்கள் அவசியமாகிறன. பரிகாசம் செய்வதையும் இக் காலகட்டத்தில் நிறுத்த வேண்டும். அதைத் தாங்கும் சக்தி கூட இன்றைய சமூகத்திலே இல்லை. இதனால் பல விபரீதங்கள் ஏற்படுகின்றன.

மனித சமுதாயத்திலே வாழ்வியலில் உளவியலின் அவசியம் எந்த அளவிற்கு முக்கியத்துவம் வாய்ந்தது என்பது நிரூபணமாகிறது. உளவியலோடு நாமும் வாழ்வைச் சீராக்குவோம்.

●●●


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என் மகளாய் இருந்து விடு

மாயா ஆன்ஜலோ

## மாயா ஆன்ஜலோ

கவிஞர் மாயா ஆஞ்ஜலோ (04.04.1928-28.05.2014) ஒரு புகழ்பெற்ற அமெரிக்க பெண் எழுத்தாளர், கவிஞர், குடிமை உரிமைப் போராளி மற்றும் பன்முகக் கலைஞர் ஆவார். இனவெறி, சமத்துவம், மற்றும் அடையாளத்தை மையமாகக் கொண்டு அவர் பல சுயசரிதைகள், கட்டுரைகள் மற்றும் கவிதைகளை எழுதினார். அவரது மிகவும் பிரபலமான புத்தகம் "I Know Why the Caged Bird Sings" (கூண்டுப் பறவை ஏன் பாடுகிறது என எனக்குத் தெரியும்) ஆகும்.

சிங்கள மூலம்:
**பராக்கிரம கொடித்துவக்கு.**

தமிழ் வடிவம்:
**கலாபூஷணம் மாவனல்லை எம். எம். மன்ஸூர்.**

அதிவேக நெடுஞ்சாலையில் ஒரு
சொகுசு வாகன அணிவகுப்பு
அது எங்கே போகிறது?
கணவான்கள் எரியும் எதிலிருந்தும்
புகைக்கிறார்கள் ஒரு சிலர்
கிண்ணத் தேனில் உயிரைக்
குடிக்கிறார்கள். அவர்கள்
உங்களை ஆச்சரியத்துடன்
பார்த்து எங்கே திரும்புவது என்று
கேட்கிறார்கள்...
எனக்குத் தெரியும் வா
வந்து எனது மகளாய் இருந்து விடு.

சில சோதிடர்கள்
உலகம் நாளை முடியும்
என்று கூறுகிறார்கள்
சிலர் அதை நாம்
பெறுவோம் என்று கூறுகிறார்கள்
இன்னும் ஒரு வாரம் அல்லது
இரண்டு வாரம் அல்லது
இரண்டு நாட்களுக்கு
செய்தித்தாள்களின்
பக்கங்கள் பயங்கரமான
விஷயங்களின் வாந்தியால்
நிரம்பி உள்ளன. எனவே
அவர்கள் உங்களை
ஆச்சரியத்துடன் பார்த்து
எங்கே திரும்புவது என்று
கேட்கிறார்கள்
நான் அறிவேன் வா
வந்து எனது மகளாய்
இருந்து விடு.

●


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நடம்பதித்த ஈழத்து கவிஞர்கள்

## விழித்தெழு துற்பிரயோகிகள் துடைத்தெறி பெண்ணே

- சே. அப்துல் ரஸாக், ஏறாவூர் -

முளைத்திடும் வேளையும்
முகர்ந்திடத் துடித்திடும்
வளர்ந்ததன் பின்னும்
வலிமையைக் காட்டி
வளைத்திடும் ஆண்மை
வதைத்திடும் பெண்மையை

காமம் சுகிர்த்திடத்
தருணம் பார்த்தும்
மரணம் கொடுத்தும்
புணர்ந்திடும் உலுத்தர்
தோலினை உரித்திடத்
தயங்காதே பெண்ணே

கொஞ்சமும் அஞ்சாது
ஆத்திரம் அடைந்து
அனுமதி இன்றித்
தொடுவோர் அங்கம்
அறுத்துப் பொறுத்தது
போதுமென்று புகட்டு

கொடுவார் கொடுமை
கொடுப்பார் கொடுவாள்
கொண்டு குறியறு
தொடைகள் நடுங்கி
மண்டியிட்டு மடிவார்
மண்ணில் மறைவார்

மோகம் பிடித்தவர்
முகத்தினில் உமிழ்ந்து
முகவாய் பெயர்த்திட
முட்டியை உயர்த்து
மேய்ந்திடப் பெண்கள்
மேய்ச்சல் தரையல்ல

எரிதழல் என்றுணர்த்தி
பறித்து எறிந்திடத்
தோட்டப் பூவல்ல
காட்டுமுள்ளெனக்
கயவருக்குக்காட்டு
முரட்டுப் பசுவென்று

வெட்டி வீழ்த்திடக்
குட்டிக்குட்டி ஆடுகளல்ல
எட்டடி வேங்கைகளென
விரட்டியே தாக்கிடு
வேலு நாச்சி வம்சமென
வீராவேசம் கொண்டு

கெட்டவர் துட்டம்
துணிந்து அடக்கு
துட்டர் திட்டம்
துரும்பாய் மடக்கு
உனக்கு வேலியே
நீதானே பெண்ணே

வேடதாரிகள் விழிக்குமுன்
வன்புணர் வாதிகளுக்கு
வாழ்நாள் பாடம்நடத்து
வாழ்க்கை சேதாரமாகட்டும்
மாசறு பிறவியே
நாசமறு நாயகியே

விழித்தெழு கண்ணே
காதகர் முன்னே
கவனமாய்க் கையாண்டு
கவசமாகிடு பெண்ணே
துற்பிரயோகிகள்
துடைத்தெறி கதறியே ஓடட்டும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மஞ்சரி கவிதைகள்

கவிதை - அலெக்ஸ் பரந்தாமன் -



## எனக்காக ஆறுதல்!

தூக்கம் வரா
ஒவ்வொரு இரவுப் பொழுதுகளிலும்
உறக்கம் கொள்கிறேன்
அகம் விழித்திருந்து...
நிம்மதியாக
என் எழுத்துகளுக்குள்.

திரும்பத் திரும்ப
நிலமதில் மேயும்
கால்நடைகள்போல்...
எனது எழுத்துகளுக்குள் இறங்கி
உலா வருவதில்தான்
எத்தனை உவகை மனதுக்குள்.

அனுபவப் பதிவுகளை வரிகளாக்கி...
அச்சில் பதித்த சொற்கோர்வைகள்
அவை!

சுவை...
ஒளி...
ஊறு...
ஓசை...
நாற்றமெனும்
ஐம்புலன்களின் வெளிப்பாடாய்
வெண்தாள்களில் பரவியிருக்கும்
என் எழுத்துகள்தான்
இறுதிவரை ஆறுதல்
எந்தன் இனசனத்தைத் தவிர!

●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாவையுந்தன் பசுமையினில் பசிமறந்து போனேனடி!



தங்கத்தில் உருக்கி வார்த்த
கட்டழகு சிலையிதுவோ...!
சந்தனத்தில் செதுக்கி வெச்ச
சீரான சிற்பமிதோ...!

வட்டமுழு மதிமுகத்தில்
பதித்தஇரு ரெத்தினமோ
உன் விழிகள்...
பார்ப்பவரை வீழ்த்திவிடும்
பாரிஜாத மலரதுவோ...!

பாவையுந்தன் பசுமையினில்
பசிமறந்து போனேனடி– உந்தன்
பல்லழகில் மதிமயங்கி
பரிதவித்து நின்றேனடி.

கார்குழலைத் தழுவிநிற்கும்
குண்டுமல்லி நானாகி– உன்
கன்னமதை வருடிவிடும்
சரமாக மாட்டேனா...?

கரங்களிலே மின்னுகின்ற
கைவளையில் பலமணிகள்
கரங்களிலேயே முத்தமிடும்
கல்மணியாய் மாறேனா...?

பாதிநிலா நெத்தியிலே
பதிச்சிவெச்ச பொட்டதனில்
ஒட்டியுள்ள செம்பொடியாய்
உருமாற மாட்டேனா...?

ஆரணங்கே உன்னருகில்
அமர்ந்திருந்து குலாவிடவே
அடியேனின் அடிமனசும்
துடிதுடித்து தவிக்குதடி.

●

பன்னூலாசிரியர்
கௌரவ கலாநிதி
செய்னுலாப்தீன் நஸீரா
ஏறாவூர், இலங்கை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மகிழ்ச்சி




செல்வம் தேடிச்
செல்லும் பாதம்

செவ்வை வழியில்
சேர்த்திட வேண்டும்

கொள்ளைப் பொருட்கள்
கோடி கிடைத்தும்

குடிக்குத் தேவை
குதூகலம் ஒன்றே

ஈன உழைப்பில்
ஈட்டிடும் வளங்கள்

ஈசன் பார்வையில்
இழிவின் நிலையே

கோண நெஞ்சம்
காணும் பண்டம்

காலம் முழுதும்
காயம் கொள்ளும்
நேராய் உழைத்து
நன்னிலை காணின்

ஆறா மகிழ்ச்சி
ஆறாய் ஓடும்

ஆயிரம் உயிர்கள்
உன்னால் வாழும்

தேறிய பணத்தில்
தருமம் ஈதால்

தோன்றும் சுகமே
தொலையா இன்பமே

நேரிய குணமே
நற்பேர் வெல்லும்

நாறிடும் உடலை
நறுமணம் ஆக்கிடும்.

●


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சகதிகளில் மலரும் சாமந்திப் பூக்கள்

சிட்டுக் குருவிகளின்
சின்ன விழிப்பார்வைகள்
சிந்திக்க ஆயிரம்
கற்பனைகள் ...!
பற்றைக் காடுகளுக்குள்
பறந்து மகிழும்
பட்டாம் பூச்சிகள்!

வரலாற்றுச் சிதைவுகள்
விட்டுச்சென்ற
மீதிகளுக்குள் வித்திட்ட
பட்டை தீட்டப்படாத
முத்துப் பவளங்கள்!
சரித்திரம் காணும்
சகாயமில்லா ஜீவன்கள்!

சாலைகளில் விடப்பட்ட
சேதாரங்களின் மீதிகள்
சேரிகளின் சேர்க்கைகளில்
உருவான ஆதாரங்கள்!
சேற்றிலும் வேர்விட்டு
செழித்தெழுந்த செந்தாமரைகள்!

விந்தையான உலகினில்
விடையறியா விடைதேடும்
வினா வாக்கியங்கள் !
தாய்மையுணர்வுகளைத்
தட்டியெழுப்பும்
தங்கத் தாரகைகள்!
சொர்க்கமே உலகென
சொகுசு மெத்தையில்
சொந்தங்களோடுறங்கி
சொப்பனம் காணும்
சொற்ப நிமிட உலகில்
சொட்டும் தளராமலர்கள்
சாதனைச் செல்வங்கள்!

கிளிஞ்சல்கள் கிழிசல்களோடு
கிட்டிப்புல்லும் பம்பரமும்
விளையாடிய பெருமிதங்கள்!
வெறுமை உலகின்
வேயல் கூரை வேலிகள்!
யாசக பாத்திரங்கள்... இவை
யார் செய்த பாவங்கள்...!

சந்திகளில் மலரும்
சாமந்திப்பூக்கள்
கிழிசல்களும் இங்கு
கண்களாய் விரிந்திட - என்
கண்களைத் திறந்து
சிந்தனையைத் தூண்டிய
சில்லறைச் சேகரங்கள்...!

தூண்களே சிதறுண்ட
தூசுப்படிமங்களில்
தட்டியெடுக்கப்பட்ட
தங்கத்தகடுகள்...!
தட்டியெடுப்பதும்
சுட்டு வார்ப்பதும்
காலத்தின் கோலங்கள்!!

●


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

- முபீதா அமீன் -
அக்கரைப்பற்று.

# பெண்ணைத் தாங்கும் இதயம் வேண்டும்

பொன்னை விடவும்
பெறுமதியவள்
கண்மணியாய்
கரு தாங்குபவள்.

பெண்ணவள்
பேரருள்.
தவமிருந்து
கிடைக்கும் வரமவள்.

அண்டத்தின்
அகலொளியவள்.
சீவியத்தின்
சீதேவியவள்.

வனிதையவளை
வதைக்காதே.
சிந்தனைகளையும்
சிதைக்காதே.

பெருந்துயரையும்
தாங்குமவளை
பெருந்தன்மையாய்
காத்திடுவாயே.

பொன்னாடை போர்த்த
வேண்டாமே.
பெண்ணுரிமைக்கு
இடமளித்து
அழகு பாரு ஆணினமே.

வாழ்க்கைப் போராளியவளை
வாஞ்சையுடன் வாழ விடு.
கண்ணியத்தோடு
காதலைக் கொடு.

மாற்றங்கள் வேண்டி
போராடும் பெண்மைக்கு
உன் சீற்றம் அவளை
பொசுக்காதிருக்கட்டும்.

போற்றாது விட்டாலும்
தூற்றிச் செல்லாதே.

உணர்வுகளுக்குள்
உறைந்திருப்பவளை
உண்மை உருவமாய்
உற்று நோக்கி
உயிர் கொடுத்து
உணர்ந்து நட.

பெண்ணவள் புஷ்பம்.
நசுக்கி விடாதே
அதனால் பெரும் நஷ்டம்.
இதயத்தை தாக்கிடாமல்
தாங்கிடு
இதனால் உனக்கில்லை
எதுவித கஷ்டம்.
இது தான் அவள்
மனதினது இஷ்டம்.

ஆண்மைக்கு பெண்மையை
அடிமை ஆக்காதே.
அகத்தை ஆளும்
அரசி அவளே.
அன்பும் காட்ட
மறந்து விடாதே.

காமப் பார்வையால்
காவு கொள்ளாதே.
வரதட்சணை கேட்டு
வாட்டி வதைக்காதே.
இரக்கமற்ற முறையில்
இதயத்தையும் பிழியாதே.

இருக்கும் காலம் வரை
பெண்ணைத் தாங்கும்
இதயம் மட்டும் போதுமே.
இனிதே எ(இல்)(ல)லாமும்
உள்ளமும் நலம் பெறுமே.

●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- வெலிகம ரிம்ஸா முஹம்மத் -

# தேயிலை மலரும் மலைகள்



மலைத் தொடர்களின்
மடியில் விரிந்திருக்கும்
தேயிலைச் செடியோ
வகிடு பிரித்து
வடிவாய் மனம் பரப்பும்!

வரி வரியாய்
கோடுகள் கீறிய
பசுமை ரேகைகள்
அழகிய ஓவியமாய்
உள்ளம் கவரும்!

இந்த இடைவெளிக்குள்
சுகமாக நடக்கையில்
வீசுகின்ற இளங்காற்று
உலகத்தையே மறக்கடிக்கும்!

அந்தி வானச் சூரியனோ
செம்மஞ்சள் நிறத்தில்
என்னை மகிழ்வித்து
புன்னகைக்கும்!

பறவைகளின் தாலாட்டு,
புல்லின் வாசனை,
மலர்களின் அசைவு,
நீரோடைகளின் சலசலப்பு
எல்லாம் ஒன்று சேர்ந்து
என்னை சீராகத் தாலாட்டும்!

அடர்ந்த மேகக் கூந்தலின்
பனித்துளிகள்
என்னை சொக்க வைத்து
அழகாக மயக்கும்!!!

●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரிகையில்...

பிரிந்து விட்டேன் உன்னை
அது நிகழ்ந்தே இருக்கக்கூடாது -
விதி என்றாலும்
ஏற்கத்தான் முடியவில்லை.



இருப்புக்கள் இதமாய்
நேருக்கு நேரே
கருத்துப் பரிமாறல்கள்
ஏங்கத்தான் செய்கின்றன.

பிரிவென்றான கணங்களில்
உதடுகள் பெயரை உச்சரிக்கும்
வார்த்தைகள் தடுமாறும்
நீ இல்லாத கணங்களில்...

என்னுடனே இருப்பதான மனநிலை
தினமும் வாழவைத்தாலும்
உணர்வுகள் கட்டுப்பாடுகளை
இழக்கின்றன
நீ இல்லாத நிஜங்களில்...

பேருக்காக உண்டாலும்
உண்மைகள் உதைத்தாலும்
உன்னதங்கள் உணர்ந்தாலும்
மனம் பேதலிக்கத்தான் செய்கின்றது.

மெலிந்த உன்னுடலும்
முடியின் நீள்மையும்
வலிகளின் வேதனையும்
கண்ணீர் வடியச்செய்கின்றன.

பிரிவுகள் நீள்கையில்
இருண்மையும் வளைகிறது
கேள்வியாக...
யதார்த்தம் தடுமாறுகிறது
நீ இல்லாத முடிவிலியில்...

பலரும் தேற்ற முயன்றாலும்
அவரவருக்கு வருகின்ற
போதுதான் புரியும்
தலையிடியும் காய்ச்சலும்
என்னைப் போல் மகனைப்
பிரிகையில்...

●


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- நழீம் ஹனீபா, ஒலுவில். -

# காலம்




காலம் மனித
வாழ்வில் அங்கம்

அது எவருக்கும்
காத்திருக்காமல் நகரும்

வாழ்வு நெடுகிலும்
காலம் பிரதிபலிக்கும்

சிறப்பாக எதிர்
கொண்டால் வெற்றி

அலட்சியம் தொடர்ந்தால்
தேடிவரும் தோல்வி

விரையும் நேரங்களில்
கரைகிறது காலம்

நேரத்தைப் பேணி
காலத்தை வென்றிடு

மனதில் உறுதியை
ஆழமாய்ப் பதித்திடு

மாற்றங்கள் கடந்து
வாழ்வில் உயர்ந்திடு

துயரங்கள் கண்டு
என்றும் அஞ்சாதே

வாழ்வில் வெற்றிக்காக
கடுமையாகப் போராடு

முயற்சிகள் தொடர்ந்தால்
விடிவுகாலம் பிறக்கும்

நேரத்தைப் போற்றிடு
காலத்தை வென்றிடு

●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Poem - by Rukaiya Razeen -

# For that I'm sorry!!!



I cower in the corner, hands to my ears,
Twisting, crawling, torturing are my fears.

I flinch as I hear the bullets ricochet,
But I guess I'm used to it now, I'm unfazed.

One day I hope this'll all be over,
From this drunk cruelty we'll all be sober.

They delight, laugh, and heartily they dine,
While woefully we starve – here in Palestine.

I stare at my hands, bruised and calloused,
While they dance in ballgowns in their ornate palace.

My eyes wander, landing on the rotting bodies,
It should have been me, not them, and for that I'm sorry.

My head spins and my heart races,
Bleeding out in a thousand puddles, like their damned military bases.

I scream and thrash in my minds prison,
My veins pulsate, like my soul has risen.

I choke on my words as my bones ignite,
I am afraid I have finally lost all my fight.

●


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதற்காக நான் வருந்துகிறேன்!!!

நான் மூலையில் பதுங்கிக்
கொண்டிருக்கிறேன். கைகளை என்
காதுகளுக்குள் வைக்கிறேன்,
சுழல்வது, ஊர்ந்துசெல்வது,
சித்திரைவதை செய்வது என் பயம்.

தோட்டாக்கள் வெடிப்பதைக்
கேட்கும்போது நான் நடுங்குகிறேன்,

ஆனால் இப்போது நான் அதற்குப்
பழகிவிட்டேன் என்று நினைக்கிறேன்,
நான் சலிப்படையவில்லை.

ஒரு நாள் இது எல்லாம் முடிந்துவிடும்
என்று நம்புகிறேன்,

இந்த குடிபோதையில் இருந்த
கொடுமையிலிருந்து நாம் அனைவரும்
நிதானமாக இருப்போம்.

அவர்கள் மகிழ்ச்சியடைகிறார்கள்,
சிரிக்கிறார்கள், மனதார
சாப்பிடுகிறார்கள்,

நாங்கள் மிகவும் பட்டினி கிடக்கும்போது-
இங்கே பாலஸ்தீனத்தில்.

நான் என் கைளைப் பார்க்கிறேன்,
காயப்பட்டு, கூச்ச சுபாவத்துடன்,

அவர்கள் தங்கள் அலங்கரிக்கப்பட்ட
அரண்மனையில் பால்கவுன்களில்
நடனமாடுகிறார்கள்.

என் கண்கள் அலைந்து திரிகின்றன,
அழுகும் உடல்களில் இறங்குகின்றன,

அது நான்தான், அவர்கள் அல்ல,
அதற்காக நான் வருந்துகிறேன்.

என் தலை சுழல்கிறது, என் இதயம்
துடிக்கிறது,

அவர்களின் சபிக்கப்பட்ட இராணுவ
தளங்களைப் போல ஆயிரம் குட்டைகளில்
இரத்தம் வெளியேறுகிறது.

என் மனதில் நான் அலறிக்கொண்டு
சிறையில் துடிக்கிறேன்,

என் ஆன்மா எழுந்ததுபோல் என்
நரம்புகள் துடிக்கின்றன.

என் எலும்புகள் தீப்பிடிக்கும்போது என்
வார்த்தைகளால் மூச்சுத் திணறுகிறேன்,

நான் இறுதியாக என் எல்லா
போராட்டங்களிலும் தோற்றுவிட்டேன்
என்று பயப்படுகிறேன்.

**- ருகையா ரஸீன் -**

கவிஞரும் எழுத்தாளரும் "கோகிலம்" இலக்கிய இதழின் ஆசிரியருமான எம். சீ. ஏ. பரித் அவர்களின் பேத்தியும் UKஇல் வசிக்கும் Dr. ரஸீன் அவர்களின் மகளுமான ருகையா ரஸீன் ஆங்கில மொழியில் எழுதியனுப்பிய கவிதையை தமிழில் மொழி பெயர்த்துள்ளார் கவிஞர் எம்.சீ.ஏ. பரித் அவர்கள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ்

கண்ணே கலைமானேயென
கடைசிக் கவிதை தந்த
கண்ணதாசன் தமிழ்
இன்னும் மணக்கிறது.

கண்ணுக்கு மையழகென
கவிதைதந்த வைரமுத்தான்
சொல்லும், தமிழ் இனிக்கிறது.

நிலவு ஒரு பெண்ணாகியென
கனவு, உலகப் பாடல் தந்த
வாலிபக் கவிஞர் வாலியின்
தமிழ் கேட்க இன்னும்
ஆசையடா.

●





# மரங்கள்

வேப்பமர நிழலிலும்
மாமர நிழலிலும்
கடல் காற்றும் ஊர்க் காற்றும்
கொண்ட காதல் தென்றலாய் வீச
சாக்குக் கட்டிலில் படுத்துக்கொண்டு
பத்திரிகை வாசிக்க
வேப்ப மரத்தையும் மா மரத்தையும்
ஊருக்குள் தேடி
வாப்பா ஏமாந்து போனார்.

●

அ. ற. கலீலுர் றகுமான்
(தபாலதிபர்)
காரியப்பர் வீதி,
மருதமுனை-05.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உங்களிடமிருந்து...




கிடைக்கப் பெற்றேன்!

வெண்ணிலா 17வது இதழுக்கான தாமதமான குறிப்பு வரும்போது 18வது இதழும் வந்து சேர்ந்தது.

முதலில் நேர்த்தியான அதன் கட்டுமானமும் தெளிவான அச்சும் கொண்டு 102 பக்கங்களுடன் வந்திருக்கும் அழகை இரசித்தேன்.

அட்டைப் படத்தில் முர்ஷிதா ஷிரீன் என்ற விவசாயப் போதனாசிரியை, இலக்கிய ஆர்வலர் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளார்.

மருத்துவக் கட்டுரையை டாக்டரும் கவிஞருமான ஜலீலா முஸம்மில் எழுதியுள்ளார். இவ்விதழில் ஏ.எம். கஸ்புள்ளாவின் புதிய கதைத் தொடர் ஆரம்பமாகியிருக்கிறது.

நூல் நயக் குறிப்புகளாக பாத்திமா சில்மியாவின் இப்படிக்கு என் இதயம் பற்றி ரிம்ஸா முகம்மத், கவிஞர் அமீர் அலியின் சுவடுகளின் நோக்கு பற்றி எம்.எச்.ஏ.எம். இஸ்மாயில் ஆகியோரின் குறிப்புகளும் மற்றும் கவிஞர் மருதூர் ஜமால்தீனின் அகந்தை அழிந்தது என்ற உருவகக் கதைகள் நூல், எம்மெஸ்ஸெம் ஜமீலின் இன்னொரு மனசு - கவிதை நூல்கள் பற்றிய குறிப்புகளும் இடம் பெற்றுள்ளன.

அபூ அப்ராஸ் :.பியாத், இமையி, கிண்ணியா சபீனா, செம்மைத் துளியான், ஏ.எம்.ஏ. றஸூல் ஆகியோரின் சிறு கதைகளும் அஷ்ரபா நூர்தீன், ஏ.ஆர்.ஏ சத்தார் எழுதும் மருதமுனை வரலாறும் வாழ்வியலும் அங்கம் - 1 ஆகிய கட்டுரைகளும் இவ்விதழில் அடங்கியுள்ளன.

ஏ.ஆர். அப்துல் ரஸூல், மு.மு.மு. பாஸில், மருதூர் ஜமால்தீன், ரிம்ஸா முகம்மத், கிண்ணியா சபீனா, வேலணையூர் ரஜிந்தன், ஏ. சீ. எம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பஸீயா, ஆய்ஷ், சுமை, ரிஹானா ஹரீஸ்கான், முகம்மது ரியால், மக்கொனையூராள், ஜவ்ஸன் அகமட், நளீம் ஹனீபா, ஏயாறே, எச்.எப்.ரிஸ்னா, நிஸ்வா ஸலாம், மூதூர் ரிஸ்வின், செல்வத் தமிழ், சம்மாந்துறை மசூறா மற்றும் மாவனல்லை மன்ஸூரின் மொழி பெயர்ப்புக் கவிதைகள் என்று நிறைந்து வழிகிறது இதழ்.

குறிப்பிட்ட நபர்களின் படைப்புகள் எல்லா இதழ்களிலும் இடம் பெறுவதை அவதானிக்க முடிகிறது அதில் தப்பில்லை என்ற போதும் லேசான ஓர் உறுத்தல் வாசகனுக்கு ஏற்படவே செய்யும். இதே நபர்களின் இரண்டு ஆக்கங்களும் தொடர்ச்சியாக இடம்பெறுவதன் மூலம் சஞ்சிகைக்கு வேறு யாரும் எழுதுவதில்லையோ என்ற எண்ணத்தை ஏற்படுத்தும்.

சஞ்சிகை நடத்திய அனுபவத்தில் சொல்வதானால் சஞ்சிகைகளுக்கான நல்ல ஆக்கங்களைத் தெரிவு செய்வதும் நல்ல படைப்பாளிகளின் ஆக்கங்களையும் இணைத்துக் கொள்வதும் அவ்வாறான படைப்பாளிகளிடம் ஆக்கங்களைக் கேட்டுப் பெறுவதும் சஞ்சிகை ஆசிரியர் கட்டாயம் பின்பற்ற வேண்டியது அவசியம்.

நண்பர் கப்பார் கவனத்துக்கு விடுகிறேன்.

**- பன்னூலாசிரியர்**

**அஷ்ரப் சிஹாப்தீன்.**

கரமேறும் வெண்ணிலா
கடலாழம் உன்னிலா
வரமாகும் உன்னுலா
வைரமும் வண்ணமும்
உரமான தேனடா!
ஆவணப் பூவடா!
அரவணைப்பில் தாயடா!
ஆண் தாயடா!
சிறப்பு வாழ்த்துக்கள்.

**- கவிஞர் ரிஸ்வின் காதர்.**

வெண்ணிலா காலாண்டிதழ்கள் வெளிவந்தவுடன் ஊடகவியலாளர் நிஸா இஸ்மாயில் அவர்கள் அது பற்றிய அறிமுக விமர்சனம் ஒன்றை தேசிய பத்திரிகையான தமிழன் வார வெளியீடு - தமிழ் முரசு இணைப்பில் பிரசுரிப்பது வழக்கம். அவ்வாறே சென்ற வெண்ணிலா இதழ்: 18 பற்றிய விமர்சனமும் நிறைவாக இருந்தது! நிஸா இஸ்மாயில் அவர்களுக்கு வாழ்த்துக்கள்!

இலக்கியவாதிகளை அரவணைத்துக் கொள்வது வெண்ணிலா ஆசிரியரின் கைவந்த கலை. அவரின் பணி தொடரவும் வாழ்த்துக்கள்!

**- எழுத்தாளர் இப்றாஹீம் ஏ. சத்தார்.**

வெண்ணிலா காலாண்டுச் சஞ்சிகை தொடர்ந்து வெளிவருவது கண்டு மட்டில்லா மகிழ்ச்சி. பாராட்டுகள். வாழ்த்துகள்.

**- அல்-ஹாஜ் எச். எல். நஜிமுத்தீன்**
**ஓய்வுநிலை முகாமையாளர்,**
**இலங்கை வங்கி.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெண்ணிலா

காலாண்டுச் சஞ்சிகை

# சந்தா விபரம்

தனி இதழ்: ரூபா. 150 - தபாற் செலவு: ரூபா. 100 மொத்தம் ரூபா. 250 அனுப்பி தனி இதழைப் பெற்றுக்கொள்ளலாம்.

## ஆண்டுச் சந்தா ரூபா. 1000

வங்கியில் பணத்தை வைப்பிலிட்ட பின் வைப்புச் சீட்டின் நிழற் பிரதியையும் உங்களது தபால் முகவரியையும் **vennilakavithaimanjari@gmail.com** என்ற மின்னஞ்சலுக்கு அல்லது **0776968671** என்ற வட்ஸ்அப் இலக்கத்திற்கு அனுப்பிவைக்கவும்.

தொடர்ந்து நான்கு **வெண்ணிலா** காலாண்டுச் சஞ்சிகைகள் தபால் மூலம் உங்கள் வீடு வந்து சேரும்.

**வங்கிக் கணக்கு விபரம்:**

எஸ். ஏ. அப்துல் கப்பார்
கணக்கிலக்கம்: **6106068**
இலங்கை வங்கி,
கல்முனை.

S. A. ABDUL GAFFAR
A/C No. **6106068**
Bank of Ceylon,
Kalmunai.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




இச் சஞ்சிகை இல. 378/2, ஸம் ஸம் வீதி, மருதமுனை-03, டிஜிட்டல் இன்பர்மேசஷன் சிஸ்டம் (DIS) நிறுவனத்தினரால் பிரதான வீதி, மருதமுனை Jesa Grafixஇல் அச்சிட்டு ஒக்டோபர் 2025இல் வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org